
# 1989 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 15

**18.01.1989** பாபா வரவில்லை!

**07.11.1989** மூன்று உறவுகளின் சுலபமான மற்றும் உயர்ந்த பாலனை!

**11.11.1989** தெய்வீகம் சங்கமயுக பிராமணர்களின் அலங்காரம்!

**15.11.1989** உண்மையான மனதில் பாபா திருப்தியாக இருக்கிறார்!

**19.11.1989** உடல், மனம், செல்வம் மற்றும் ஞானத்தின் பாக்கியம்!

**23.11.1989** வரமளிக்கும் வள்ளலை திருப்தி படுத்துவதற்கான எளிதான விதி!

**27.11.1989** சுபபாவனை மற்றும் சுபகாமனாவின் (ஆசை) சூட்சும சேவை!

**01.12.1989** சுயமரியாதை மூலம் தான் மரியாதை கிடைக்கிறது!

**05.12.1989** சதா மகிழ்ச்சியாக இருப்பது எப்படி?

**09.12.1989** யோகயுக்த், யுக்தியுக்த் ஆவதற்கான யுக்தி!

**13.12.1989** தெய்வீக பிராமண பிறவியின் பாக்கியத்தின் ரேகைகள்!

**17.12.1989** சதா சக்திசாலியாக ஆவது எப்படி?

**21.12.1989** திரிதேவ் படைப்பவர் மூலம் வரதானங்களின் பிராப்தி!

**25.12.1989** பெரிய நாள் (கிறிஸ்துமஸ்) மகா வாக்கியம்!

**29.12.1989** படிப்பின் சாரம் -வருவது மற்றும் போவது!

**31.12.1989** புதிய வருடத்திற்கான மகா வாக்கியங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 07.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மூன்று உறவுகளின் சுலபமான மற்றும் உயர்ந்த பாலனை!

இன்று உலகிற்கே அன்பிற்குரிய பாப்தாதா நாலாபுறமுமுள்ள விசேஷமான தந்தை மேல் அன்புடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையின் அன்பு மற்றும் குழந்தைகளின் அன்பு ஒன்று இன்னொன்றை விட அதிகமாகத்தான் இருக்கிறது. அன்பு மனதையும், உடலையும் ஆன்மீக இறக்கை கட்டி அருகில் கொண்டு வருகிறது. அன்பு என்பது அவ்வளவு ஆன்மீகக் கவர்ச்சியுடையது. குழந்தைகளை தந்தையின் பக்கம் கவர்ந்து சந்திக்க வைப்பதற்கு பொறுப்பாகி விடுகிறது. மனதால் சந்திப்பதானாலும் சரி, உடலால் சந்திப்பதானாலும் சரி இரண்டு சந்திப்பின் அனுபவமும் அன்பின் ஈர்ப்பின் காரணத்தினால் தான் ஏற்படுகிறது. ஆன்மீக பரமாத்ம அன்புதான் பிராமணர்கள் ஆகிய உங்களுக்கு தெய்வீக ஜென்மம் கொடுத்தது. இன்று இப்பொழுது கூட ஆன்மீக அன்பின் சக்தி நிறைந்த ஒளிக்கிரணங்கள் மூலமாக நாலாபுறமுள்ள பிராமணக் குழந்தைகளின் அன்பு நிறைந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாலா புறமுமுள்ள அனேகக் குழந்தைகளின் மனதின் பாட்டு மற்றும் மனதின் அன்பை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் அருகில் இருப்பவர்களுக்கும், தூரத்தில் இருந்து மனதால் அருகில் இருப்பவர்களுக்கும் அன்பின் பிரதிபலனாக வரதானம் கொடுக்கிறார்.

எப்பொழுதும் குஷி நிறைந்தவர்கள் ஆகுக! குஷி நிறைந்த அதிர்ஷ்டம் உள்ளவர்கள் ஆகுக! எப்பொழுதும் குஷி என்ற டானிக் மூலமாக ஆரோக்கியமானவர்கள் ஆகுக! எப்பொழுதும் குஷி என்ற பொக்கிஷத்தால் நிரம்பியவர்கள் ஆகுக!

ஆன்மீக அன்பு தெய்வீக பிறவி கொடுத்தது. இப்பொழுது வரமளிக்கும் வள்ளல் பாப்தாதாவின் வரதானங்களின் மூலமாக தெய்வீக பாலனை (வளர்ப்பு) நடந்து கொண்டிருக்கிறது. பாலனை அனைவருக்கும் ஒருவர் மூலமாக ஒரே நேரத்தில் ஒரே மாதிரி கிடைக்கிறது ஆனால் கிடைத்த பாலனையைத் தாரணை செய்வதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறது. பார்க்கப்போனால் விசேஷமாக மூன்று உறவுகளின் பாலனை மிகவும் உயர்ந்ததும், எளிதானதும் தான். பாப்தாதா மூலமாக ஆஸ்தி கிடைக்கிறது, ஆஸ்தியின் நினைவின் மூலமாக பாலனை ஆகிறது இதில் எந்தக் கஷ்டமும் இல்லை. ஆசிரியர் மூலமாக இரண்டு வார்த்தையின் படிப்பின் பாலனையிலும் ஒரு கஷ்டமும் இல்லை. சத்குரு மூலமாக வரதானங்கள் கிடைப்பதினால் பாலனை, இதிலேயும் எந்த ஒரு கஷ்டமும் இல்லை ஆனால் அனேகக் குழந்தைகளுக்கு, தாரணை செய்வதில் பலஹீனத்தின் காரணமாக பல நேரங்களில் சுலபமானதைக் கடினமானதாக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. கஷ்டப்படும் சம்ஸ்காரம், சுலபமாக அனுபவம் செய்ய விடாமல் செய்து விடுகிறது மற்றும் முடியாத காரணத்தினால், தாரணையின் பலஹீனத்தின் காரணமாக மற்ற விஷயங்களின் வசமாகி விடுகிறார்கள். அப்படி வசப்பட்டக் குழந்தைகளின் வாழ்க்கை லீலையைப் பார்த்து பாப்தாதாவிற்கு அந்த மாதிரிக் குழந்தைகள் மேல் இரக்கம் வருகிறது. ஏனென்றால் எந்த ஒரு குழந்தையின் குறையையும் பலஹீனத்தையும் பாப்தாதாவால் பார்க்க முடியாது, இது தான் தந்தையின் ஆன்மீக அன்பின் அடையாளம் ஆகும். தன்னுடைய குடும்பத்தின் குறை தன்னுடைய குறையாகிறது. எனவே பாப்தாதாவிற்கு வெறுப்பு இல்லை இரக்கம் தான் வருகிறது. எப்போதாவது பாப்தாதா குழந்தைகளின் ஆரம்பம் முதல் இப்போது வரையுள்ள ஜாதகத்தைப் பார்க்கிறார். பல குழந்தைகளின் ஜாதகத்தைப் பார்த்து இரக்கம் தான் வருகிறது மற்றும் சில குழந்தைகளின் ஜாதகம் ஆறுதல் தருவதாக இருக்கிறது. ஆரம்பம் முதல் இப்பொழுது வரை யுள்ள ஜாதகத்தைச் சோதனை செய்யுங்கள். மூன்று உறவுகளின் பாலனையின் தாரணை எளிதாக, உயர்ந்ததாக இருக்கிறதா என்று உங்களை நீங்களே பார்த்து தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால் எளிதாக நடந்து கொள்வது இரண்டுவிதமாக இருக்கிறது. ஒன்று வரதானங்கள் மூலமாக எளிதான வாழ்க்கை, இன்னொன்று பொறுப்பில்லாத கவனமில்லாதது, இப்படி இருப்பதும் சுலபமானது

தான். வரதானங்களால் மற்றும் ஆன்மீகப் பாலனையில் எளிதாக நடந்து கொள்பவர்கள் கவனமாக இருப்பார்கள். கவனமில்லாமல் இருக்க மாட்டார்கள் ஆனால் அட்டென்ஷனில் டென்ஷன் இருக்காது. அந்த மாதிரி கவனமாக இருக்கும் ஆத்மாக்களுக்கு நேரம், சாதனம் மற்றும் சூழ்நிலைக்கேற்றவாறு பிராமண குடும்பத்தின் துணை மற்றும் தந்தையின் விசேஷ உதவி சகயோகம் கொடுக்கிறது. எனவே அனைத்தும் சகஜமாக அனுபவம் ஆகிறது. இந்த அனைத்து விஷயங். களும் என்னுடைய சகயோகிகளா என்று சோதனை செய்யுங்கள். இந்த அனைத்து விஷயங்களின் சகயோகம் தான் சகயோகியாக்கி வைத்து விடுகிறது. இல்லையென்றால் எப்போதாவது சிறிய சூழ்நிலை, சாதனம், நேரம், உடன் இருப்பவர்கள் ஆகியவை இருந்தும் சிறியவைகள் ஆனால் சிறிய எறும்பு கூட யானையை மயக்கமடைய விடுகிறது. அதாவது மயக்கமடையச் செய்வது என்றால் வரதானங்களினால் எளிய பாலனையின் உயர்ந்த நிலையிலிருந்து கீழே தள்ளி விடுகிறது. கட்டாயம் மற்றும் கஷ்டம் இந்த இரண்டும் மயக்கமடைவதின் அடையாளம் ஆகும். எனவே இந்த விதி மூலமாக ஜாதகத்தைச் சோதனை செய்யுங்கள். புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று. நல்லது.

எப்போதும் மூன்று உறவுகளின் பாலனையில் வளரும், எப்பொழுதும் திருப்திமணியாகி திருப்தியாக இருக்கும் மற்றும் திருப்தியாக இருப்பதை வெளிப்படுத்தும், எப்பொழுதும் வேகமான முயற்சியாளராகி தன்னை முதல் பிறவியில் முதல் அதிகாரத்தை அடையச் செய்யும் அந்த மாதிரி அதிர்ஷ்டசாலியான குழந்தை களுக்கு வரமளிக்கும் வள்ளல் தந்தையின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** அனைவரும் வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறீர்கள். மிகவும் தொலைவிலிருந்து பாப்தாதா வருகிறார். வருவதில் கஷ்டம் எங்களுக்குத்தான் இருக்கிறது என்று நீங்கள் கூறுவீர்கள். எல்லைக்கப் பாற்பட்ட நிலையிலிருக்கும் பாப்தாதாவிற்கு எல்லைக்குட்பட்டு பிரவேசம் ஆவது கூட வித்தியாசமான விஷயம் ஆகி விடுகிறது. இருந்தாலும் கடனாக எடுக்க வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் டிக்கெட் எடுக்கிறீர்கள், பாப்தாதா லோன் எடுக்கிறார். அனைவருக்கும் வரதானம் கிடைத்ததா? 7-8

பக்கங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஏதாவது ஒன்று இருக்கிறது. எனவே அனைத்து மண்டலத்தினரும் இங்கு இருக்கிறார்கள். பாரத தேசத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள், வெளிநாட்டினரும் இருக்கிறார்கள். பன்னாட்டுக் குழு ஆகி விட்டது இல்லையா? நல்லது.

தமிழ்நாடு குரூப்: மிகவும் பெரிய குரூப் தமிழ்நாட்டுக் குரூப். தமிழ்நாட்டின் விசேஷம் என்ன? அன்பின் எண்ண அலைகளைப் பிடிக்கும் திறமை இருக்கிறது. தந்தை மேலிருக்கும் அன்பு அழியாத லிப்ட் ஆகி விடுகிறது. ஏணிப்படி விருப்பமா, லிப்ட் விருப்பமா? படியில் ஏறுவது கடினமானது லிப்டில் போவது சுலபமானது. எனவே அன்பில் ஒருபோதும் அலட்சியமாக இருக்காதீர்கள். இல்லையென்றால் லிப்ட் ஜாம் ஆகி விடும். ஏனென்றால் கரண்ட் இல்லையென்றால் லிப்டின் நிலைமை என்னவாகிறது? கரண்ட் இல்லையென்றால் தொடர்பு துண்டிக்கப்படுவதால் சுகத்தின் அனுபவம் வேண்டியது அனுபவம் ஆவதில்லை. எனவே அன்பில் அலட்சியத்தன்மையிருந்தால் தந்தையிடமிருந்து கரண்ட் கிடைக்காது பின்பு லிப்ட் வேலை செய்யாது. அன்பு நன்றாக இருக்கிறது. நல்லதிலும் நல்லது செய்து கொண்டேயிருங்கள். எனவே இந்த லிப்ட் என்ற கிப்ட்டை உடன் கொண்டு செல்ல வேண்டும்.

மைசூர் குரூப்: மைசூரின் விசேஷம் என்ன? மைசூரில் இருக்கும் குழந்தைகளுக்கு சங்கமயுகத்தின் மிகவும் இனிமையான காலத்தின் பழம் பாப்தாதா குழந்தைகளுக்கு கிப்ட்டாகக் கொடுக்கிறார். சீஸனில் (காலம்) கிடைக்கும் பழம் இனிப்பானதாக இருக்கும். சீஸனில் பழுக்காத பழம் எவ்வளவு தான் நல்லதாக இருந்தாலும் சுவையாக இருக்காது. அப்படி மைசூர் குழந்தைகளுக்கு சங்கமயுக சீஸனின் பழம் பிரத்யக்ஷபலன் என்ற பழமாகும். உயர்ந்த காரியங்கள் இப்பொழுது செய்கிறீர்கள், உடனே செய்த காரியத்தின் கைமேல் பலன் கிடைக்கிறது. எனவே நாம் சங்கமயுக சீஸனின் கைமேல் பலன் (பழம்) அடைபவர்கள் மற்றும் அருந்துபவர்கள் என்று தன்னை இந்த போதையின் நினைவில் வைக்க வேண்டும். இருந்த போதிலும் நன்கு வளர்ச்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலும் வளர்ச்சி நன்கு இருக்கிறது.

ஈஸ்டர்ன் ஜோன் குருப்: கிழக்கிலிருந்து எது உதயமாகிறது. சூரியன் உதிக்கிறது இல்லையா? ஈஸ்டர்ன் ஜோனைச் சேர்ந்தவர்களுக்கு பாப்தாதா ஒரு விசேஷமான மலரைத் தருகிறார். அது விசேஷத்தின் ஆதாரத்தில் தரப்படுகிறது -சூரியகாந்தி -இந்த மலர் எப்பொழுதும் சூரியனின் சக்தியினால் மலர்ந்து காணப்படும். முகம் எப்பொழுதும் சூரியனின் பக்கம் இருக்கும் எனவே சூரியகாந்தி என்று அழைக்கப்படுகிறது. மேலும் அதைப் பார்த்தாலும் எப்படி சூரியனின் கிரணங்கள் இருப்பது போல் நாலாபுறமும் அதன் இதழ்கள் கிரணத்திற்குச் சமமாக வட்டமாக இருக்கும். அப்படி நீங்களும் எப்பொழுதும் ஞான சூரியன் பாப்தாதாவின் எதிரில் இருப்பவர்கள், ஒருபோதும் ஞான சூரியனிலிருந்து விலகி தூரம் செல்பவர்கள் அல்ல. எப்பொழுதும் அருகில் மற்றும் எதிரில் இருப்பவர்கள். இதைத்தான் சூரியகாந்தி மலர் என்று கூறுவது. அந்த மாதிரி சூரியகாந்தி பூவிற்குச் சமமாக எப்பொழுதும் ஞான சூரியனின் பிரகாசத்தில் தானும் ஜொலித்து மற்றவர்களையும் ஜொலிப்படையச் செய்வது இது தான் ஈஸ்டர்ன் மண்டலத்தின் விசேஷமாகும். அப்படிப் பார்த்தாலும் ஞான சூரியன் ஈஸ்டர்ன் மண்டலத்திலிருந்து தான் உதயமானார். பிரவேசம் நிகழ்ந்தது அல்லவா? அப்படி ஈஸ்டர்ன் மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் தன்னுடைய இராஜ்யத்தில், பகலில், வெளிச்சத்தில் கொண்டு செல்பவர்கள்.

பனாரஸ் குருப்: பனாரஸின் விசேஷம் என்ன? ஒவ்வொருவரிடமும் ஆன்மீக ரசம் நிரப்புபவர்கள். அனைவருக்கும் ஆன்மீக ரசம் நிரப்புபவர்கள், அனைவருக்கும் பரமாதமா அன்பின் ரசத்தை அனுபவம் செய்விப்பவர்கள், ஏனென்றால் எப்பொழுது தந்தையின் அன்பின் ரசம் நிரம்பி விடுகிறதோ அப்போது மற்ற அனைத்து ரசமும் சுவையின்றி அனுபவம் ஆகிறது ஆத்மாக்களில் பரமாத்மாவின் அன்பின் ரசத்தை நிரப்புபவர்கள். ஏனென்றால் அங்கு பனாரசில் பக்தியின் ரசம் மிகவும் அதிகம் பக்தியின் ரசத்தில் இருப்பவர்களுக்கு பரமாத்மா அன்பின் ரசத்தை அனுபவம் செய்விப்பவர்கள். எப்பொழுதும் எதில் அதிகம் ரசம் இருக்கும்? பனாரஸ் குழந்தைகள் கூறுங்கள். ரசகுல்லாவில், பாருங்கள். பெயரே ரசத்தில் ஆரம்பிக்கிறது. எனவே எப்பொழுதும் ஞானத்தின் ரசகுல்லா அருந்துபவர்கள் மற்றும் அருந்த வைப்பவர்கள்.

எனவே எப்பொழுதும் அமிர்தவேளையில் முதலில் மனதை வாயை ரசகுல்லாவினால் இனிப்பாக்குபவர்கள். மற்றவர்களையும் மனதால், வாயால் இனிமையாக்குபவர்கள். எனவே பனாரசுக்கு இனிப்பு கொடுக்கிறோம்... ரசகுல்லா.

மும்பை குருப்: அனைவரையும் செல்வந்தர் ஆக்குபவர்கள் என்று மும்பைக்கு முதலிலிருந்தே வரதானம் கிடைத்திருக்கிறது. மும்பையைச் சேர்ந்தவர்களின் சிறப்பே தந்தையின் டைட்டிலான ஏழையைப் பணக்காரர் ஆக்குபவர்கள் எனவே மும்பைக் குழந்தைகளுக்கும் ஏழைப்பங்களான், தந்தையின் குழந்தைகள், ஏழைகளைப் பணக்காரர் ஆக்குபவர்கள். எனவே எப்பொழுதும் தானும் பொக்கிஷங்களினால் திரம்பியவர்கள், மேலும் மற்றவர்களையும் நிரம்பியவர்கள் ஆக்குபவர்கள். எனவே "ஏழைப்பங்காளன்" தந்தையின் சகயோகி துணைவர்கள் என்பது விசேஷத்தன்மை. எனவே மும்பைக் குழந்தை களுக்கு டைட்டில் கொடுக்கிறோம், இனிப்பு இல்லை.

குல்லு, மணாலி குருப்: குல்லு மணாலியின் விசேஷம் என்ன? குல்லுவில் தேவதைகளின் மேளா நடக்கும், இந்த மாதிரி வேறு எங்கும் நடப்பதில்லை. எனவே குல்லு மணாலியை தேவதைகளின் சந்திப்பு இடம் என்று கூறப்படுகிறது. அப்படி தேவதைகளின் அர்த்தமே திவ்ய குணமுடையவர்கள். திவ்ய குணங்களின் தாரணையின் நினைவுச்சின்னம் தான் தேவதை ரூபம். தேவதைகளின் அன்பின், சந்திப்பின் அடையாளம் இந்த பூமி எனவே பாப்தாதா அந்த மாதிரி பூமியில் வசிக்கும் குழந்தை களுக்கு விசஷேமாக திவ்ய குணங்களின் பூச்செண்டை பரிசாகத் தருகிறார். இந்த திவ்ய குணங்களின் பூச்செண்டு மூலமாக நாலாபுறமும் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பை செய்து கொண்டேயிருப்பீர்கள். அவர்கள் தேவதைகளின் மேளா கொண்டாடுகிறார்கள், நீங்கள் திவ்ய குணங்கள் என்ற பூச்செண்டு மூலமாக ஆத்மா பரமாத்மாவின் மேளா செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் இன்னும் அதிகமாக மற்றவர்கள் பார்க்கும்படி ஆரவாரமாகச் செய்யுங்கள். தேவதைகளின் மேளா தேவதைகளினுடையதாக இருக்கிறது ஆனால் இந்த மேளா தான் மிக உயர்ந்த மேளா. எனவே திவ்ய குணங்களின் மணம் நிறைந்த

பூச்செண்டின் பரிசை எப்பொழுதும் உங்கள் கூடவே வைத்துக் கொள்ளுங்கள்.

**மீட்டிங்கில் வந்திருப்பவர்களுக்காக:** மீட்டிங்காரர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்? செட்டிங் செய்வதற்காக புரோகிராமின் செட்டிங் மற்றும் பேசுபவர்களின் செட்டிங், சீட்டிங் கொடுத்து செட்டிங் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள். எப்படி பேசுவதற்காக செட் செய்தீர்கள் அல்லது புரோகிராம் தயாரித்தீர்கள் அதேபோல் பேச்சாளர்கள் அல்லது பார்வையாளர்கள் வருபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பேசும் மேடையில் கொஞ்ச நேரம் மட்டும் செட் ஆகாமல், தன்னுடைய உயர்ந்த மன நிலையில் நிரந்தரமாக செட் ஆகி விடுகின்ற மாதிரி இப்பொழுதிலிருந்தே உயர்ந்த வைப்ரேஷன் அவர்களுக்குக் கொடுங்கள். எனவே மீட்டிங்கில் வந்திருப்பவர்களுக்கு பாப்தாதா அழியாத செட்டிங் மெஷின் கிப்ட் ஆகத் தருகிறார். அதன் மூலமாகச் செட் செய்து கொண்டே இருங்கள். இன்றைய காலம் இயந்திரங்களின் யுகம் இல்லையா? மனிதர்கள் மூலமாக செய்யும் எந்தக் காரியம் அதிக நேரம் எடுக்கிறதோ அதை இயந்திரங்கள் மூலமாக சுலபமாகவும் வேகமாக வும் செய்து விடுகின்றன. எனவே இப்பொழுது மிக வேக வேகமாக செட்டிங் ஆகும் அளவிற்கு உங்களுடைய செட்டிங் மெஷினை உபயோகத்தில் கொண்டு வாருங்கள். ஏனென்றால் உங்களுடைய ரம்யமான சுகம் நிறைந்த உலகின் திட்டப்படி அனைவருடைய சீட்டும் செட்டாக வேண்டும் இல்லையா? பிரஜைக்கும் செட் பண்ண வேண்டும். பிரஜையின் பிரஜைக்கும் செட் பண்ண வேண்டும். இராஜா, இராணிகள் செட் ஆகிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இராஜ குடும்பம், செல்வந்தர் குடும்பம், பின்பு பிரஜைகள், வேலைக் காரர்கள். இப்படி எத்தனை செட்டிங் செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே இப்பொழுது மீட்டிங்கில் வந்திருப்பவர்கள் செட்டிங் மெஷினை மிக வேகமாக தயாரியுங்கள். வேகமாகத் தயாரியுங்கள் என்றால் தன்னை வேகமான முயற்சியாளர் ஆக்குவது. இது அதனுடைய சுவிட்ச் மெஷினுக்கு சுவிட்ச் இருக்கிறது இல்லையா? அப்படி வேகமாக இயங்கும் இயந்திரத்தின் சுவிட்ச் வேகமாக முயற்சி செய்பவர் ஆவது அதாவது வேகமாக செட்டிங் மெஷினை ஆன் செய்வது. பெரிய பொறுப்பு இது. எனவே இப்பொழுது தன்னுடைய இராஜ்யத்தின் செட்டிங் மெஷினைத் துரிதப்படுத்துங்கள்.

# 1989 அவ்யக்த முரளி

இரட்டை வெளிநாட்டினர் குருப்: வெளிநாட்டுக் குழந்தைகள் இப்பொழுது சேட்லைட் திட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்ற முயற்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே எப்பொழுதும் டபுள் லைட்டாக இருக்கும் கிப்ட் கொடுக்கிறார். அவர்கள் சேட்லைட் புரோகிராம் செய்வதற்காக யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பாப்தாதா எப்பொழுதும் டபுள் லைட்டாக இருக்கும் கிப்ட் கொடுக்கிறார். எப்பொழுதும் தன்னுடைய டபுள் லைட் நிலையில் நிலைத்திருக்கும் டபுள் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு திலாராம் பாப்தாதா தன்னுடைய மனம் நிறைந்த அன்பை கிப்ட் ஆகக் கொடுக்கிறார்.

அமெரிக்கா குழந்தைகள் விசேஷமாக நினைவு செய்கிறார்கள். மிகவும் நல்ல ஊக்க உற்சாகத்துடன் உலக சேவை செய்வதற்கான சாதனத்தை நன்றாகச் செய்திருக்கிறார்கள். ஐநா சபையும் சேவைக்குத் துணையாகியிருக்கிறது. பாரதம் சேவையின் அஸ்திவாரம். எனவே பாரதத்திலும் விசேஷமாக சேவையின் துணை (ஜகதீஷ் சகோதரர்) மஹிமை செய்யப்படுகிறார். அஸ்திவாரம் பாரதம் மற்றும் பிரத்யக்ஷதாவின் பொறுப்பு வெளிநாடு. பிரத்யக்ஷத்தின் ஓசை தூரத்திலிருந்து பாரதத்திற்கு முரசொலி மாதிரி வரும். குழந்தைகளின் எண்ண அலைகள் வந்து கொண்டிருக்கிறது. இதில் லண்டன் குழந்தைகளும் துணை இருக்கிறார்கள், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களும் விசேஷமாக சேவையில் துணையாக இருக்கிறார்கள், ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்களும் குறைந்தவர்கள் இல்லை. அனைத்து நாடுகளின் சகயோகம் நன்றாக இருக்கிறது. பாப்தாதா உள் நாட்டு, வெளிநாட்டு ஒவ்வொரு பொறுப்பிலிருக்கும் சேவாதாரி குழந்தைகளுக்கு அவரவர்கள் விசேஷத்திற்கேற்றபடி விசேஷ அன்பு நினைவு களைக் கொடுக்கிறார். ஒவ்வொருவரின் மகிமையையும் வர்ணனை செய்தால் எவ்வளவாகி விடும் ஆனால் பாப்தாதாவின் மனதில் ஒவ்வொருவரின் விசேஷத்தின் மகிமை அடங்கியிருக்கிறது.

மதுபன்வாசி சேவாதாரிகளும் சேவையின் தைரியத்தின் உதவி கொடுப்பவர்கள். தந்தையின் மகிமையாவது: தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு தந்தையின் உதவி கிடைக்கிறது. இந்த வகையில் எந்த சேவை நடந்தாலும், சீஸன் வந்தாலும் மதுபன் வாசிகள்

தைரியத்தின் தூணாகி விடுகிறார்கள் மற்றும் மதுபன் வாசிகளின் துணிச்சல் தைரியத்தினால் உங்கள் அனைவருக்கும் தங்குவதற்கு, உணவு அருந்துவதற்கு, தூங்குவதற்கு, குளிப்பதற்கு உதவி கிடைக்கிறது. எனவே பாப்தாதா அனைத்து மதுபன்வாசி குழந்தைகளுக்கு அவ்வாறு தைரியத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்லது.

வரதானம்: நினைப்பது மற்றும் செய்வதின் வித்தியாசத்தை நீக்கும் சுயமாற்றம் செய்பவர்களிலிருந்து உலக மாற்றம் செய்பவர் ஆகுக!

எந்த ஒரு சம்ஸ்காரம், சுபாவம், வார்த்தை மற்றும் நெருக்கம் சரியானதாக இன்றி வீணானதோ அந்த வீணானதை மாற்றுவதற்கான இயந்திரத்தை துரிதப்படுத்துங்கள். நினைத்தீர்கள், செய்தீர்கள் என்றால் தான் உலக மாற்றத்தின் இயந்திரம் வேகமாகச் செயல்படும் இப்பொழுது ஸ்தாபனைக்கு பொறுப்பான குழந்தைகளிடம் நினைப்பதற்கும், செய்வதற்கும் இடையே வித்தியாசம் தென்படுகிறது இந்த வித்தியாசத்தை நீக்குங்கள். அப்பொழுது தான் சுயமாற்றம் செய்பவரிலிருந்து உலக மாற்றம் செய்பவர் ஆகமுடியும்.

சுலோகன்: யார் வாழ்க்கையில் அனுபவத்தின் கிப்ட்'ஐ அடைந்திருக்கிறாரோ அவர் தான் மிகவும் அதிர்ஷ்டசாலி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 11.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தெய்வீகம் சங்கமயுக பிராமணர்களின் அலங்காரம்!

இன்று தெய்வீக புத்தியை அளிப்பவர், தெய்வீகப் பார்வை அளிக்கும் வள்ளல், தெய்வீக ஜென்மம் எடுத்துள்ள தன்னுடைய தெய்வீக ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தெய்வீக வாழ்க்கை அதாவது தெய்வீக எண்ணம், தெய்வீகப் பேச்சு, தெய்வீகக் காரியங்கள் செய்யும் தெய்வீக மூர்த்திகளாக ஆக்கியிருக்கிறார். தெய்வீக சங்கமயுகக் குழந்தைகள் உங்களின் உயர்ந்த அலங்காரமாகும். ஒன்று சாதாரணத்தன்மை இன்னொன்று தெய்வீகத்தன்மை. தெய்வீகத்தன்மையின் அடையாளத்தை நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். தெய்வீக ஜென்மம் எடுத்த ஆத்மா, எந்த ஒரு ஆத்மாவிற்கும் தன்னுடைய தெய்வீகக் கண்கள் மூலமாக அதாவது திவ்ய திருஷ்டி மூலமாக சாதாரணத் தன்மையை விட்டு விலக்கி தெய்வீக அனுபவங்களை செய்விக்கும். எதிரில் வந்ததுமே சாதாரண ஆத்மா தன்னுடைய சாதாரணத்தன்மையை மறந்து விடும். ஏனென்றால் இன்றைய காலத்திற்கேற்றாற்போல் இன்றைய சாதாரண வாழ்க்கையில் அனேக ஆத்மாக்கள் திருப்தி இல்லை. மற்றும் இந்த வாழ்க்கை வாழ்க்கையே இல்லை, வாழ்க்கையில் ஏதாவது புதுமை வேண்டும் என்று கூறுவதை வரக்கூடிய நாட்களில் கேட்பீர்கள். ஆன்மீகம் தெய்வீகம் இரண்டும் வாழ்க்கையின் விசேஷ ஆதாரம் என்ற அனுபவம் செய்வார்கள். ஏதாவது வேண்டும், ஏதாவது வேண்டும் இது வேண்டும் என்ற தாகத்தினால் நாலாபுறமும் தேடுவார்கள். எப்படி தண்ணீர் தாகத்தில் துடிக்கும் மனிதன் நாலாபக்கமும் சொட்டு தண்ணீருக்காகத் துடிக்கிறாரோ, அதே போல் தெய்வீகத்தின் தாகத்திலிருக்கும் ஆத்மாக்கள் நாலாபுறமும் ஏதாவது அடைவதற்காக துடித்துக் கொண்டிருப்பவர்களாகத் தென்படுவார்கள். துடித்துக் கொண்டே எங்கே போய்ச் சேருவார்கள்? உங்கள் அனைவரிடமும் அந்த மாதிரி

தெய்வீகத்தின் பொக்கிஷங்களால் நிரம்பியவர் ஆகி விட்டீர்களா? ஒவ்வொரு நேரமும் தெய்வீகத் தன்மை அனுபவம் ஆகிறதா இல்லையா? எப்போதாவது சாதாரணத்தன்மை, எப்போதாவது தெய்வீகத் தன்மையும், அனுபவம் ஆகிறதா? எப்பொழுது தந்தை, திவ்ய திருஷ்டியின் திவ்ய புத்தியின் வரதானம் கொடுத்து விட்டாரோ அப்பொழுது திவ்ய புத்தியில் சாதாரண விஷயங்கள் வர முடியாது. தெய்வீக ஜென்மமுடைய பிராமணன் உடலால் சாதாரண காரியங்கள் செய்ய முடியாது. பார்க்கும் மற்றவர்களுக்காக வேண்டுமென்றால் சாதாரண காரியமாக இருக்கலாம். மற்றவர்களைப் போல நீங்களும் உலகியல் விவகாரத்தில் வருகிறீர்கள், வியாபாரம் செய்கிறீர்கள், மற்றும் அரசாங்க வேலை செய்கிறீர்கள் பெண்கள் சமையல் செய்கிறீர்கள், பார்ப்பதற்கு சாதாரண காரியங்கள் தான், ஆனால் இந்த சாதாரண காரியங்களில் கூட உங்களுடையது மற்றவர்களை விட வேறுபட்டதாக தெய்வீக ஆன்மீகக் காரியமாக இருக்கட்டும். மிகப் பெரிய வித்தியாசம் என்று ஏன் கூறினோம் என்றால் தெய்வீக ஜென்மம் எடுத்த பிராமணன் உடலால் சாதாரணக் காரியம் செய்வதில்லை, மனதால் சாதாரண எண்ணங்களை உருவாக்குவதில்லை, பணத்தை சாதாரண முறையில் காரியத்தில் ஈடுபடுத்துவது இல்லை. ஏனென்றால் உடல், மனம், பொருள் -மூன்றிற்கும் டிரஸ்டியாக இருக்கிறீர்கள். எனவே உரிமையாளர் தந்தையின் ஸ்ரீமத் இல்லாமல் காரியத்தில் ஈடுபடுத்த முடியாமல் ஒவ்வொரு நேரமும் தெய்வீகக் காரியம் செய்வதற்காக தந்தையின் ஸ்ரீமத் கிடைக்கிறது. எனவே முழு நாளும் சாதாரணப் பேச்சு மற்றும் செயல்கள் எவ்வளவு நேரம் இருந்தது மற்றும் தெய்வீகமாக ஆன்மீகமாக எவ்வளவு நேரம் இருந்தது என்று சோதனை பண்ணுங்கள். நிறைய குழந்தைகள் அங்கங்கே மிகவும் வெகுளியாகி விடுகிறார்கள். சோதனை செய்கிறார்கள், ஆனால் மிகவும் வெகுளியாக முழு நாளும் விசேஷமாக எந்த தவறும் செய்யவில்லை, தீயவைகளை நினைக்கவில்லை, மற்றும் தீயவைகளைப் பேசவில்லை என்று நினைக்கிறார்கள் ஆனால் தெய்வீகமான மற்றும் ஆன்மீகமான காரியம் செய்தேனா என்று சோதனை செய்தீர்களா? ஏனென்றால் சாதாரணப் பேச்சு மற்றும் செயல் சேமிப்பாவது இல்லை, அழிவதும் இல்லை உருவாவதும் இல்லை. இப்போதைய தெய்வீகமான எண்ணங்கள், தெய்வீகமான பேச்சு மற்றும் காரியங்கள் எதிர்காலத்திற்காக சேமிப்பாகிறது. சேமிப்புக் கணக்கு அதிகரிப்பது

இல்லை, ஏனென்றால் சேமிக்க வேண்டும் என்ற கணக்கில் வெகுளியாகி விடுகிறார்கள், நான் வீணாக்கவில்லையென்று குஷியில் இருக்கிறார்கள் ஆனால் இதில் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள். வீணாக்கவில்லை சரி, ஆனால் நல்லதாக எவ்வளவு செய்திருக்கிறீர்கள்? நான் இன்று யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லையென்று அனேக தடவைகள் குழந்தைகள் கூறுகிறார்கள் ஆனால் சுகமும் கொடுத்தீர்களா? துக்கம் கொடுக்கவில்லை இதனால் நிகழ்காலத்தை நன்றாக வைத்துக் கொண்டீர்கள். சுகம் கொடுப்பதால் சேமிப்பாகிறது. அதைச் செய்தீர்களா? இல்லை நிகழ்காலத்திலேயே குஷியடைந்து விட்டீர்களா? சுகம் கொடுக்கும் வள்ளலின் குழந்தைகள் சுகத்தின் கணக்கில் சேமிக்கிறார்கள். துக்கம் கொடுக்கவில்லையென்று மட்டும் சோதனை செய்யாதீர்கள் ஆனால் சுகம் எவ்வளவு கொடுத்தேன்? யார் உங்களுடைய நெருக்கத்தில் வந்தாலும் மாஸ்டர் சுகம் கொடுக்கும் வள்ளல் மூலமாக ஒவ்வொரு அடியிலும் சுகத்தை அனுபவம் செய்யட்டும். இதைத்தான் தெய்வீகத் தன்மை ஆன்மீகத் தன்மை என்று கூறுவது. எனவே சோதனையில் கூட சாதாரணமாக இல்லாமல் ஆழமாக சோதனை செய்யுங்கள். ஒரே பிறவியில் 21-ஜென்மங்களுக்கு சேமிக்க வேண்டும் என்று ஒவ்வொரு நேரமும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே அனைத்து கணக்குகளையும் சோதனை செய்யுங்கள். உடலால் எவ்வளவு சேமித்திருக்கிறேன்? மனதின் தெய்வீக எண்ணங்கள் மூலமாக எவ்வளவு சேமித்திருக்கிறேன்? மற்றும் செல்வத்தை ஸ்ரீமத்படி உயர்ந்த காரியங்களுக்காக ஈடுபடுத்தி எவ்வளவு சேமித்திருக்கிறேன்? சேமிப்புக் கணக்கின் பக்கம் கொஞ்சம் விசேஷமான கவனம் கொடுங்கள், ஏனென்றால் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுடைய சேமிப்பு செய்வதற்கான நேரம் இந்த சின்ன பிறவியைத் தவிர முழு கல்பத்திலும் வேறு எந்த நேரமும் இல்லை. மற்ற ஆத்மாக்களின் கணக்கு வேறு ஆனால் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுக்காக இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை. எனவே புரிந்ததா, என்ன செய்ய வேண்டும் என்று? இதில் வெகுளியாக ஆகாதீர்கள். பழைய சமஸ்காரங்களைப் பொருத்து வெகுளியாக ஆகாதீர்கள். பாப்தாதா ரிஸல்ட்டைப் பார்த்தார். நிறைய விஷயங்களில் சேமிப்புக் கணக்கு மிகவும் குறைவு. அதனுடைய விவரம் பின்பு கூறுகிறோம். அன்பில் அனைத்தையும் மறந்து

அனைவரும் வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளின் அன்பைப் பார்த்து ஒரு நொடி அன்பின் பிரதிபலனாக அனேக நொடிகளின் பிராப்தியைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறார். உங்கள் அனைவரையும் இவ்வளவு பெரிய சபையில் வருவதற்காக என்ன என்ன வாக்குறுதி வாங்கினோம்? முதலில் தரையில் படுக்க வேண்டும். நான்கு நாட்கள் தான் தங்க வேண்டும் வந்து திரும்பிப் போய்விட வேண்டும். அப்படி அனைத்து விஷயங்களைக் கேட்ட பிறகும் வந்து சேர்ந்து விட்டீர்கள். இவ்வளவு கிடைக்கிறதே இதைக் கூட உங்களுடைய அதிர்ஷ்டம் என்று புரிந்து கொள்ளுங்கள். இருப்பினும் ஜட சிலைகள் முன் நின்று கொண்டே முழு இரவையும் கழிக்கவில்லை இல்லையா? மூன்றடி நிலம் அனைவருக்கும் கிடைத்தது இல்லையா? இங்கேயும் சௌகரியமாகத் தான் அமர்ந்திருக்கிறீர்கள். இன்னும் வரும் நாட்களில் குழந்தைகள் அதிகமாக அதிகமாக விதியும் மாறிக் கொண்டேயிருக்கும் ஆனால் என்ன கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அது மிகவும் நன்றாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று எப்பொழுதும் அனுபவம் செய்யுங்கள். ஏனென்றால் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே ஆகும். மேலும் மாற்றமும் ஏற்பட்டே ஆகும். என்ன அனைவருக்கும் சௌகரியமாகத் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும் வசதி கிடைத்திருக்கிறது அல்லது உணவு மற்றும் உறக்கம் இரண்டுதான் தேவை. மகளிருக்கு மிகவும் ஓய்வு ஏற்படுகிறது ஏனென்றால் சமைத்து தயாராக உணவு இங்கு கிடைக்கிறது. அங்கே (வீட்டில்) சமைத்து, 'போக்' வைத்து பின்பு சாப்பிட வேண்டும். இங்கு தயாரிக்கப்பட்டு, 'போக்' வைக்கப்பட்ட உணவு கிடைக்கிறது. எனவே தாய்மார்களுக்கு நல்ல ஓய்வு இருக்கிறது. குமாரர்களுக்கும் ஓய்வு கிடைக்கிறது, ஏனென்றால் அவர்களுக்கும் உணவு தயாரிப்பதில் மிகுந்த பிரச்சனைகள் இருக்கின்றன. இங்கோ மிகவும் சௌகரியமாகத் தயாராக இருந்த உணவை அருந்தினீர்கள் இல்லையா? எப்பொழுதும் இந்த மாதிரி ஈஸியாக இருங்கள். எவரது சம்ஸ்காரம் ஈஸியாக இருக்குமோ அவரது ஒவ்வொரு காரியமும் எளிதில், சகஜமாய முடிவதால் ஈஸியாக வாழ்கிறார்கள். சமஸ்காரம் இறுக்கமாக இருந்தால், சூழ்நிலைகளும் இறுக்கமாகி விடும், நெருக்கத்தில் உறவில் வருபவர்கள் கூட இறுக்கமாக நடந்து கொள்வார்கள். டைட் என்றால் ஏதாவது ஒன்றால் இழுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அப்படி அனைவரும் நாடகத்தின்

ஒவ்வொரு காட்சியையும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி யடைபவர்கள் தானே. அல்லது எப்போதாவது நல்லது அல்லது கெட்டதின் கவர்ச்சியில் வந்து விடுகிறீர்களா? நல்லதிலும் சரி, கெட்டதிலும் சரி எதிலேயும் கவரப்படக்கூடாது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நல்லது.

எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் தெய்வீகத்தன்மையை அனுபவம் செய்யும் மற்றும் செய்விக்கும் தெய்வீக மூர்த்திகளுக்கு எப்பொழுதும் தன்னுடைய சேமிப்புக் கணக்கை அதிகரிக்கும் ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு பிரச்சனையையும் ஈஸி நிலை மூலமாகக் கடந்து செல்லும் புத்திசாலி குழந்தைகளுக்கு, அனேக ஆத்மாக்களின் வாழ்க்கைத் தாகத்தைத் தீர்க்கும் மாஸ்டர் ஞானக்கடல் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, ஞானக்கடல் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**மும்பை குரூப்:** மும்பையில் வசிக்கும் குழந்தைகள் அனைத்துப் பொக்கிஷங்களினால் நிரம்பி இருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் தன்னை நிரம்பிய ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? நிரம்பிய நிலை முழுமையான நிலையின் அடையாளம். முழுமையான நிலையின் சோதனை தன்னுடைய நிரம்பிய நிலை மூலம் செய்ய முடியும். ஏனென்றால் முழுமையான நிலை என்றால் அனைத்துப் பொக்கிஷங்களினால் நிரம்பிய இருக்கிறீர்கள் இல்லையா? எப்படி சந்திரன் எப்பொழுது முழுநிலவாக இருக்கிறதோ அது அதனுடைய முழுமையான நிலையின் அடையாளம் இதைவிட பெரிதாகாது, அது தான் அதனுடைய முழுமையான நிலை. கொஞ்சம் கூட ஓரங்கள் தேயாமல் குறையில்லாமல் நிரம்பிய நிலையிலிருக்கும். அப்படி நீங்கள் அனைவரும் ஞானம், யோகம், தாரணை, சேவை அனைத்திலும் நிரம்பியிருக்கிறீர்களா? இதைத்தான் முழுமையான நிலை என்று கூறுவது. இதன் மூலம் முழுமையான நிலைக்கு அருகில் இருக்கிறேனா, தொலைவில் இருக்கிறேனா என்று தெரிந்து கொள்ளலாம். நிரம்பியிருக்கிறீர்கள் என்றால் முழுமையான நிலைக்கு அருகில் இருக்கிறீர்கள் என்ன அனைவரும் அருகில் இருக்கிறீர்களா? எவ்வளவு அருகில் இருக்கிறீர்கள்? 8-வரை, 100-வரை, அல்லது 16000-வரை, 8-ன் அருகாமை, பின்பு 100-ன் அருகாமை பின்பு 16000-ன்

அருகாமை. எவ்வளவு அருகாமையில் இருப்பவர்கள். இதைத்தான் சோதனை செய்ய வேண்டும். நான்றாக இருக்கிறது. இருந்தாலும் உலகின் கோடிக்கணக்கானவர்களில் நீங்கள் மிக மிக பாக்கியமுள்ளவர்கள். அவர்கள் துடித்துக் கொண்டிருப்பவர்கள். மேலும் நீங்கள் நிரம்பிய ஆத்மாக்கள். பிராப்தி சொரூபமான ஆத்மாக்கள். இந்தக் குஷி இருக்கிறது இல்லையா? தினந்தோறும், என்னைத் தவிர வேறு யார் குஷியாக இருக்க முடியும் என்று உங்களுடன் நீங்களே பேசுங்கள். எனவே அருகாமையில் இருக்கிறோம், நிரம்பியிருக்கிறோம் என்ற இந்த வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும். இப்பொழுது அருகில் சந்திப்பது கூட நடந்து விட்டது. எப்படி ஸ்தூலமாக அருகில் இருப்பது நன்றாக இருக்கிறதோ அதே போல் நிலையிலும் எப்பொழுதும் அருகில் அதாவது எப்பொழுதும் நிரம்பியவர்கள் ஆகுங்கள். நல்லது.

குஜராத்-பூனா குரூப்:. அனைவரும் பார்வை மூலம் சக்திகளின் பிராப்தியை அனுபவம் செய்விப்பது என்பதில் அனுபவிகள் தானே? எப்படி வார்த்தைகள் மூலமாக சக்தியை அனுபவம் செய்கிறீர்கள். முரளி கேட்கிறீர்கள் என்றால் சக்தி கிடைத்ததாகப் புரிந்து கொள்கிறீர்கள் இல்லையா!. அப்படி பார்வை மூலமாக சக்திகளின் பிராப்தியை அனுபவம் செய்விப்பதில் பயிற்சி நிறைந்தவர்கள் ஆகி விட்டீர்களா? இல்லை வார்த்தைகள் மூலமாக அனுபவம் ஆகிறது, ஆனால் பார்வை மூலமாக குறைவாக இருக்கிறது என்ற நிலையா? பார்வை மூலமாக சக்தியை பிடித்துக் கொள்ள (கேச்) முடியுமா? ஏனென்றால் சரியாக (பிடித்துக் கொள்ளும் பயிற்சி இருந்தால் மற்றவர்களுக்கும் தன்னுடைய திவ்ய திருஷ்டி மூலமாக அனுபவம் செய்விக்க முடியும். வரும் நாட்களில் வார்த்தைகள் மூலமாக அனைவருக்கும் அறிமுகம் கொடுப்பதற்கு நேரமே இருக்காது மற்றும் சூழ்நிலையும் இருக்காது பின்பு என்ன செய்வீர்கள்? வரதானி பார்வை மூலமாக மகாதானி பார்வை மூலமாக வரதானம், மகாதானம் கொடுப்பீர்கள். திருஷ்டி மூலமாக அமைதியின் சக்தி, அன்பின் சக்தி, சுகம், ஆனந்தத்தின் சக்தி அனைத்தும் பிராப்தி ஆகிறது. ஜட சிலைகள் முன்னால் செல்கிறார்கள், ஜட சிலைகள் ஒன்றும் பேசுவது இல்லை அல்லவா? இருந்த போதிலும் பக்த ஆத்மாக்களுக்கு ஏதோ பிராப்தி ஆகிறது. அதனால் தான் செல்கிறார்கள் இல்லையா? எப்படி பிராப்தி

ஆகிறது? அவர்களுடைய தெய்வீகத் தன்மையின் அதிர்வலைகள் (வைப்ரேஷன்) மூலமாக மற்றும் திவ்ய கண்களின் திருஷ்டியைப் பார்த்து அதிர்வலைகளை எடுக்கிறார்கள். எந்த ஒரு தேவி அல்லது தேவதையின் சிலையில் விசேஷ கவனம் கண்கள் பக்கம் பார்ப்பார் முகத்தின் பக்கம் கவனம் செல்கிறது ஏனென்றால் நெற்றி மூலமாக வைப்ரேஷன் கிடைக்கிறது பார்வை மூலமாக தெய்வீகத் தன்மை அனுபவம் ஆகிறது. அவைகளோ ஜடமான மூர்த்திகள் ஆனால் யாருடையவை? சைதன்ய மூர்த்தியாக இருக்கும் உங்களுடைய ஜட மூர்த்திகள் இது எங்களுடைய சிலைகள் என்ற போதை இருக்கிறதா? சைதன்யமாக இவர்கள் சேவை செய்திருக்கிறார்கள். எனவே தான் ஜட சிலைகள் உருவாகியிருக்கின்றன. எனவே திருஷ்டி மூலமாக சக்தி எடுக்க மற்றும் திருஷ்டி மூலமாக சக்தி கொடுக்க பயிற்சி செய்யுங்கள். அமைதியின் சக்தியின் அனுபவம் மிக உயர்ந்தது. எப்படி இந்த நேரத்தில் அறிவியல் சக்தி எவ்வளவு பிரபாவமாக இருக்கிறது, ஒவ்வொருவரும் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் அறிவியல் சக்தி எப்படி வந்தது? அமைதி சக்தியிலிருந்து தானே. எப்பொழுது அறிவியல் சக்தி அற்ப கால பிராப்தியை செய்வித்துக் கொண்டிருக்கிறதோ அப்பொழுது அமைதி சக்தி எவ்வளவு பிராப்தியை செய்விக்கும். எனவே தந்தையின் திவ்ய திருஷ்டி மூலமாகத் தன்னுள் சக்தியை நிரப்புங்கள் பின்பு சேமித்து வைத்ததை தேவையான போது பிறருக்குக் கொடுக்க முடியும். தனக்காக சேமித்தீர்கள் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் சம்பாதித்தீர்கள் சாப்பிட்டீர்கள். யார் சம்பாதிக்கிறார்களோ அதை அவர்கள் சாப்பிட்டே முடித்து விட்டால் அவர்களுக்கு ஒருபோதும் சேமிப்பாவது இல்லை. மேலும் யாருக்கு சேமிப்பு இல்லையோ? அவர்களுக்குத் தேவையான போது ஏமாற்றம் தான் கிடைக்கிறது. ஏமாற்றம் கிடைத்தால் துக்கத்தின் பிராப்தி ஆகும். அதே போல் அமைதி சக்தி சேமிப்பாகவில்லை, திருஷ்டியின் மகத்துவம் அனுபவம் ஆகவில்லை என்றால் கடைசி நேரம் உயர்ந்த பதவி அடைவதில் ஏமாற்றம் அடைவார்கள். பின்பு துன்பம் ஏற்படும், வேதனைப்படுவார்கள். எனவே இப்பொழுதிலிருந்தே தந்தையின் திருஷ்டி மூலமாக சக்திகளை அனுபவம் செய்து கொண்டே சேமித்துக் கொண்டே இருங்கள். என்ன சேமிப்பது தெரியுமா? சேமிப்பு ஆவதின் அடையாளம் என்னவாக இருக்கும்? போதை இருக்கும். எப்படி செல்வந்தர்களின் நடை, உடை, பாவனையில் அந்த போதை தென்படும்.

மேலும் எவ்வளவு போதை இருக்குமோ அவ்வளவு குஷி இருக்கும். இது தான் ஆன்மீக போதை இந்த போதையில் இருப்பதால் குஷி இயல்பாகவே இருக்கும் குஷிதான் பிறப்புரிமை எப்பொழுதும் குஷியின் ஒவ்வொரு அசைவுகள் மூலமாக மற்றவர்களுக்கும் குஷியின் பொலிவைக் காண்பிப்பவர்கள் ஆகுக. இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் சரி, குஷியின் வரதானத்தை இழந்து விடக் கூடாது. பிரச்சனைகள் வரும், போகும் ஆனால் குஷி நம்முடையது, பிரச்சனைகள் சூழ்நிலைகள் மற்றவர்களிடமிருந்து வந்தவை. என்னுடையதை எப்பொழுதும் கூடவே வைத்துக் கொள்வார்கள் இல்லையா. மற்றவர்களின் பொருட்கள் வரவும் செய்யும் போகவும் செய்யும். சூழ்நிலை மாயாவினுடையது நம்முடையது அல்ல. நம்முடைய பொருளை ஒருபோதும் இழக்கக்கூடாது. எனவே தஷியை இழக்கக்கூடாது. இந்த உடல் கூட போய் விடட்டும், ஆனால் குஷி போகக்கூடாது. குஷியோடு உடல் போனால் கூட இல்ல உடல் கிடைக்கும். பழையது போகும் புதியது கிடைக்கும். எனவே குஜராத் மற்றும் மஹாராஷ்டராவைச் சேர்ந்தவர்கள் இந்த உயர்ந்த தன்மையில் எப்பொழுதும் இருங்கள். குஷியில் மகான் (உயர்ந்தவர்) ஆக வேண்டும்.

**ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா குரூப்:** இந்த நாடகத்தில் விசேஷப் பாத்திரம் ஏற்றுச் செய்யும் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது அப்படி மற்றும் தந்தையின் நினைவு இயற்கையாகவே இருக்கிறது, நினைவு சுலபமாக இருக்கிறது, ஏனென்றால் உறவுதான் நினைவின் ஆதாரம். எங்கே உறவு இருக்கிறதோ அங்கு நினைவு தானாகவே எளிதாகவே இருக்கிறது. எப்பொழுது அனைத்து உறவுகளும் ஒரு தந்தையிடம் ஏற்பட்டு விட்டதோ அப்பொழுது வேறு யாருமே இல்லவே இல்லை. ஒரு தந்தைதான் அனைத்து உறவும்... இந்த நினைவிலேயே சகஜயோகி (எளிதாக தந்தையின் நினைவில் இருப்பவர்) ஆகி விட்டீர்கள். எப்போதாவது கஷ்டமாக இருக்கிறதா? மாயாவின் போர் நடக்கும் போது கஷ்டமாக இருக்கிறதா? மாயாவை நிரந்தரமாக விடை கொடுப்பவர் ஆகுங்கள். எப்பொழுது மாயவிற்கு விடை கொடுப்பீர்களோ அப்பொழுது தந்தையின் பாராட்டுக்கள் உங்களை மிகவும்

முன்னேற்றிக் கொண்டே போகும். பக்தி மார்க்கத்தில் எத்தனை தடவை ஆசீர்வாதம் கொடுங்கள், ஆசீர்வாதம் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது தந்தையிடமிருந்து ஆசீர்வாதம் எடுத்துக் கொள்வதற்கான எளிதான சாதனம் என்னவென்று கூறி விட்டோம். எவ்வளவு மாயாவிற்கு விடை கொடுப்பீர்களோ அவ்வளவு ஆசீர்வாதம் தானாகவே கிடைக்கும். பரமாத்ம ஆசீர்வாதங்கள் ஒரு பிறவிக்கு அல்ல, பல பிறவிகளுக்கு உயர்ந்தவராக்குகிறது. நான் ஒவ்வொரு அடியிலும் தந்தையின், பிராமணக் குடும்பத்தின் ஆசீர்வாதத்தை எடுத்து சுலபமாக மேலே உயர்வான நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாடகத்தில் விசேஷமான ஆத்மாக்கள் நீங்கள், விசேஷமான காரியம் செய்து அனேக பிறவிகளுக்கு விசேஷமான பங்கு ஏற்று செய்பவர்கள். சாதாரண செயல்கள் இன்றி உயர்ந்த காரியங்கள், விசேஷ எண்ணம் மற்றும் விசேஷ வார்த்தைகள் இருக்கட்டும். எனவே ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் தன்னுடைய உயர்ந்த காரியங்கள் மூலமாக, தன்னுடைய உயர்ந்த மாற்றம் மூலமாக அனேக ஆத்மாக்களை மாற்றும் விசேஷ சேவையைச் செய்யுங்கள். உங்களைப் பார்க்கும் கண்ணாடியாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய கண்ணாடியில் தந்தை தென்படட்டும். அந்த மாதிரி விசேஷ சேவை செய்யுங்கள். நான் தெய்வீகமான கண்ணாடி, என்ற கண்ணாடி மூலமாகத் தந்தை தென்பட வேண்டும் என்று மட்டும் எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். புரிந்ததா. நல்லது.

வரதானம்: அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்திகளின் தானம் செய்யும் மாஸ்டர் விதை ரூபம் ஆகுக!

அனேக காய்ந்து போன, வாடிப்போன பக்த ஆத்மாக்கள் என்ற இலைகளுக்கு மீண்டும் தன்னுடைய விதை ரூப நிலை மூலமாக சக்திகளை தானம் செய்யுங்கள். அவர்களுக்கு அனைத்து பிராப்திகளையும் செய்விப்பதற்கான ஆதாரம் உங்களுடைய இச்சா மாத்ரம் அவித்யா (ஆசையே என்னவென்று தெரியாத நிலை) எப்பொழுது சுயம் தான் இச்சா மாத்ரம் அவித்யா ஆவீர்களோ அப்பொழுது மற்ற ஆத்மாக்களின் அனைத்து இச்சைகளையும் பூர்த்தி

செய்ய முடியும். இச்சா மாத்ரம் அவித்யா என்றால் சம்பூர்ண சக்திசாலியான விதை ரூப நிலை. எனவே மாஸ்டர் விதை ரூபமாகி பக்தர்களின் கூக்குரலைக் கேளுங்கள், பிராப்தி செய்வியுங்கள்.

சுலோகன்: எப்பொழுதும் பரமாத்மாவின் குடைநிழலில் இருப்பது தான் ஆன்மீக வாழ்க்கையில் பாதுகாப்பிற்கான சாதனமாகும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

## 15.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான மனதில் பாபா திருப்தியாக இருக்கிறார்!

இன்று உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் உபகாரம் செய்யும் பாப்தாதா தன்னுடைய உயர்ந்த பரஉபகாரம் செய்யும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்றைய காலத்தில் அனேக ஆத்மாக்கள் உபகாரம் வேண்டும் என்று ஆசையுள்ள வர்களாக இருக்கிறார்கள். தனக்குத் தானே உபகாரம் செய்ய வேண்டும் என்ற ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள் ஆனால் தைரியம் மற்றும் சக்தி இல்லை. அந்த மாதிரி பலமில்லாத ஆத்மாக்களுக்கு உபகாரம் செய்வதற்காக நீங்கள் பர உபகாரம் செய்யும் குழந்தைகள் பொறுப்பாக இருக்கிறீர்கள். பரஉபகாரம் செய்யும் குழந்தைகள் உங்களுக்கு ஆத்மாக்களின் கூக்குரல் கேட்கிறதா இல்லை சுய உபகாரம் செய்வதிலேயே பிஸியாக இருக்கிறீர்களா? உலக இராஜ்ய அதிகாரிகள் தனக்கு உபகாரம் செய்பவர்களாக மட்டும் ஆவதில்லை. பரஉபகாரம் செய்யும் ஆத்மாக்கள் தான் இராஜ்ய அதிகாரி ஆக முடியும். உபகாரம் உண்மையான மனதிலிருந்து இருக்கும். ஞானம் சொல்வது (இதயப்பூர்வமாக இல்லாமல் கூட) வாய் மூலமாகக் கூட சொல்லலாம். ஞானம் சொல்வது என்பது விசால புத்தியின் விஷயம் மற்றும் வர்ணிப்பதில் இருக்கும் பயிற்சியின் விஷயமாகும். அப்படி மனம்-புத்தி இரண்டிலும் வித்தியாசம் இருக்கிறது. யாராவது யாரிடமிருந்தாவது அன்பை விரும்பினால் அவர்கள் இதயத்தின் அன்பை விரும்புகிறார்கள். பாப்தாதாவின் டைட்டில் தில்வாலா (இதயப்பூர்வமானவர்) திலாராம் (மனதை கொள்ளை கொண்டவர்) இதயத்தை விட மூளை (புத்தி) ஸ்தூலமானது, இதயம் சூட்சமமானது. பேசுவது கூட உண்மையான மனசோடு கூறுகிறேன் என்று சொல்லுவார்கள். உண்மையான தந்தையை நினைவு செய்யுங்கள் என்று கூறுவார்களேயன்றி உண்மையான புத்தியால் நினைவு செய்யுங்கள் என்று கூறுவது இல்லை. உண்மையான மனதில் தந்தை திருப்தியாக இருக்கிறார்

என்று கூறப்படுகிறது. விசால புத்தியில் திருப்தியாக இருக்கிறார் என்று கூறுவதில்லை. விசாலபுத்தி ஒரு விசேஷம் தான் இந்த விசேஷத்தின் மூலமாக ஞான கருத்துக்களை நன்கு தாரணை செய்ய முடியும் ஆனால் மனதால் நினைவு செய்பவர்கள் கருத்துக்கள் அதாவது புள்ளி ரூபம் ஆக முடியும். அவர்கள் பாயின்ட் (ஞான விஷயங்கள்) ரிபீட் செய்ய முடியும் ஆனால் பாயின்ட் (புள்ளி) ரூபம் ஆவதில் இரண்டாம் எண்ணிக்கையில் வந்து விடுகிறார்கள். எப்போதாவது சுலபமாக எப்போதாவது கஷ்டப்பட்டு புள்ளி ரூபத்தில் நிலைத்திருக்க முடியும் ஆனால் உண்மையான மனமுடையவர்கள் ஒரு நொடியில் புள்ளி ஆகி புள்ளி சொரூபத் தந்தையை நினைவு செய்ய முடியும். உண்மையான மனமுடையவர்கள் தந்தையைத் திருப்தி படுத்துவதின் காரணத்தினால், தந்தையின் விசேஷ ஆசீர்வாதம் கிடைக்கும் காரணத்தினால் ஸ்தூலமாக சிலருக்கு விசால புத்தியில்லாமல் இருந்தும் உண்மையின் சக்தியினால் தேவையான நேரத்தில் அவர்களுடைய புத்தி யுக்தி யுக்த் சரியான காரியத்தை தானாகச் செய்வார்கள். ஏனென்றால் எது சரியான காரியமோ, சொல், செயலோ அது ஆசீர்வாதத்தின் காரணமாக நாடகப்படி அந்த நேரம் அது தான் அவர்களுடைய புத்தியில் டச்சிங் ஆகும். ஏனென்றால் புத்திவான்களின் புத்தியை திருப்தி படுத்திருக்கிறார். யார் பகவானைத் திருப்தி படுத்தியிருக்கிறாரோ அவர் இயல்பாகவே இரகசியம் அறிந்து நடப்பவராகவும், வழிமுறை தெரிந்து நடப்பவராகவும் இருப்பார். எனவே நான் விசால புத்தியின் காரணமாக நினைவு மற்றும் சேவையில் முன்னேறுகிறேனா இல்லை உண்மையான மனது மற்றும் சரியான புத்தியால் முன்னேறுகிறேனா என்று சோதனை செய்யுங்கள். புத்தியால் சேவை செய்பவர்களின் அம்பு மற்றவர்களின் புத்தி வரை தான் சென்று பாயும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். மனமுடையவர்களின் அம்பு மனது வரை பாய்கிறது. எப்படி ஸ்தாபனையின் சேவையின் ஆரம்பத்தில் பார்த்திருக்கிறீர்கள், முதல் சேவை குரூப்பின் விசேஷம் என்னவாக இருந்தது? மொழி மற்றும் சொற்பொழிவு ஆற்றுவதின் விசஷேத்தன்மை ஒன்றும் இருக்கவில்லை. இன்றைய நாட்களில் பாருங்கள் நீங்கள் மிக நன்றாகப் பேசுகிறீர்கள் கதை மற்றும் உதாரணங்கள் மிக நன்றாகக் கூறுகிறீர்கள். இந்த மாதிரி முதல் சேவை குரூப்பைச் சேர்ந்தவர்களின் பாஷை இருக்கவில்லை ஆனால் வேறு என்ன இருந்தது? உண்மையான

மனதின் சப்தம் இருந்தது. எனவே மனதின் சப்தம் திலாராமுக்கு (பாபா) உரியவர்களாக ஆக்குவதற்கு பொறுப்பாக இருந்தது. பார்வை மிகவும் கலப்படமாக இருந்தது ஆனால் கண்களின் பாஷை ஆன்மீகமாக இருந்தது. எனவே பாஷை எப்படிப்பட்டதாக இருந்தாலும் முள்ளிலிருந்து மலராக ஆகியே விட்டார்கள். அந்த முதல் சேவை குரூப்பின் சேவையின் வெற்றி மற்றும் இப்போதுள்ள பெருகிய சேவை இரண்டையும் சோதனை செய்தீர்கள் என்றால் வித்தியாசம் தெரியும் அதிகமானவர்களின் விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறோம். இரண்டாவது, மூன்றாவது சேவை குரூப்பிலும் சிலர் மனமுள்ளவராக இருக்கிறார்கள், ஆனால் மிகக் குறைவானவர்கள் தான். ஆரம்பத்தின் வினா இது வரை வந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு வினா? நான் யார்? நான் யார் என்று உங்களை நீங்களே கேளுங்கள் என்று பாப்தாதா இப்பொழுதும் கூறுகிறார். முதல் வினாவிற்கு பதில் கூற முடியுமா? இல்லை இரண்டாவதைக் கூறினால் தான் பதில் கூற முடியுமா? இரண்டாவதைக் கூறினாலும் அது அப்படி இல்லை, இப்படி என்று அந்த விஷயத்தை சமாளிக்க முயற்சி செய்வீர்கள். எனவே உங்களை மட்டும் நீங்களே பாருங்கள்.

அதிகமானக் குழந்தைகள் தன்னைத்தானே சோதனை செய்கிறார்கள் ஆனால் பார்க்கும் பார்வை இரண்டு விதமாக இருக்கிறது. அதிலேயும் சிலர் விசால புத்தியின் பார்வையோடு சோதனை செய்கிறார்கள், அவர்கள் அலட்சியம் என்ற கண்ணாடி அணிந்திருக்கிறார்கள். இவ்வளவு செய்திருக்கிறோம் தியாகம் செய்தோம், சேவை செய்தோம். மாற்றம் கொண்டு வந்தோம் இதுவே அதிகம் என்று ஒவ்வொரு விஷயமும் தென்படும். இவர்களை விட மிகவும் நன்றாக இருக்கிறேன். இவ்வளவு செய்வது கூட ஒன்றும் எளிதல்ல. பெயர் பெற்றவர்களிடமும் கொஞ்சம் கொஞ்சம் குறை இருக்கிறது அப்படிப் பார்க்கும் போது நான் நன்றாக இருக்கிறேன். இப்படி பார்ப்பது தான் அலட்சியத்தின் கண்ணாடி. இன்னொன்று சுயமுன்னேற்றத்தின் சரியான கண்ணாடி அது தான் உண்மையான மனமுடையவர்களுடையது. அவர்கள் என்ன பார்க்கிறார்கள்? தில்வாலா தந்தைக்கு (மனம் நிறைந்த) எது எப்பொழுதும் விருப்பமோ அந்த எண்ணம், சொல், செயல் மட்டும் தான் செய்ய வேண்டும். சரியான கண்ணாடி அணிந்திருப்பவர்கள் தந்தை மற்றும் அவர்களை

மட்டும் தான் பார்ப்பார்கள். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்கள் பார்ப்பது இல்லை. நான் தான் மாற வேண்டும் என்ற இந்த பல்லவியை பாடிக் கொண்டே இருப்பார்கள். மற்றவர்கள் மாறினால் தான் நான் மாறுவேன் என்றிருக்க மாட்டார்கள் அல்லது நான் 80% மாறினால் அவர்கள் 20% ஆவது மாறட்டும் என்று கூட பார்க்க மாட்டார்கள். நான் மாறி மற்றவர்களுக்கு சுலபமாவதற்காக நான் உதாரணம் ஆக வேண்டும் எனவே தான் யார் செய்து காண்பிக்கிறார்களோ அவர் தான் அர்ஜுனன். அர்ஜுனன் என்றால் ஆன்மீக பிறவி எடுத்த மனிதன். இதைத்தான் சரியான கண்ணாடி சரியான பார்வை என்று கூறுவது. அப்படியே பார்த்தாலும் உலகில் மனித வாழ்க்கையில் மனம் மற்றும் புத்தி இந்த இரண்டும் தான் முக்கியமானது. இரண்டும் சரியாக இருக்க வேண்டும். உண்மையான மனமுடையவர்களுக்கு புத்தியின் உண்மையான மனதால் தந்தையைத் திருப்திபடுத்தினேனா என்று தான் எப்பொழுதும் சோதனை செய்ய வேண்டும். மேலும் தன்னுடைய மனம் மற்றும் சில ஆத்மாக்களை மட்டும் திருப்திபடுத்தவில்லையே என்று சோதனை செய்யுங்கள். சத்தியமான தந்தையை திருப்திப்படுத்த வேண்டும், இதற்கு நிறைய அடையாளங்கள் இருக்கின்றன. இதை நன்கு சிந்தித்து ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். பின்பு பாப்தாதாவும் சொல்லுவார். நல்லது.

எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்கும் பர உபகாரம் செய்யும், எப்பொழுதும் உண்மையான மனதோடு உண்மையான தந்தையை திருப்திப்படுத்தும், விசால புத்தி மற்றும் உண்மையான மனதின் சமநிலை வைக்கும், எப்பொழுதும் தன்னை உலக மாற்றத்திற்கு பொறுப்பானவராக்கும், சுயமாற்றம் செய்யும் உயர்ந்த ஆத்மாவிற்கு, உயர்ந்த சேவாதாரி என்று நினைத்து முன்னேறிக் கொண்டிருக்கும், அந்த மாதிரி நாலா புறமுமுள்ள விசேஷக் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

டெல்லி குரூப்போடு பாப்தாதாவின் சந்திப்பு: அனைவரின் மனதில் தந்தையின் அன்பு நிரம்பியிருக்கிறது. தந்தையின் அன்பு இங்கே வரை கொண்டு வந்திருக்கிறது. மனதின் (தில்) அன்பு திலாராம் வரை கொண்டு வந்திருக்கிறது. மனதில் தந்தையைத் தவிர வேறு எதுவும்

இருக்க முடியாது. எப்பொழுது தந்தையே உலகமோ அப்பொழுது மனதில் இருப்பது என்றால் தந்தையில் உலகம் அடங்கி இருக்கிறது. எனவே ஒரு வழி, ஒரு பலம், ஒரு நம்பிக்கை. எங்கு ஒன்று (ஒற்றுமை) இருக்கிறதோ அங்கு ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியே தான். எந்த ஒரு சூழ்நிலையையும் கடந்து செல்வது சுலபமா இல்லை கடினமா? ஒருவேளை இன்னொருவரைப் பார்த்தால் இன்னொருவரை நினைவு செய்தால் இரண்டிலும் ஒன்று கூட கிடைக்காது எனவே கடினமாகி விடும். என் ஒருவனை நினைவு செய்யுங்கள் என்பது தந்தையின் கட்டளை. ஒருவேளை கட்டளையை நடைமுறைப்படுத்தினால் கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு தந்தையின் ஆசீர்வாதம் கிடைக்கிறது மேலும் அனைத்தும் எளிதாகி விடுகிறது. ஒருவேளை தந்தையின் கட்டளைப்படி நடக்கவில்லை என்றால் தந்தையின் உதவி மற்றும் ஆசீர்வாதம் கிடைப்பதில்லை எனவே கடினமாகி விடுகிறது. என்ன எப்பொழுதும் கட்டளைப்படி நடப்பவர்கள் தானே! குடும்ப உறவில் கூட சொற்படி நடக்கும் குழந்தைகள் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது. அது அற்ப காலத்து அன்பு இது அழியாத அன்பு. இந்த ஒரு பிறவியில் ஆசீர்வாதங்கள் அனேக பிறவிகள் உடன் இருக்கும். அப்படி அழியாத ஆசீர்வாதங்களுக்குத் தகுதியானவர்கள் ஆகி விட்டீர்களா? உங்களுடைய இந்த வாழ்க்கை இனிமையாக இருக்கிறது அல்லவா? எவ்வளவு உயர்ந்த எவ்வளவு நல்ல வாழ்க்கை. பிராமண வாழ்க்கை இருந்தால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை. பிராமண வாழ்க்கை இல்லையென்றால் மகிழ்ச்சி இல்லாத பிரச்சனைகள் நிறைந்த வாழ்க்கையாக இருக்கும். என்ன மகிழ்ச்சிகரமான வாழ்க்கையா? இல்லை களைப்படைந்து விடுகிறீர்களா? சங்கமயுகம் எதுவரை இருக்கும் என்று நினைக்கிறீர்களா? உடல் ஒத்துழைக்கவில்லை, சேவை செய்ய முடிவதில்லை என்று வருத்தப்படவில்லையே? இந்த சங்கமயுக வாழ்க்கை அனைத்து பிறவிகளை விட உயர்ந்தது. பிராப்தி உள்ள வாழ்க்கை இது தான். அதன் பின்பு பிராப்தியை அனுபவிக்கும் வாழ்க்கை, குறையக்கூடிய வாழ்க்கை. இப்பொழுது நிரப்ப வேண்டும். 16-கலைகள் என்றால் முழுமை. இந்த வாழ்க்கை மிகவும் விரும்பத்தக்கது. அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா இல்லையா? இல்லை எப்பொழுதாவது இந்த வாழ்க்கையால் நொந்து போய்விடுகிறீர்களா? நொந்து போய் இப்பொழுது இவ்வுலகை விட்டு சென்று விடலாம் என்று நினைக்குவில்லையே? ஒருவேளை தந்தை

சேவைக்காக அழைத்துச் சென்றால் அது வேறு விஷயம் ஆனால் நொந்து போகக்கூடாது. அட்வான்ஸ் பார்ட்டியில் சேவையின் பங்கு இருக்கிறது, மேலும் டிராமாப்படி சென்றிருந்தால் நொந்து போய் செல்ல மாட்டார்கள், மரியாதையோடு செல்வார்கள். சேவைக்காகச் செல்கிறோம். எனவே ஒருபோதும் குழந்தைகளினால் அல்லது உங்களுக்கு நீங்களே நொந்து கொள்ளாதீர்கள். மாதர்கள் குழந்தைகளினால் எப்பொழுதாவது நொந்து போய் விடுகிறீர்களா? எப்பொழுது தமோபிரதான தத்துவங்களால் பிறந்திருக்கிறார்களோ அவர்கள் எப்படி உயர்ந்த தன்மையைச் காட்டுவார்கள்? அவர்களும் தங்களை மீறி வசப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் கூட தந்தையின் கட்டளையை எப்பொழுதாவது மறந்து விடுகிறீர்கள் இல்லையா? எப்பொழுது நீங்களே தவறு செய்ய முடியுமோ, குழந்தைகள் தவறு செய்தால் என்னவாகி விடும்? எப்பொழுது பெயரே குழந்தையோ, குழந்தை என்றால் என்ன? பெரியவர்களாக இருந்தாலும் அந்த நேரம் அவர்கள் குழந்தையாகி விடுகிறார்கள் அதாவது ஒன்றும் தெரியாதவர்கள் ஆகி விடுகிறார்கள். எனவே ஒருபோதும் மற்றவர்களின் பிரச்சனைகளைப் பார்த்து நீங்கள் பிரச்சனைக்குள் வராதீர்கள். அவர்கள் எவ்வளவு தான் பிரச்சனை செய்தாலும் நீங்கள் உங்களுடைய மரியாதையிலிருந்து ஏன் இறங்குகிறீர்கள்? பலஹீனம் உங்களுடையதா? இல்லை குழந்தைகளுடையதா? உங்களை உங்களின் மரியாதையிலிருந்து இறக்கி தொந்தரவு செய்வதில் பலம் நிறைந்தவர்களாகி விட்டார்கள். எனவே கனவில் கூட நோயினாலும் சரி, குழந்தைகள் மூலமாகவும், தன்னுடைய சம்ஸ்காரம் மூலமாகவும் மற்றும் மற்றவர்கள் மூலமாகவும் தொந்தரவு அடையக்கூடாது. மற்றவர்களினாலும் தொந்தரவு அடைகிறார்கள் இல்லையா? மற்ற அனைவரும் சரியாகத் தான் இருக்கிறார்கள் இவர் ஒருவர் மட்டும் தான் அப்படி இருக்கிறார். இவர் மூலம் தொந்தரவு அடைகிறேன் என்றும் சிலர் கூறுகிறார்கள். எனவே தொந்தரவு கொடுப்பவர்கள் பலசாலியாக வேண்டாம், நீங்கள் ஆகுங்கள். ஒருவர் இருந்தாலும், பத்து பேர் இருந்தாலும் நான் மாஸ்டர் சர்வ சக்திவான், பலஹீனமானவன் இல்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள். எனவே நான் எப்பொழுதும் என்னுடைய உயர்ந்த மரியாதையில் இருப்பவன் தொந்தரவு அடைபவன் அல்ல என்ற இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களின் பிரச்சனைகளையும்

நீக்குபவன் என்ற நினைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் மரியாதையின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவன். பாருங்கள் இன்றெல்லாம் நாற்காலிகள் தான் இருக்கின்றன ஆனால் உங்களுக்கு சிம்மாசனம் இருக்கிறது. அவர்கள் நாற்காலி கிடைக்க வேண்டும் என்று அதற்காக உயிரைக் கொடுத்து முயற்சி செய்கிறார்கள், ஆனால் உங்களுக்கு சிம்மாசனம் கிடைத்திருக்கிறது. எனவே அழியாத ஆசனத்தில் அமர்ந்திருக்கும் உயர்ந்த மரியாதையில் இருப்பவர்கள், தந்தையின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் என்ற இந்த மரியாதையிலேயே இருங்கள்.

எனவே எப்போதும் குஷியோடு இருங்கள் மேலும் மற்றவர்களுக்கு குஷியைக் கொடுங்கள். நல்லது. டில்லி சேவைக்கான அஸ்திவாரம். அஸ்திவாரம் உறுதி இல்லாமல் இருந்தால் அனைத்தும் உறுதி இல்லாமல் ஆகி விடும். எனவே எப்பொழுதும் உறுதியாக இருங்கள். நல்லது.

வரதானம்: அடிமைத்தனம் என்ற பந்தனத்தை முடிவு கட்டி உண்மையான சுதந்திரத்தை அனுபவம் செய்யும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!

உலகிற்கு அனைத்து சக்திகளையும் தானமாகக் கொடுப்பதற்கும் சுதந்திர ஆத்மா ஆகுங்கள். முதன் முதல் சுதந்திரம் பழைய உடலின் உள்ளே உள்ள சம்பந்தத்தில் இருக்கட்டும். ஏனென்றால் உடலின் அடிமைத்தனம் விரும்பாவிட்டாலும் அனேக பந்தனத்தில் கட்டிப் போட்டு விடுகிறது. அடிமைத்தனம் எப்பொழுதும் கீழ் நோக்கி கொண்டு செல்கிறது. பிரச்சனை நிறைந்த மற்றும் சோர்வான நிலையை அனுபவம் செய்விக்கிறது. அவர்களுக்கு எந்த ஒரு ஆதாரமும் தெளிவாகத் தென்படவில்லை. துக்கத்தின் அனுபவமும் இல்லை, குஷியின் அனுபவமும் இல்லை, இடையில் சுழலில் மாட்டிக் கொள்கிறார்கள். எனவே மாஸ்டர் சர்வ சக்திவானாகி அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபடுங்கள். உங்களுடைய உண்மையான சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள்.

சுலோகன்: பரமாத்மா சந்திப்பில் அனைத்து பிராப்திகளின் மகிழ்ச்சியை அனுபவம் செய்து திருப்தியான ஆத்மா ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 19.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உடல், மனம், செல்வம் மற்றும் ஞானத்தின் பாக்கியம்!

இன்று உண்மையான பிரபு, தன்னுடைய பிரபுக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையைக் கூறுவதே சத்தியம் என்று தான். எனவே பாப்தாதா மூலமாக ஸ்தாபனை செய்யப்பட்ட யுகத்தின் பெயர் கூட சத்தியயுகம் தான் தந்தையின் மகிமையைக் கூட சத்தியத் தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்தியமான குரு என்று தான் கூறுகிறார்கள். சத்தியத்தின் மகிமை எப்பொழுதும் உயர்வாகத்தான் இருக்கிறது. சத்தியமான தந்தை மூலமாக நீங்கள் அனைவரும் சத்திய நாராயணன் ஆவதற்காக சத்தியமான கதை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரியான உண்மையான பிரபு தன்னுடைய குழந்தைகளில் எவ்வளவு குழந்தைகள் உண்மையான பிரபுவைத் திருப்தி படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தார். கொடுப்பவர். படைப்பவர் மற்றும் வரமளிப்பவர் இது தான் உண்மையான பிரபுவின் மிகப் பெரிய விசேஷம். எப்பொழுதும் கொடுப்பவர். திருப்தியாக இருக்கிறார் இது தான் திருப்தியாக இருக்கும் குழந்தைகளின் அடையாளம். எனவே அந்த மாதிரியான ஆத்மாக்கள் எப்பொழுதும் தன்னை ஞானத்தின் பொக்கிஷம், சக்திகளின் பொக்கிஷம், குணங்களின் பொக்கிஷம், அனைத்துப் பொக்கிஷங்களினால் நிரம்பியவர்களாக அனுபவம் செய்வார்கள்.

ஒருபோதும் தன்னை பொக்கிஷங்களினால் காலியானதாக நினைக்க மாட்டார்கள். எந்த ஒரு குணம், சக்தி அல்லது ஞானத்தின் ஆழமான இரகசியத்திலிருந்து வஞ்சிக்கப்பட மாட்டார்கள். குணங்கள் மற்றும் சக்திகள் கூடுதலாக அல்லது குறைவாக சதவிகிதத்தில் இருக்குமேயன்றி ஒரு குணமும் இல்லை ஒரு சக்தியும் இல்லை என்ற நிலை இருக்க முடியாது. அப்படி இல்லை என்ற வார்த்தை அகற்றப்பட்டதாக இருக்கும். அப்படி வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் செல்வந்தர்களாக இருப்பார்கள் அதாவது நிரம்பியவர்களாகவும் முழுமையானவர்களாகவும் இருப்பார்கள். இரண்டாவது மகிமை பாக்கியத்தை அளிப்பவர் பாக்கியத்தை அளிக்கும் பிரபுவின் திருப்தியின் அடையாளம் மாஸ்டர் பாக்கியம் அளிக்கும் குழந்தைகளின் நெற்றியில் எப்பொழுதும் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கும், அதாவது அவர்களுடைய முகத்தில் எப்பொழுதும் ஆன்மீகப் பொலிவு தென்படும். உடலில் எப்பொழுதும் திருப்தியாக இருப்பதின் அம்சங்கள் தென்படும் மற்றும் முகம் மூலமாக ஆன்மீக நடவடிக்கைகள் அனுபவம் ஆகும். இதைத் தான் நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் பாக்கிய நட்சத்திரம் என்று கூறுவது ஒவ்வொரு விஷயத்திலும் உடல், மனம், பொருள், சம்பந்தத்தில் தன்னுடைய பாக்கியத்தை அனுபவம் செய்வார்கள். இதிலேயும் ஏதாவது ஒரு பாக்கியத்தின் பிராப்தியிலும் குறைவை உணருவார்கள் என்றும் இல்லை. என்னுடைய பாக்கியத்தில் மூன்று விஷயங்கள் சரியாக இருக்கிறது மற்றபடி ஒரு விஷயத்தில் குறை உள்ளது என்றும் இருக்காது.

உடலின் பாக்கியம்: உடலின் கணக்கு வழக்குகள் எப்போதாவது பிராப்தி அல்லது முயற்சி செய்யும் மார்க்கத்தில் தடை அனுபவம் ஆகாது மற்றும் உடல் சேவையிலிருந்து ஒருபோதும் வஞ்சிக்கப்பட விடுவதில்லை. கர்மத்தின் பலன்களை அனுபவிக்கும் நேரத்தில் கூட அந்த மாதிரி பாக்கியவான் ஏதாவது சேவைக்கு பொறுப்பானவராவார். அதன் வசமாகிக் கதற மாட்டார். கதறுவது என்றால் கர்ம பலன்களை அனுபவிப்பதை அடிக்கடி வர்ணனை செய்வது அல்லது அதன் பக்கம் அடிக்கடி புத்தியின் நினைவு மற்றும் நேரத்தை செலுத்திக் கொண்டே இருப்பது. மிகச் சிறிய விஷயத்தை பெரிது படுத்துவது இதைத் தான் கதறுவது என்று கூறுவது மேலும் பெரிய விஷயத்தை ஞானத்தின்

சாரத்தில் முடிப்பது இதைத்தான் நடத்திச் செல்வது என்று கூறுவது. எனவே யோகி வாழ்க்கையில் கர்ம பலன்களை அனுபவிப்பது சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் அதை வர்ணனை செய்யாதீர்கள், கர்ம பலன்களை அனுபவிப்பதின் கதையை விரிவாக்காதீர்கள் ஏனென்றால் வர்ணனை செய்வதால் நேரம் மற்றும் சக்தி அதன் பக்கமே இருக்கும் காரணத்தினால் சோல் கான்ஸியஷ் (ஆத்ம உணர்வு) ஆகாமல், ஹெல்த் கான்ஸியஷ் (தேக உணர்வு) ஆகி விடுகிறார்கள். இந்த ஹெல்த் கான்ஸியஷ் ஆன்மீக சக்தியிலிருந்து மெதுவாக நெர்வஸ் ஆக்கி விடுகிறது. எனவே ஒருபோதும் அதிகம் வர்ணனை செய்யாதீர்கள். யோகி வாழ்க்கை 'கர்மபோக்'ஐ (கர்ம பலன்களை அனுபவிப்பதை) கர்மயோகவாக மாற்றுவதாகும். இது தான் உடல் பாக்கியத்தின் அடையாளங்கள்.

மனதின் பாக்கியம்: மனம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும். ஏனென்றால் பாக்கியத்தின் பிராப்தியின் அடையாளமே மனதின் மகிழ்ச்சியாக இருப்பது தான். யார் நிரம்பியவராக இருப்பாரோ அவா எப்பொழுதும் மனதால் சிரித்துக் கொண்டே இருப்பார். பாக்கியத்தை அடைந்தவர்கள் இச்சா மாத்ரம் அவித்யா (ஆசை என்றால் என்னவென்று தெரியாத) நிலையில் இருப்பார்கள். பாக்கியத்தை அளிக்கும் வள்ளல் திருப்தியான காரணத்தால், அனைத்து பிராப்திகளின் முமையை அனுபவம் செய்யும் காரணத்தினால், மனதின் ஈடுபாடு, மனதினால் அடி பணிவது என்பது மனிதர்கள் பக்கமோ அல்லது பொருட்கள் மேலோ போகாது. இதைத்தான் சார ரூபத்தில் மன்மனாபவ என்று கூறுகிறீர்கள். மனதை தந்தை பக்கம் ஈடுபடுத்துவதில் கஷ்டம் இருக்காது ஆனால் மனம் சுலபமாக தந்தையின் அன்பின் உலகில் இருக்கும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த அனுபவத்தைத்தான் மனதின் பாக்கியம் என்று கூறுவது.

செல்வத்தின் பாக்கியம்: ஞான செல்வம் இருக்கவே இருக்கிறது ஆனால் ஸ்தூல செல்வத்திற்கும் மகத்துவம் இருக்கிறது. செல்வத்தின் பாக்கியம் என்றால் பிராமண வாழ்க்கையில் இலட்சாதிபதி அல்லது கோடீஸ்வரன் ஆவீர்கள் என்ற அர்த்தமல்ல ஆனால் செல்வத்தின் பாக்கியத்தின் அடையாளம் என்னவென்றால் சங்கமயுகத்தில் பிராமண

ஆத்மாக்களுக்கு உணவிற்கும், சௌகரியமாக வசிப்பதற்கு என்ன அவசியமோ அது மிகவும் எளிதாகக் கிடைக்கும். கூடவே சேவைக்காகவும் செல்வம் தேவையாக இருக்கிறது. சேவைக்காகவும் தேவையான நேரத்தில் குறைவையோ அல்லது இழுபறியான நிலையையோ அனுபவம் செய்ய மாட்டார்கள். எப்படியாவது எங்கிருந்தாவது சேவைக்குத் தேவையான நேரத்தில் பாக்கிய வள்ளல் தந்தை யாரையாவது பொறுப்பானவராக்கி கொடுத்தே விடுகிறார். செல்வத்தின் பாக்கியவான் ஆத்மாக்கள் ஒருபோதும் தன்னுடைய பெயர்-புகழ் ஆசையில் சேவை செய்ய மாட்டார்கள். ஒருவேளை பெயர் புகழுக்கு ஆசையிருந்தால் அந்த நேரம் பாக்கிய வள்ளல் உதவி செய்ய மாட்டார். அவசியமானது மற்றும் ஆசையில் இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கிறது. உண்மையான அவசியம் இருந்தால் மற்றும் உண்மையான மனம் இருந்தால் சேவையில் வெற்றி கிடைக்கவே செய்யும் கூடவே பண்டாரா இன்னும் நிரம்பி விடும். மிச்சமிருக்கும். எனவே தான் சிவனுடைய பண்டாராவும், சமையலறையும் எப்பொழுதும் நிரம்பியிருக்கும் என்ற மகிமை பாடப்பட்டிருக்கிறது. எனவே உண்மையான மனமுள்ளவர்களின் மற்றும் உண்மையான தந்தை திருப்தியாவதின் அடையாளம் பண்டாராவும் நிரம்பியிருக்கும், சமையலறையும் நிரம்பியிருக்கும். இது தான் செல்வத்தின் பாக்கியத்தின் அடையாளம். விரிவாகச் சொன்னால் நிறைய இருக்கிறது ஆனால் சுருக்கமாகக் கூறுகிறோம்.

நாலாவது விஷயம் மக்கள் பாக்கியம்: மக்கள் என்றால் பிராமணக் குடும்பம் மற்றும் லௌகீக குடும்பம். லௌகீக உறவில் வருபவர்கள் மற்றும் அலௌகீக சம்பந்தத்தில் வருபவர்கள். எனவே மக்கள் மூலமாக பாக்கியவானின் முதல் அடையாளம் -மக்கள் பாக்கியவான் ஆத்மாவிற்கு மக்கள் மூலமாக எப்பொழுதும் அன்பு மற்றும் உதவியின் பிராப்தி கிடைத்துக் கொண்டே இருக்கும். குறைந்தது 95- சதவீத ஆத்மாக்களிலிருந்து பிராப்தியின் அனுபவம் அவசியம் ஆகும். 5-சதவீத ஆத்மாக்களின் கணக்கு வழக்குகள் முடியும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். எனவே அவர்கள் மூலமாக எப்பொழுதாவது அன்பு கிடைக்கும் எப்பொழுதாவது சோதனையும் வரும் ஆனால் 5-சதவிகிதத்தை விட அதிகம் இருக்க முடியாது. அந்த மாதிரி ஆத்மாக்களுடனும் மெதுவாக சுப பாவனை, சுபகாமனா மூலமாகக்

கணக்கை முடித்துக் கொண்டேயிருங்கள். எப்பொழுது கணக்கு முடிந்து விடுகிறதோ அப்பொழுது புத்தகமும் முடிந்து விடும் இல்லையா? பின்பு கணக்கு வழக்குகள் இருக்கவே இருக்காது. அதனால் பாக்கியவான் ஆத்மாக்களின் அடையாளம் -மக்களிடம் விட்டுப் போன கணக்கு வழக்குகளை எளிதாக முடித்துக் கொண்டிருப்பது மற்றும் 95-சதவிகிதம் ஆத்மாக்கள் மூலமாக எப்பொழுதும் அன்பு மற்றும் உதவியை அனுபவம் செய்வது. மக்களின் பாக்கியவான் ஆத்மாக்கள், மக்களின் உறவு நெருக்கத்தில் வந்து எப்பொழுதும் பிரசன்னமாக இருப்பார்கள். கேள்விகள் நிறைந்தவர்களாக இல்லாமல் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருப்பார்கள். இவர் ஏன் இப்படி செய்கிறார் அல்லது ஏன் சொல்கிறார்? இந்த விஷயம் இப்படி இல்லை, இப்படி இருக்க வேண்டும்.. இந்த மாதிரி கேள்விகள் எழுப்புவர்களை கேள்விகள் (தலையில்) நிறைந்தவர்கள் என்று கூறப்படும். இந்த மாதிரியானவர்கள் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அவருடைய புத்தியில் எப்பொழுதும் ஏன் என்ற கேள்வியின் க்யூ இருக்கிறது. க்யூவை நீக்குவதிலேயே நேரம் சென்று விடுகிறது. மற்றும் இந்த க்யூ அப்படிப்பட்டது நீங்கள் விட விரும்பினாலும் விட முடியாது. நேரம் கொடுத்தே தான் ஆக வேண்டும். ஏனென்றால் இந்தக் க்யூவைப் படைப்பவர் நீங்கள் தான். எப்பொழுது படைத்து விட்டீர்களோ அதை வளர்க்கவும் வேண்டியதாக இருக்கிறது. வளர்ப்பதிலிருந்து விடுபட முடியாது. எவ்வளவு தான் நிர்பந்தங்கள் இருந்தாலும் நேரம் கொடுத்தே தான் ஆக வேண்டும். சக்தி கொடுத்தே தான் ஆக வேண்டும். எனவே இந்த வீணான படைப்பிற்கு கட்டுப்பாடு செய்யுங்கள். புரிந்ததா? தைரியம் இருக்கிறதா? எப்படி பொதுவாக இது இறைவனால் கொடுக்கப்பட்டது எங்களுடையது என்று தவறாக மனிதர்கள் கூறுகிறார்கள் இல்லையா? அதேபோல் ஆத்மாக்களும் இது டிராமாவில் அடங்கியிருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் டிராமாவின் மாஸ்டர் படைப்பவராகி மாஸ்டர் ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு காரியத்தையும் உயர்வானதாக ஆக்கிக் கொண்டே இருங்கள். நல்லது.

டீச்சர்ஸ் கேட்டீர்களா? உண்மையான பிரபு, என் மேல் எவ்வளவு திருப்தியாக இருக்கிறார். இதனுடைய இரகசியத்தைக் கேட்டீர்கள் இல்லையா? இரகசியத்தைக் கேட்டதனால் அனைத்து டீச்சர்களும் இரகசியம் தெரிந்து நடப்பவர்கள் ஆகி விட்டீர்களா? இல்லை இந்த

பாக்கியம் என்னுள் குறைவாக இருக்கிறது என்று மனதில் வருகிறதா? எப்பொழுதாவது பணத்திற்கான இழுப்பறியில், எப்பொழுதாவது மக்களின் இழுபறியில், அந்த மாதிரியான வாழ்க்கையின் அனுபவம் செய்யவில்லையே? ஒரே ஒரு சுலோகன் விசேஷமாக டீச்சர்ஸ்களுக்காக, ஆனால் அது அனைவருக்குமாகத்தான் ஏற்கனவே கூறியிருந்தோம். ஒவ்வொரு விஷயத்திலும் ஸ்ரீமத்படி சரி ஐயா, சரி ஐயா (ஜீஹுர், ஜீ ஹஜூர்) என்று சொல்லி நடந்து கொள்ளுங்கள். குழந்தைகள் சரி ஐயா என்று சொன்னால் தந்தை குழந்தைகள் முன்னால் ஆஜர் ஐயா ஆவது! எப்பொழுது ஐயா ஆஜராகி விட்டாரோ அப்பொழுது எந்த ஒரு விஷயத்திலும் குறை இருக்காது, எப்பொழுதும் நிரம்பி விடுவார்கள். வள்ளல் மற்றும் பாக்கியத்தை அளிப்பவர் -இருவரின் பிராப்திகளின் பாக்கியத்தின் நட்சத்திரம் நெற்றியில் மின்னத் தொடங்கி விடும். டிராமாப்படி டீச்சர்களுக்கு அதிக பாக்கியம் கிடைத்திருக்கிறது. முழு நாளும் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு என்ன வேலை. தொழிலே இது தான். குடும்பத்தில் இருப்பவர்களோ எவ்வளவு பொறுப்புக்களை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் உங்களுக்கோ ஒரே ஒரு வேலை தான், நிறைய விஷயங்களில் சுதந்திரப்பறவை. உங்களுடைய பாக்கியத்தைத் தெரிந்து கொண்டீர்களா? ஏதாவது தங்கத்தினாலான கூண்டோ வெள்ளியிலான கூண்டோ செய்து விடவில்லையே? செய்வதும் நீங்கள் தான் மாட்டிக் கொள்வதும் நீங்கள் தான். தந்தையோ சுதந்திரமான பறக்கும் பறவை ஆக்கியிருக்கிறார். மிக, மிக, மிக அதிர்ஷ்டசாலிகள் புரிந்ததா? ஒவ்வொருவருக்கும் பாக்கியத்தின் விசேஷத்தன்மை கண்டிப்பாகக் கிடைத்திருக்கிறது. குடும்பத்தில் இருப்பவர்களின் விசேஷத்தன்மை வேறு, டீச்சர்ஸ்களின் விசேஷத்தன்மை வேறு, கீதாபாடசாலை நடத்துபவர்களின் விசேஷத்தன்மை வேறு. விதவிதமான விசேஷங்களினால் அனைவரும் விசேஷ ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் ஆனால் சேவை நிலையத்தில் இருக்கும் பொறுப்பு டீச்சர்களுக்கு மிக நல்ல வாய்ப்பு. நல்லது.

எப்பொழுதும் அனைத்து விதமான பாக்கியத்தை அனுபவம் செய்யும் அனுபவி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் சரி ஐயா என்று சொல்லும் தந்தையின் உதவிக்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரச்சனைகள் எதுவும் இல்லாமல்

பிரசன்னமாக இருக்கும் அந்த மாதிரி பாராட்டுக்குத் தகுதியான யோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேச குரூப்: அனைவரும் உங்களை மஹாவீரர்கள் மற்றும் மகாவீரணிகள் என்று நினைக்கிறீர்களா? மகாவீரர்கள் தான் ஆனால் எப்பொழுதும் மகாவீரர்களா? அல்லது எப்போதாவது மகாவீர் எப்போதாவது கொஞ்சம் பலஹீனம் ஆகி விடுகிறீர்களா? எப்பொழுதும் மகாவீரர் என்றால் எப்பொழுதும் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ். ஞானம் தான் லைட் மற்றும் யோகா தான் மைட், எனவே மஹாவீரர் என்றால் ஞான சொரூபமான ஆத்மாவும், யோக சொரூபமான ஆத்மாவும் தான். ஞானம் மற்றும் யோகம் -இரண்டு சக்திகள் லைட் மற்றும் மைட் இரண்டும் நிரம்பியிருப்பது -இதைத்தான் மஹாவீரர் என்று கூறுவது. எந்த ஒரு சூழ்நிலையிலும் ஞானம் அதாவது லைட்டிற்கு குறைவு இருக்கக்கூடாது மற்றும் மைட் அதாவது யோகத்திற்கு குறைவு இருக்கக்கூடாது. ஒருவேளை ஒன்றின் குறை இருந்தால் கூட சூழ்நிலையில் ஒரு நொடியில் வெற்றி அடைய முடியாது. நேரம் எடுத்துக் கொள்ளும். வெற்றி அடைவார்கள் ஆனால் நேரத்தில் வெற்றி அடையவில்லை என்றால், என்ன வெற்றியடைந்தார்கள். வெளியுலகப் படிப்பிலும் ஒருவேளை ஏதாவது ஒரு பாடத்தில் பெயில் ஆகி விட்டால் பின்பு ஒரு வருஷம் படிக்க வேண்டியதிருக்கிறது. ஒரு வருடம் கழித்து வெற்றியடைந்தார்கள் என்றால் நேரம் போய்விட்டது. இல்லையா? அதேபோல் யார் ஞான சொரூப, யோக சொரூப ஆத்மாவோ, லைட் மற்றும் மைட் இரண்டு சொரூபமும் இல்லையென்றால், அவருக்கும் சூழ்நிலையைக் கடந்து செல்ல சமயம் எடுக்கும். ஒருவேளை நேரத்தில் வெற்றியாகத சம்ஸ்காரம் ஏற்பட்டு விட்டால் கடைசியிலும் அந்த சம்ஸ்காரம் முழுமையாக வெற்றி அடைய விடுவதில்லை. வெற்றியடைபவர்கள் தான் ஆனால் நேரத்தில் வெற்றி அடைபவர்கள் இல்லை. யார் எப்பொழுதும் நேரத்தில் வெற்றி அடைகிறார்களோ அவரைத்தான் மதிப்புடன் தேர்ச்சி அடைந்தவர்கள் (பாஸ் வித் ஹானர்) என்று கூறுவது. பாஸ் வித் ஹானர் என்றால் தர்மராஜரும் அவருக்கு ஹானர் (மதிப்பு) கொடுப்பார். தர்மராஜ்புரியிலும் தண்டனை இருக்காது. மதிப்பு இருக்கும். இவர் மதிப்புடன் வெற்றி அடைந்தவர் என்ற மகிமை இருக்கும். எனவே பாஸ் வித் ஹானர் ஆவதற்கு விசேஷமாகத்

தன்னை எந்த விஷயத்திலும், எந்த சம்ஸ்காரத்திலும், சுபாவத்தில், குணத்தில், சக்தியில் குறை வைத்துக் கொள்ளாதீர்கள். அனைத்து விஷயங்களிலும் முழுமையாகுங்கள் அதாவது பாஸ் வித் ஹானர் ஆகுங்கள். அனைவரும் அப்படி ஆகி விட்டீர்களா இல்லை ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? (ஆகிக் கொண்டிருக்கிறோம்). எனவே தான் வினாசம் நின்றிருக்கிறது. நீங்கள் நிறுத்தியிருக்கிறீர்கள். உலகின் வினாசம் அதாவது மாற்றத்திற்கு முன்பு பிராமணர்களின் குறைகளின் வினாசம் ஏற்பட வேண்டியதிருக்கிறது. ஒருவேளை பிராமணர்களின் குறைகளின் வினாசம் ஆகவில்லை என்றால் உலகின் வினாசம் அதாவது மாற்றம் எப்படி ஏற்படும். எனவே மாற்றத்தின் ஆதார மூர்த்தி நீங்கள் பிராமணர்கள் தான்.

பஞ்சாப், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் முதலில் தயாராக வேண்டும். முடிவைக் கொண்டு வருபவர்கள் நீங்கள் தயாராகவில்லை. எனவே தீவிரவாதிகள் தயாராகி விட்டார்கள். என்ன அனைவரும் முதல் நம்பர் எடுப்பவர்களா இல்லை என்ன கிடைக்கிறதோ அதில் திருப்தியடைபவர்களா? நிறைய பேர்களை விட நான் நன்றாக இருக்கிறேன் என்று அப்படி நினைக்கவில்லையே? நன்றாகத் தான் இருக்கிறீர்கள் ஆனால் நல்லதிலும் நல்லதாக வேண்டும். கோடியில் சிலராகி விட்டீர்கள் இது பெரிய விஷயமில்லை ஆனால் அந்த சிலரிலும் சிலராக வேண்டும். எனவே எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். கடைசியில் தயாராகி விடுவேன் என்பது கூடாது. எவரெடி என்றாலே எப்பொழுதும் தயாராக இருப்பது. ஒருவேளை ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் முயற்சி தீவிரமாக இல்லை என்பதாகும்.

தந்தையின் பார்வை முதலில் பஞ்சாபில் விழுந்தது இல்லையா? எப்பொழுது தந்தையின் பார்வை முதலில் பட்டதோ அப்பொழுது முதல் நம்பரில் தான் வர வேண்டும். அஸ்திவாரம் போட்டவர்கள். அஸ்திவாரம் எப்பொழுதும் உறுதியாக இருக்கும். ஒருவேளை உறுதி இல்லாமல் இருந்தால் முழு கட்டிடமே உறுதியில்லாமல் ஆகி விடும். எனவே ஒவ்வொரு சூழ்நிலையிலும் பாஸ் வித் ஹானர் ஆகுபர்கள் என்ற வரதானத்தை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எவரெடியாக இருப்பது தான் இதற்கான விதி. நல்லது.

அனைத்திலும் பெரிய மண்டலம் மதுபன்னே தான். அனைத்து பிரம்மா குமார், பிரம்மா குமாரிகளின் உண்மையான வீடு மதுபன்னே தான். ஆத்மாக்களின் வீடு பரந்தாமம் ஆனால் பிராமணர்களின் வீடு மதுபன். எனவே அமிர்தசரஸ், லூதியானாவைச் சேர்ந்தவர்கள் இல்லை, பஞ்சாப், ஹரியானாவைச் சேர்ந்தவர்கள் இல்லை நீங்கள், உங்களுடைய நிரந்தரமான விலாசம் மதுபன் தான். மற்ற அனைத்தும் சேவை நிலையங்கள். குடும்பத்தில் இருந்தாலும் சேவை நிலையம்தான் வீடு அல்ல. இனிமையான வீடு மதுபன். அந்த மாதிரி நினைக்கிறீர்கள் தானே. இல்லை அந்த வீடு ஞாபகம் வருகிறதா? நல்லது.

வரதானம்: எஜமானத் தன்மையின் நினைவு மூலமாக மிக உயர்ந்த அதிகாரத்தை அனுபவம் செய்யும் இணைந்த (கம்பைண்ட்) சொரூபமானவர்கள் ஆகுக!

முதலில் உங்களுடைய ஆத்மா மற்றும் உடலின் இணைந்த ரூபத்தின் நினைவை வைத்துக் கொள்ளுங்கள். உடல் படைப்பு, ஆத்மா படைப்பவர். இதன் மூலமாக எஜமானத் தன்மை தானாகவே நினைவில் இருக்கும். எஜமானத் தன்மையின் நினைவு மூலமாக தன்னை மிக உயர்ந்த அதிகாரம் உள்ளவர் என்று அனுபவம் செய்வார்கள். உடலை நடத்திக் கொண்டு செல்பவராக இருப்பார். இரண்டாவது தந்தை மற்றும் குழந்தையின் (சிவ சக்தியின்) இணைந்த சொரூபத்தின் நினைவு மாயாவின் தடைகளை அதிகாரத்தோடு கடந்து விடுவார்கள்.

சுலோகன்: விஸ்தாரத்தை ஒரு நொடியில் உள்ளடக்கி ஞானத்தின் சாரத்தை அனுபவம் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வரமளிக்கும் வள்ளலை திருப்திபடுத்துவதற்கான எளிதான விதி!

இன்று வரமளிக்கும் வள்ளல் தந்தை தன்னுடைய வரதானி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகள் அனைவருமே வரதானிகள் தான், ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். வரமளிக்கும் வள்ளல் அனைத்துக் குழந்தைகளுக்கும் வரதானங்களின் பையை நிரம்பித்தான் கொடுக்கிறார் இருந்தாலும் வரிசை ஏன்? வரமளிக்கும் வள்ளல் கொடுக்கும்பொழுது வரிசைப்படி கொடுப்பது இல்லை ஏனென்றால் வரமளிக்கும் வள்ளலிடம் அளவில்லா வரதானம் இருக்கிறது, திறந்த பெட்டகம் எவ்வளவு எடுக்க விரும்பினாலும் எடுத்துக் கொள்ளலாம். அந்த மாதிரி திறந்த பெட்டகத்தினால் அனேக குழந்தைகள் அனைத்து வரதானங்களினால் நிரம்பியவர்கள் ஆகிறார்கள். மேலும் சில குழந்தைகள் எவ்வளவு சக்தியோ அந்த அளவு நிரம்பியவர்கள் ஆகிறார்கள். மிகவும் அதிகமாகப் பையை நிரப்பிக் கொடுப்பதில் போலாநாத் வரமளிக்கும் வள்ளல் ரூபத்தில் தான் இருக்கிறார். வள்ளல், பாக்கியத்தை உருவாக்குபவர் மற்றும் வரமளிக்கும் வள்ளல் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். மூன்றிலும் வரதாதா ரூபத்தில் தான் வெகுளியான கடவுள் என்று கூறப்படுகிறது. ஏனென்றால் வரதாதா விரைவில் திருப்தி அடைந்து விடுகிறார். திருப்திப்படுத்துவதற்கான விதியை மட்டும் தெரிந்து கொண்டீர்கள் என்றால் சித்தி அதாவது வரதானங்களின் பைகள் நிரம்புவது மிகவும் சுலபமாகி விடும். வரதாதாவை திருப்திப்படுத்துவதற்கான சுலபமான விதி என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? யாரை அவருக்கு மிகவும் பிடிக்கும்? அவருக்கு ஒன்று என்ற வார்த்தை மிகவும் பிடிக்கும். எந்தக் குழந்தை ஆரம்பத்திலிருந்து இது வரை ஏக்விரதா (ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை) என்று இருக்கிறார்களோ அவர்கள் தான் மிகவும் அன்பிற்குரியவர்கள்.

ஏக்விரதா என்றால் பதிவிரதா மட்டுமில்லை அனைத்து உறவுகளிலும் ஏக்விரதா. எண்ணத்திலும், கனவிலும் ஒருவரைத் தவிர வேறு யாருமில்லை. ஏக்விரதா என்றால் எப்பொழுதும் உள்ளுணர்வில் ஒருவர் மட்டும் தான். இன்னொன்று எப்பொழுதும் எனக்கு ஒருவரைத் தவிர வேறு யாருமில்லை என்ற விரதத்தை உறுதியாக எடுத்தவராக இருக்க வேண்டும். சில குழந்தைகள் ஏக்விரதா ஆவதில் புத்திசாலித்தனத்தைக் காண்பிக்கிறார்கள். எந்த புத்திசாலித்தனம்? தந்தை, ஆசிரியர், சத்குரு என்ற முக்கிய சம்பந்தங்கள் உங்களுடன் இருக்கிறது ஆனால் இவ்வுலகில் உடலில் இருக்கும் காரணத்தினால், இவ்வுலகில் காரியங்கள் செய்யும் காரணத்தினால் ஏதாவது ஒரு நபர் நண்பனாக உதவிக்காகவும், சேவைக்காகவும், தேவையான நேரத்தில் கருத்துப் பரிமாறிக் கொள்வதற்கும் சாகாரத்தில் கண்டிப்பாக யாராவது வேண்டியதிருக்கிறது, ஏனென்றால் தந்தை நிராகாரமாக இருக்கிறார் என்று தந்தையிடமே இனிமையாகப் பேசுகிறார்கள். வேறு ஒன்றுமே இல்லை உடலற்றவருடன் சூட்சும உடலுள்ளவருடனும் சந்திப்பை, தொடர்பை ஏற்படுத்துவதற்கு தன்னையும் நிராகார, ஆகார (சூட்சும உடல்) நிலையில் நிலைத்து வைக்க வேண்டியதாக இருக்கிறது. அது தான் எப்போதாவது கடினமாகி விடுகிறது. எனவே தேவையான பொழுது உடலுள்ள துணை தேவையாக இருக்கிறது. எப்பொழுது புத்தியில் நிறைய விஷயங்கள் நிரம்பி விட்டால் என்ன செய்வார்கள்? கேட்பவர் தேவையில்லையா? ஏக்விரதாவாக இருக்கும் ஆத்மாவிற்கு மற்றவர்களிடம் சொல்லும் அளவிற்கு சுமையான விஷயங்கள் ஒன்றாகச் சேருவதில்லை. ஒரு பக்கம் பாபா நீங்கள் தான் எப்பொழுதும் என்கூடவே இருக்கிறீர்கள் என்று தந்தையைக் குஷிப்படுத்தி விடுகிறீர்கள். தந்தை எப்பொழுதும் என் உடன் இருக்கிறார், துணைவன் என்றால் அந்த நேரம் எங்கே போய் விடுகிறார்? தந்தை சென்று விடுகிறாரா? இல்லை நீங்கள் அவரை விட்டு ஒதுங்கி விடுகிறீர்களா? ஒவ்வொரு நேரமும் உடன் இருக்கிறாரா? இல்லை 6-8 மணி நேரம் தான் இருக்கிறாரா? என்ன உறுதி அளித்திருக்கிறீர்கள்? உடன் இருக்கிறோம், உடன் இருப்போம், உடன் செல்வோம் என்று சொன்னது உறுதியானது தானே? முழுச் சக்கரத்திலும் உங்களுடன் வருவோம் என்று பிரம்மாபாபாவிடம் உறுதியளித்திருக்கிறீர்கள். இப்படி உறுதி அளித்த பின்பும் உடலுள்ள நபர் யாராவது துணையாகத் தேவை

இருக்கிறதா? பாப்தாதாவிடம் அனைவரின் ஜாதகமும் இருக்கிறது. நீங்கள் தான் என்னுடைய துணை என்று தந்தை முன்பு கூறுவார்கள். சூழ்நிலை வரும் போது இதெல்லாம் நடக்கத்தான் செய்யும், ஓரளவிற்கு வேண்டுமில்லையா என்று தந்தைக்கே புரிய வைக்க ஆரம்பித்து விடுவார்கள். இதை ஏக்விரதா என்று கூற முடியுமா? துணையாக உடன் இருக்கிறார்கள் என்றார் அனைவரும் தான் இருக்கிறார்கள், யாரும் விசேஷமானவர்கள் இல்லை. இதைத்தான் ஏக் விரதா என்று கூறுவது. எனவே வரதாதாவிற்கு அந்த மாதிரிக் குழந்தைகள் மிகப் பிரியமானவர்கள். அந்த மாதிரிக் குழந்தைகளின் ஒவ்வொரு நேரத்தின் அனைத்துப் பொறுப்புக்களையும் வரதாதா தந்தை அவரே தன் மேல் எடுத்துக் கொள்கிறார். அந்த மாதிரி வரதானி ஆத்மாக்கள் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வரதானங்களின் பிராப்தியின் நிரம்பிய நிலையை அனுபவம் செய்கிறார்கள். மேலும் எளிதாகக் கடந்து செல்கிறார்கள் மற்றும் பாஸ் வித் ஆனர் ஆகிறார்கள். எப்பொழுது வரதாதா அனைத்துப் பொறுப்புக்களையும் தானே எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறாரோ பின்பு நீங்கள் ஏன் உங்கள் மேலேயே பொறுப்புக்களின் சுமையை எடுத்து வைத்துக் கொள்கிறீர்கள். என்னுடைய பொறுப்பு என்று நினைக்கும் பொழுது தான் சூழ்நிலையில் பாஸ் வித் ஆனர் ஆவதில்லை, ஆனால் தள்ளப்பட்டு பாஸ் ஆகிறீர்கள். சிலருக்கு யாருடையவாவது துணை என்ற தள்ளல் தேவையாக இருக்கிறது. ஒருவேளை பேட்டரி புல் சார்ஜ் இல்லையென்றால் தள்ளி விட்டு ஸ்டார்ட் பண்ணுகிறார்கள் இல்லையா! தனியாகத் தள்ள முடியாது. உடன் யாராவது இருந்தால் தான் தள்ள முடியும். எனவே தான் வரதானிகள் வரிசைக்கிரமமாகி விடுகிறார்கள். எனவே வரதாதாவிற்கு ஒரு வார்த்தை மிகவும் பிடித்தமானது அதுதான் “ஏக்விரதா”. ஒரு பலம் ஒரு நம்பிக்கை. ஒருவரின் நம்பிக்கை இன்னொருவரின் பலம் அப்படி சொல்லப்படுவதில்லை. ஒரு பலம் ஒரு நம்பிக்கை என்று தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கூடவே ஒரு வழி, மனம் சொல்லும் வழியும் இல்லை மற்றவர்கள் கூறும் வழியும் இல்லை. ஒரு ரசனை வேறு ஒரு நபரின் ரசனை மற்றும் பொருட்களின் மேல் ரசனை இல்லை. அதே போல்தான் ஒன்றாக இருப்பது, தனிமையை விரும்புவது அப்படியானால் ஒரு வார்த்தை தான் பிரியமானது இல்லையா. அதே போல் நீங்கள் இதை யோசித்து இன்னும் வெளிக் கொண்டு வாருங்கள்.

ஒன்றிலேயே திருப்தியடைந்து விடும் அளவிற்கு தந்தை வெகுளியானவர். அந்த மாதிரி போலாநாத், வரதாதாவை திருப்தி படுத்துவது என்ன கடினமாக இருக்கிறதா? ஒரே ஒரு விஷயத்தை மட்டும் உறுதிப்படுத்துங்கள் ஐந்து, ஆறு விஷயங்களில் போவதற்கு அவசியமே இல்லை. வரதாதாவை திருப்திபடுத்துபவர் அமிர்த வேளையிலிருந்து இரவு வரை நாளின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் வரதானங்களினால் தான் வளர்கிறார்கள். அந்த மாதிரி வரதானி ஆத்மாக்களுக்கு மனதாலும் சரி. நெருக்கம் உறவிலும் சரி கடினம் அனுபவம் ஆகாது. ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு வினாடியிலும், ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு அடியிலும் வரமளிப்பவரும் வரதானமும் எப்பொழுதும் அருகாமையில் மற்றும் நேரில் நடைமுறையில் அனுபவம் ஆகும். நேர் எதிரில் பேசுவது போல் அனுபவம் செய்வார்கள். அவர்களுக்கு எதையும் கஷ்டப்பட்டுச் செய்ய வேண்டும் என்பது அனுபவம் ஆகாது. அந்த மாதிரி வரதானி ஆத்மாக்களுக்கு நிராகாரத்தையும் (உடலற்றவரையும்) ஆகாரத்தையும் (சூட்சும உடலுள்ளவரையும்) சாகாரத்தில் (நேருக்கு நேர்) அனுபவம் செய்யும்படி வரதானம் கிடைத்திருக்கிறது. அந்த மாதிரி வரதானிகள் முன் ஹஜீர் (பாபா) எப்பொழுதும் ஆஜராக இருக்கிறார். கேட்டீர்களா? வரதாதாவை திருப்தி படுத்துவதின் விதி மற்றும் சித்தியை ஒரு விநாடியில் அடைய முடியுமோ? ஒன்றில் இரண்டைக் கலக்காதீர்கள் அவ்வளவு தான். அனைத்தும் ஒருவர் என்ற பாடத்தை விரிவாகப் பின்பு கூறுவோம்.

பாப்தாதாவிடம் அனைத்துக் குழந்தைகளின் சரித்திரமும் இருக்கிறது மற்றும் புத்திசாலித்தனமாகச் செய்த குறும்புகளும் இருக்கிறது. முழு ரிஸல்ட்டும் பாப்தாதாவிடம் இருக்கிறது இல்லையா. குறும்புத்தனமான காரியங்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கின்றன. புதுப்புது விஷயங்களைக் கூறுகிறார்கள். கேட்டுக் கொண்டே இருக்கிறோம். பெயரைக் குறிப்பிடுவதில்லை; அதனால் தான் செய்வது தெரியாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். இருந்தபோதிலும் வாய்ப்பு கொடுத்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகள் உண்மையான புத்திசாலித்தனத்தில் வெகுளியாக இருக்கிறார்கள்

என்று பாப்தாதா நினைக்கிறார். அந்த மாதிரி வெகுளியாகாதீர்கள். நல்லது.

வெளிநாடுகளைச் சுற்றிவிட்டு குழந்தைகள் வந்து சேர்ந்து விட்டார்கள் (ஜானகி தாதி, டாக்டர் நிர்மலா, ஜகதீஷ் பாய் வெளிநாடு சென்று திரும்பி வந்திருக்கிறார்கள்): நல்ல ரிஸல்ட் கிடைத்திருக்கிறது. மேலும் எப்பொழுதும் சேவையின் வெற்றி இன்னும் அதிகரிக்கவே வேண்டும். ஐ.நா. சபைக்கும் விசேஷமான சேவைக் காரியத்தில் தொடர்பு இருக்கிறது. பெயர் என்னவோ அவர்களுடையது ஆனால் உங்களுடைய காரியம் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆத்மாக்களுக்கு சுலபமாக செய்தி போய்ச் சேர வேண்டும் என்ற உங்களுடைய காரியம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே (ரஷ்யா) நடந்த புரோகிராமும் நன்றாக இருந்தது. ரஷ்யா பாக்கி இருந்தது. அவர்களும் வர வேண்டியவர்கள் தான். பாப்தாதா முன்பே வெற்றிக்கான அன்பு நினைவுகளைக் கொடுத்து விட்டார். பாரதத்தின் தூதுவராகிச் சென்றீர்கள். எனவே பாரதத்தின் பெயர் புகழடைந்தது இல்லையா? சக்கரவர்த்தி ஆகி சக்கரம் போல் சுற்றி வருவதில் மகிழ்ச்சி இருக்கிறது இல்லையா. எவ்வளவு ஆசீர்வாதங்களைப் பெற்று வந்திருக்கிறீர்கள். நிர்மல் ஆஸ்ரமம் (டாக்டர் நிர்மலா) கூட சுற்றி வந்து கொண்டே இருக்கிறார். அனைவருமே சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள் ஆனால் எந்த நேரம் விசேஷ சேவை நடக்கிறதோ அப்பொழுது விசேஷ சேவைக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கிறோம். சேவையில்லாமல் இருக்கவே முடியாது. லண்டன், அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா என்று நான்கு ஜோன்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா. ஐந்தாவது பாரதம். சந்திப்பதற்காக பாரதவாசிகளுக்கு முதல் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. என்ன செய்து வந்திருக்கிறீர்களோ மற்றும் வரும் நாட்களில் என்ன செய்வீர்களோ எல்லாமே நன்றாக இருக்கிறது. மேலும் நன்றாகவே இருக்கும். நான்கு ஜோன்களைச் சேர்ந்த அனைத்து வெளிநாட்டுக் குழந்தைகளுக்கும் இன்று விசேஷ அன்பு நினைவுகள் கொடுக்கிறோம். ரஷ்யாவும் ஆசியாவில் வந்து விடுகிறது. சேவையின் முடிவுகள் நன்றாக இருக்கிறது. தைரியமும் நன்றாக இருக்கிறது கூடவே உதவியும் கிடைக்கிறது; மேலும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். பாரதத்திலும் பெரிய அளவில் புரோகிராம் செய்வதற்கு திட்டம்

வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் விசேஷத் தன்மை மற்றும் சேவையின் ஈடு பாட்டில் மூழ்கியிருப்பதற்காக வாழ்த்துக்களும் அன்பு நினைவுகளும். நல்லது.

அனைத்துக் குழந்தைகளும் எளிதாக நடந்து கொள்ளும் சித்தியை அடைவதற்காகக் கூறிய விதியை எப்பொழுதும் உபயோகத்தில் கொண்டு வரும் சகஜயோகிகளுக்கு, எப்பொழுதும் வரமளிக்கும் வள்ளலின் வரதானங்களினால் நிரம்பிய வரதானி குழந்தைகளுக்கு எப்பொழுதும் ஒருவர் என்ற பாடத்தை நடைமுறையில் கொண்டு வருபவர்களுக்கு, எப்பொழுதும் நிராகார ஆகாரத் தந்தையின் துணையின் அனுபவத்தினால் எப்பொழுதும் சாகார சொரூபத்தில் எதிரில் இருப்பதாக அனுபவம் செய்பவர்களுக்கு, அந்த மாதிரி எப்பொழுதும் வரதானிக் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் வள்ளல், பாக்கியத்தை உருவாக்குபவர் மற்றும் வரமளிக்கும் வள்ளலின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதி ஜானகியுடன் சந்திப்பு: எவ்வளவு அனைவருக்கும் தந்தையின் அன்பைக் கொடுக்கிறீர்ககளோ அவ்வளவு அன்பின் பொக்கிஷம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நேரமும் அன்பின் மழை பொழிகிறது என்று அனுபவம் ஆகிறது இல்லையா. ஒரு அடியில் அன்பு கொடுங்கள் மேலும் அடிக்கடி அன்பு எடுத்துக் கொள்ளுங்கள். அனைவருக்கும் அன்புதான் வேண்டும். ஞானம் கேட்டாகி விட்டது இல்லையா! ஒரு குழந்தைக்கு அன்பு வேண்டும் மற்றும் இன்னொரு குழந்தைக்கு சக்தி வேண்டும். அப்படியானால் என்ன சேவை செய்தீர்கள். சிலருக்கு தந்தை மூலமாக அன்பு கொடுத்தீர்கள். மேலும் சிலருக்குத் தந்தை மூலமாகச் சக்தி கொடுத்தீர்கள், இந்த சேவை தானே செய்தீர்கள். ஞானத்தின் இரகசியங்களைத் தெரிந்து கொண்டார்கள் மேலே கீழே போய்க் கொண்டிருக்கும் அவர்களுடைய ஊக்கம் உற்சாகம் எப்பொழுதும் நிலைத்து இருக்க வேண்டும், இது தான் அவர்களுக்கு இப்பொழுது தேவை. இருந்தாலும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு வேறு தர்மங்களில் சென்று வேறு தேசம் பழக்க வழக்கங்களில் சென்ற பிறகும் பாபா குழந்தையாக இருக்கிறார்கள், சிலர் வாரிசாகவும் ஆகி விட்டார்கள், அதற்காக பாப்தாதா பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். நல்லது.

மஹாராஷ்டிரா -பூனா குரூப்: அனைவரும் மகான் ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? முதலில் உங்களை மஹாராஷ்டிராவில் வசிப்பவர்கள் என்று மட்டும் கூறிக் கொண்டிருந்தீர்கள், இப்பொழுது நீங்களே மகான் ஆகி விட்டீர்கள். தந்தை வந்து ஒவ்வொரு குழந்தையையும் மகான் ஆக்கி விட்டார். உலகத்தில் உங்களை விட மகான் வேறு யாராவது இருக்கிறார்களா? மிகவும் கீழாகப் பாரதவாசிகள் இறங்கி விட்டார்கள் அதிலேயும் 84-ஜென்மங்கள் எடுத்த பிராமண ஆத்மாக்கள் மிகவும் கீழே வந்து விட்டார்கள். எவ்வளவு கீழே இறங்கினீர்களோ அவ்வளவு இப்பொழுது உயர்வாக எழுந்து விட்டீர்கள். பிராமணன் என்றால் உயர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். அதன் அதனால் தான் அடையாளமாக குடுமி காண்பித்திருக்கிறார்கள். உயர்வான இடத்திற்கு குன்று என்று கூறப்படும். மலையின் உயர்ந்த பகுதியையும் மலை உச்சி என்று கூறுவார்கள். அதனால் எதிலிருந்து எதுவாக மாறி விட்டேன் என்ற குஷி இருக்கிறது. பாண்டவர்களுக்கு அதிக ஏனென்றால் சக்திகளை மிகவும் கீழே தள்ளி விட்டு விட்டார்கள்.

துவாபரயுகத்திலிருந்து ஆண் உடலுள்ளவர்கள் தான் ஏதாவது பதவியை அடைந்திருக்கிறார்கள். மதங்களில் கூட இப்பொழுது பெண்கள் மஹாமண்டேலஸ்வரிகள் ஆகியிருக்கிறார்கள். இல்லையென்றால் பொதுவாக மஹாமண்டலேஸ்வரர் என்று தான் மகிமை செய்யப்படுகிறார்கள். எப்பொழுதிலிருந்து தந்தை பெண்களை முன்னுக்கு வைத்தாரோ அப்பொழுதிலிருந்து அவர்களும் 2-4 மண்டலேஸ்வரிகள் வைத்து விட்டார்கள். இல்லையென்றால் மத செயல்பாடுகளில் பெண்களுக்கு ஒருபோதும் இடம் கொடுப்பதில்லை. எனவேதான் மாதர்களுக்கு அதிகமாகக் குஷியிருக்கிறது மற்றும் பாண்டவர்களுக்கும் மகிமை இருக்கிறது. பாண்டவர்கள் வெற்றியை அடைந்தார்கள். பெயர் பாண்டவர்களுக்கு வருகிறது ஆனால் பூஜை அதிகமாகச் சக்திகளுக்கு நடக்கிறது. முதலில் குருக்களுக்கு செய்து முடித்து விட்டார்கள். இப்பொழுது சக்திகளுக்கு செய்கிறார்கள். கண் முழித்திருப்பது கணேஷ் அல்ல ஹனுமானுக்காக செய்வதில்லை, சக்திகளுக்கு செய்கிறார்கள். ஏனென்றால் இப்பொழுது சக்திகள் விழித்தெழுந்து விட்டார்கள். அதனால் சக்திகள் உங்கள் சக்தி ரூபத்தில் இருக்கிறீர்கள் தானே. இல்லை எப்பொழுதாவது பலஹீனமாகி

விடுகிறீர்களா? மாதர்களுக்கு உடல் சம்பந்தப்பட்ட உறவினர்களின் பற்றுதல் பலஹீனமாக்கி விடுகிறது. கொஞ்சம் கொஞ்சம் குழந்தைகள் மேல், பேரன், பேத்தி மேல் பற்றுதல் இருக்கிறது மற்றும் பாண்டவர்களை எந்த விஷயம் பலஹீனம் ஆக்குகிறது? பாண்டவர்களுக்கு அகங்காரத்தின் காரணத்தினால் விரைவில் கோபம் வந்து விடுகிறது ஆனால் இப்பொழுது வெற்றி கிடைத்து விட்டது இல்லையா? இப்பொழுது பாண்டவர்கள் அமைதி சொரூபமாகி விட்டார்கள். கோபத்தின் அடையாளம் அம்ச மாத்திரம் கூடத் தென்படுவதில்லை. பார்வை மற்றும் நடந்து கொள்வதிலும் இருக்க வேண்டாம். சிலர் கோபம் இல்லை ஆனால் ஆவேசம் வருகிறது என்று கூறுகிறார்கள். அதுவும் என்ன அதுவும் கோபத்தின் அம்சம் தானே. எனவே பாண்டவர்கள் அமைதி, வார்த்தை வெற்றியடைந்தவர்கள் அதாவது எண்ணத்திலும் மற்றும் செயலிலும் அமைதி சொரூபம், மாதர்கள் நீங்கள் முழு உலகிற்கு முன்பு பற்றற்ற நிலையைக் காண்பியுங்கள். இது நடக்க முடியாதது என்று மனிதர்கள் கூறுகிறார்கள், ஆனால் நீங்கள் இது முடியும் என்றும் கூறுகிறீர்கள் மேலும் சுலபமானது என்றும் கூறுகிறீர்கள். இலட்சியத்தை வைத்தீர்கள் என்றால் இலட்சணமும் கண்டிப்பாக வரும். எப்படி நினைவே அப்படி நிலை ஆகி விடும்.

பூமியில் தாய் தந்தையின் அன்பு என்ற நீர் ஊற்றப்பட்டிருக்கிறது. அதனால் கனிகளும் சுலபமாக வந்து விடுகின்றன. நல்லது பாப்தாதா சேவை மற்றும் சுயமுன்னேற்றம் இரண்டையும் பார்த்து குஷியடைகிறார். சேவையை பார்த்து மட்டுமல்ல இரண்டையும் பார்த்து குஷியடைகிறார். எவ்வளவு சேவையில் வளர்ச்சி இருக்கிறதோ அதே போல் சுய முன்னேற்றத்திலும் இருக்கட்டும், இரண்டும் கூடவே இருக்கட்டும். எந்த ஆசையும் இல்லை, எப்பொழுது அனைத்தும் தானாகவே கிடைக்கிறதோ, பின்பு ஆசை ஏன் வைக்க வேண்டும். கேட்காமல், சொல்லாமல் இவ்வளவு கிடைத்து விட்டது. கேட்க வேண்டும் என்ற ஆசையின் அவசியமே இல்லை. அந்த மாதிரி திருப்தியாக இருக்கிறீர்கள் இல்லையா? திருப்தியாக இருக்கிறேன். மேலும் அனைவரையும் திருப்தி படுத்தி பிராப்தி சொரூபமாக ஆகக்கூடியவன் என்ற டைட்டிலை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி திருப்தியாக இருங்கள் மற்றும் திருப்தி

படுத்துங்கள். இது தான் விசேஷ வரதானம். திருப்தியில்லை என்பதின் பெயர் அடையாளமே இல்லாத நிலை, நல்லது.

வரதானம்: தெய்வீக புத்தி என்ற விமானம் மூலமாக உலகைச் சுற்றிப் பார்த்து வரும் மாஸ்டர் படைப்பவர் ஆகுக!

யாருடைய புத்தி தெய்வீகமாக இருக்கிறதோ, எவ்வளவு தெய்வீகமோ அவ்வளவு வேகமுடையதாக இருக்கும். எனவே தெய்வீக புத்தி என்ற விமானம் மூலமாக ஒரு வினாடியில் தெளிவான ரூபத்தில் உலகைச் சுற்றி வந்து அனைத்து ஆத்மாக்களையும் கவனியுங்கள். அவர்களைத் திருப்தி படுத்துங்கள். எவ்வளவிற்கு நீங்கள் சக்கரவர்த்தி ஆகி சுற்றி வருவீர்களோ அவ்வளவிற்கு நாலாபுறமும் நாங்கள் ஜோதியைப் பார்த்தோம், சென்று கொண்டிருந்த பரிஷ்தாவைப் பார்த்தோம் என்ற ஒசை எழும். இதற்காக தனக்கு நன்மை செய்பவரோடு, உலகிற்கு நன்மை செய்யும் மாஸ்டர் படைப்பவர் ஆகுங்கள்.

சுலோகன்: மாஸ்டர் வள்ளலாகி அனேக ஆத்மாக்களுக்கு பிராப்தியின் அனுபவம் செய்விப்பது தான் பிரம்மாபாபாவிற்குச் சமமாவது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.11.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுபபாவனை மற்றும் சுபகாமனாவின் (ஆசை) சூட்சும சேவை!

இன்று விஷ்வ கல்யாணகாரி பாப்தாதா தன்னுடைய விஷ்வ கல்யாணகாரி துணைவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்துக் குழந்தைகளும் தந்தையின் உலக நன்மைக்கான காரியத்தில் பொறுப்பிலிருக்கும் உடன் இருப்பவர்கள் உலகின் பிரச்சனைகள் நிறைந்த ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்படட்டுமே என்ற ஒரே எண்ணம் தான் அனைவரின் மனதிலும் எப்பொழுதும் இருக்கிறது. தினசரி நடவடிக்கைகளுக்கிடையே மற்றும் எந்தக் காரியம் செய்து கொண்டிருந்தாலும் மனதில் இந்த சுப பாவனை தான் இருக்கிறது. பக்தி மார்க்கத்திலும் பாவனை இருக்கிறது ஆனால் பக்த ஆத்மாக்களுக்கு விசேஷமாக அற்ப கால நன்மை கருதி பாவனை இருக்கும் ஞான சொரூப ஆத்மாக்களுக்கு மற்ற ஆத்மாக்களுக்காக ஞானத்தின் ஆதாரத்தில் நன்மையே பயக்கும் பாவனை இருக்கிறது மற்றும் அது நிரந்தரமாகவும் அனைத்து நன்மைகள் பயக்கும் பாவனையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆத்மாவும் அனேக ஜென்மங்கள் சுகமுள்ளவர்களாக ஆகி விடட்டும் பிராப்திகளினால் நிரம்பியவர்கள் ஆகி விடட்டும் என்று தான் உங்களுடைய பாவனை நிகழ்காலத்திற்காகவும் எதிர்காலத்திற்காகவும் இருக்கிறது. ஏனென்றால் அழியாத தந்தை மூலமாக ஆத்மாக்களாகிய உங்களுக்கு அழியாத ஆஸ்தி கிடைத்திருக்கிறது. உங்களுடைய சுபபாவனையின் பலன் உலகிலுள்ள ஆத்மாக்களை மாற்றிக் கொண்டு இருக்கிறது மற்றும் வரும் நாட்களில் இயற்கையும் சேர்ந்து மாறி விடும். ஆத்மாக்கள் உங்களுடைய உயர்ந்த பாவனை இவ்வளவு உயர்ந்த பலனை பிராப்தி செய்விக்கக் கூடியது. எனவே தான் விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்யும்) ஆத்மாக்கள் என்று பாடப்படுகிறீர்கள். தன்னுடைய சுப பாவனையின் மகத்துவத்தை இந்த அளவிற்குத் தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய சுப பாவனையை

சாதாரண முறையில் காரியத்தில் ஈடுபடுத்தி நடந்து கொள்கிறீர்களா? அல்லது மகத்துவம் தெரிந்து நடந்து கொள்கிறீர்களா? வெளி உலக மனிதர்கள் கூட சுப பாவனை என்ற வார்த்தை கூறுகிறார்கள் ஆனால் உங்களுடைய சுப பாவனை, சுபம் (நல்லவை) மட்டுமல்ல சக்திசாலியானதாகவும் இருக்கிறது, ஏனென்றால் நீங்கள் சங்கமயுக உயர்ந்த ஆத்மாக்கள், எப்படி சங்கமயுகத்திற்கு உடனடி பலன் கிடைப்பதற்கான வரதானம் இருக்கிறது. எனவே உங்களுடைய பாவனையின் உடனடி பலன் ஆத்மாக்களுக்குக் கிடைக்கிறது. எந்த ஒரு ஆத்மாவும் உங்களுடைய சம்பந்தத்தில் நெருக்கத்தில் வருகிறார்களோ அவர்கள் அந்த நேரமே அமைதி மற்றும் அன்பின் பலனை அனுபவம் செய்கிறார்கள்.

சுப பாவனை சுபகாமனா (சுபமான ஆசை) இல்லாமல் இருக்க முடியாது. இந்த ஆத்மாவும் ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விடட்டுமே என்று ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் இரக்கம் கலந்த நல்விருப்பங்கள் இருக்கிறது. இவரும் நம்முடைய ஈஸ்வரிய குடும்பத்தைச் சேர்ந்தவர், எனவே இதிலிருந்து ஏன் வஞ்சிக்கப்பட வேண்டும் என்று ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் இரக்கம் வருகிறது. நல்விருப்பங்கள் இருக்கிறது இல்லையா! சுப பாவனை மற்றும் சுபகாமனா இவை இரண்டும் சேவையின் அஸ்திவாரங்கள். எந்த ஒரு ஆத்மாவிற்கும் சேவை செய்கிறீர்கள். ஒருவேளை உங்களுக்குள் சுபபாவனை மற்றும் சுபகாமனா இல்லையென்றால் ஆத்மாக்களுக்கு உடனடிப் பலன் அனுபவம் ஆகாது. ஒருவிதமான சேவை விதிமுறைகள்படி செய்வது அதாவது என்ன கேட்டார்களோ அதை சொல்வது. இன்னொரு சேவை தன்னுடைய சுப பாவனை சுபகாமனா மூலமாகச் செய்வது. உங்களுடைய சுப பாவனை தந்தையிடமும் பாவனையை உருவாக்குகிறது மற்றும் தந்தை மூலமாக பிராப்தியை அடையச் செய்வதற்கு காரணமாகி விடுகிறது. சுபபாவனை, எங்கோ தொலைவில் அமர்ந்திருக்கும் ஆத்மாவிற்குக் கூட பிராப்தியை அடையச் செய்ய பொறுப்பாக முடியும். எப்படி விஞ்ஞானத்தின் சாதனங்கள் (தொலைக்காட்சிப் பெட்டி) தூரத்திலிருக்கும் ஆத்மாக்களை நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளும் கருவி ஆகி விடுகிறது. உங்களுடைய குரல் சென்றடைந்து விடுகிறது. உங்களுடைய செய்தி சென்றடைந்து விடுகிறது, காட்சிகள் கிடைத்து விடுகிறது. எனவே எப்படி

விஞ்ஞானத்தின் சக்தி அற்ப காலத்திற்கு அருகாமையின் பலனைக் கொடுக்க முடியும்போது உங்களுடைய அமைதி சக்தி சுப பாவனை தொலைவில் இருக்கும் ஆத்மாக்களுக்கு பலன் கொடுக்க முடியாதா என்ன? ஆனால் இதற்கு ஆதாரம் உங்களுக்குள் அமைதி சக்தியின் சேமிப்பு அந்த அளவு இருக்க வேண்டும். அமைதி சக்தி இந்த ஆன்மீக அனுபவம் செய்விக்க முடியும் வரும் நாட்களில் பிரத்யட்சமாகவே அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

சுபபாவனை என்றால் சக்திசாலியான எண்ணம் அனைத்து சக்திகளை விட எண்ணத்தின் வேகம் அதிகம் விஞ்ஞானம் எவ்வளவு தான் மிக வேகமாகச் செயல்படும் சாதனங்களைத் தயாரித்திருந்தாலும் அவை அனைத்தையும் விட வேகமானது எண்ணம் எந்த ஆத்மாவிற்காவது அல்லது எல்லையில்லா உலக ஆத்மாக்களுக்கு சுப பாவனை வைக்கிறீர்கள் அதாவது சக்திசாலியான நல்ல மற்றும் சுத்தமான எண்ணம் வைக்கிறீர்கள் இந்த ஆத்மாவிற்கும் நன்மை ஏற்படட்டுமே என்று உங்களுடைய எண்ணம் அல்லது பாவனை உருவானவுடன் அந்த ஆத்மாவிற்கு ஏதோ ஒரு விசேஷ சகயோகம் மூலம் அமைதி மற்றும் சக்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்ற அனுபவம் ஆகும். இப்பொழுது கூட அனேகக் குழந்தைகள் நிறைய காரியங்களில் எனக்குத் தைரியம் அல்லது தகுதி இவ்வளவு இருப்பது இல்லை, ஆனால் பாப்தாதாவின் பிரத்யேக உதவியினால் இந்தக் காரியம் சுலபமாக வெற்றியடைந்து விட்டது மற்றும் தடைகள் நீங்கி விட்டன என்று அனுபவம் செய்கிறார்கள். நேரமும் குறைவாக, சாதனங்களும் குறைவாக, பணமும் குறைவாகச் செலவாகும். இதற்காக மனம் மற்றும் புத்தி ஃப்ரீயாக இருக்க வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களில் மனதை மிகவும் பிஸியாக வைத்துக் கொள்கிறீர்கள், அதனால் சேவையின் சூட்சும வேகத்தின் கோடு தெளிவாக இருப்பது இல்லை. சாதாரண விஷயங்களிலேயே உங்களுடைய மனம் மற்றும் புத்தியின் கோட்டை மிகவும் வேகம் நிறைந்ததாக ஆக வைத்துக் கொள்கிறீர்கள், எனவே தான் அந்த சூட்சும சேவை மிக வேகமாக நடப்பது இல்லை. இதற்காக ஏகாந்தம் மற்றும் ஏகாகிரதா (தனிமை மற்றும் ஒருமுகமான நிலை) என்ற விசேஷ கவனம் தேவை ஏகாந்தப்பிரிய ஆத்மாக்கள் எவ்வளவு தான் பிஸியாக இருந்தாலும் இடை இடையே ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிடம் பிரத்யேகமாக

எடுத்து ஏகாந்தத்தை அனுபவம் செய்ய முடியும். ஏகாந்தப் பிரிய ஆத்மா தன்னுடைய சூட்சும சக்திகளாகிய மனம், புத்தியை எந்த நேரம், எங்கே விரும்புகிறார்களோ அங்கு ஒருமுகப்படுத்தும் அளவிற்கு சக்திசாலிகளாக ஆகி விடுகிறார்கள். வெளியுலக சூழ்நிலை குழப்பமானதாக இருந்தால் கூட ஏகாந்தப் பிரிய ஆத்மாக்கள் ஒருவரின் (பாபா) நினைவிலேயே ஒரு விநாடியில் ஏகாக்ரமாகி விடுவார்கள். எப்படி கடலின் மேல் பகுதியில் அலை களின் சப்தம் எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு அலைகள் மோதிக் கொள்கின்றன ஆனால் கடலின் ஆழத்தில் எந்தவிதமான குழப்பமும் இல்லை. எனவே எப்பொழுது ஒருவரின் நினைவின் ஆழத்தில், ஞானக்கடலின் ஆழத்தில் சென்று விட்டால் குழப்பங்கள் முடிவடைந்து ஒருமுகப்பட்ட நிலைக்கு வந்து விடுவீர்கள். சூட்சும சேவை என்றால் என்னவென்று கேட்டீர்களா? சுப பாவனை, சுபகாமனா என்ற வார்த்தையை அனைவரும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் ஆனால் இதனுடைய மகத்துவத்தைத் தெரிந்து பிரத்யக்ஷ ரூபத்தில் வருவதால் அனேக ஆத்மாக்களுக்கு உடனடி பலனை அனுபவம் செய்விப்பதற்கு பொறுப்பானவர் ஆகுங்கள். நல்லது.

டீச்சர்களின் வேலையே சேவை தான். டீச்சர்ஸின் மகத்துவமே சேவை தான். ஒருவேளை சேவையின் பலன் பிரத்யக்ஷமாகத் தென்படவில்லையென்றால் அவரைத் தகுதியான டீச்சர்ஸ் லிஸ்ட்'ல் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. டீச்சரின் மகான் தன்மை சேவை ஆகி விட்டது இல்லையா? ஆகவே சேவையின் நுண்ணிய ரூபத்தைச் கூறினோம். சொல் மூலம் செய்யும் சேவையைச் செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள், ஆனால் வாய் மற்றும் மனதின் சுப பாவனையின் சேவை சேர்ந்தே இருக்கட்டும். வார்த்தை மற்றும் பாவனை இரட்டை வேலை செய்யும். இந்த சூட்சும சேவையின் பயிற்சி வெகு காலம் அதாவது இப்பொழுதிலிருந்தே தேவை ஏனென்றால் சேவையின் வடிவமைப்பு அவசியம் மாறும், அந்த சமயம் சூட்சும சேவையில் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ள முடியாது வெளியுலக சூழ்நிலை புத்தியைக் கவர்ந்து இழுத்து விடும். முடிவு என்னவாகும்? நினைவு மற்றும் சேவையின் சமநிலை வைக்க முடியாது. எனவே இப்பொழுதிலிருந்தே தன்னுடைய மனம், புத்தியின் சேவையின் கோட்டை சோதனை செய்யுங்கள். டீச்சர்ஸ்களுக்கு சோதனை செய்யத்

தெரியும் இல்லையா? டீச்சர்ஸ் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். அப்படியென்றால் சுயம் தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள், அதனால் தான் கற்றுக் கொடுக்கிறார்கள். அனைவரும் தகுதியான டீச்சர்ஸ் தானே. தகுதியான டீச்சரின் விசேஷமே நிரந்தரமாக, மனதால், வார்த்தைகளினால், உடலால் எப்பொழுதும் சேவையில் பிஸியாக இருப்பது. எனவே மற்ற விஷயங்களிலிருந்து தானாகவே விடுபட்டு விடுவார்கள். நல்லது.

குமாரிகளும் வந்திருக்கிறார்கள். குமாரிகள் என்றால் வருங்கால டீச்சர்ஸ் அப்பொழுது தான் பிரம்மா குமாரிகள் என்று கூற முடியும். ஒருவேளை வருங்கால சேவாதாரி, இல்லையென்றால் பணம், காசுடைய குமாரி என்று தான் கூறலாம். குமாரிகள் என்ன செய்கிறார்கள்? பணம் காசுக்குப் பின்னால் வேலை என்ற கூடையைத் தூக்குகிறார்கள் இல்லையா? குமாரிகள் கூடையின் சுமையைத் தூக்குவதற்குத் தயாராகி விடுகிறார்கள் ஆனால் பகவானின் வீட்டில் அதாவது சேவை நிலையங்களில் இருப்பதற்குத் தைரியம் வைப்பது இல்லை என்று குமாரிகளைப் பார்த்து பாப்தாதாவுக்கு சிரிப்பு வருகிறது. அந்த மாதிரி பலகீனமான குமாரிகள் இல்லையல்லவா? படித்துக் கொண்டிருந்தாலும் வேலை செய்ய வேண்டுமா? இல்லை உலக சேவை செய்ய வேண்டுமா? என்று முதலிலேயே இலட்சியம் வைக்கப்படுகிறது. வேலை செய்வது என்றால் தன்னை வளர்ப்பது. வளர்ப்பதற்கு குழந்தை குட்டிகளோ கிடையாது. தன்னுடைய வாழ்க்கை சௌகரியமாக பிரச்சனையில்லாமல் நடப்பதற்காக வேலை செய்கிறார்கள். உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு தந்தையின் பாலனை கொடுக்க வேண்டுமென்ற இலட்சியம் வையுங்கள். எப்பொழுது அனேக ஆத்மாக்களுக்கு பொறுப்பானவர் ஆக முடியுமோ அதற்கு முன்னால் தன்னை மட்டும் வளர்ப்பது என்பதில் என்ன மகத்துவம் இருக்கிறது? அனேகர்களின் ஆசீர்வாதங்களைப் பெறுவது என்பது எவ்வளவு பெரிய சம்பாத்தியம். அந்த சம்பாத்தியத்தில் 5,000 அல்லது லட்சமே இருந்தாலும் இது அனேக ஆத்மாக்களின் ஆசீர்வாதம், இது அனேக ஜென்மங்களுக்கு உங்கள் கூடவே வரும். அந்த ஐந்து லட்சம் எங்கே போகும்? வீட்டில் அல்லது பாங்கிலேயே இருந்து விடும். இலட்சியம் எப்பொழுதும் உயர்ந்ததாக வைக்கப்படுகிறது. சாதாரணமாக அல்ல. சங்கமயுகத்தில் இந்த ஒரு இப்போதைய பிறவி யில் எல்லையில்லா

சேவையில் பொறுப்பு ஆவதற்கான இவ்வளவு பெரிய கோல்டன் சான்ஸ் கிடைக்கிறது. சத்யுகத்தில் கூட இந்த வாய்ப்பு கிடைக்காது. வேலைக்காகக் கூட வாய்ப்பு இருக்கிறதா என்று பேப்பரைத்தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். தந்தை அவரே சேவைக்கான வாய்ப்பைக் கொடுக்கிறார், எனவே தகுதியான வலது கரம் ஆகுங்கள். சாதாரண பிரம்மாகுமாரியாக ஆகாதீர்கள். தகுதியான சேவாதாரி ஆகவில்லையென்றால் சேவை செய்வதற்குப் பதிலாக, சேவை எடுத்துக் கொண்டே இருப்பார்கள். தகுதியான சேவாதாரியாக ஆவது ஒன்றும் கஷ்டமான விஷயம் இல்லை. எப்பொழுது தகுதியான சேவாதாரி ஆகவில்லையோ அப்பொழுது (ஞான மார்க்கத்தில்) போக முடியுமா? முடியாதா? என்று பயப்படுகிறீர்கள். தகுதி இல்லையென்றால் பயம் ஏற்படுகிறது. தகுதியானவர்கள் கவலையற்ற மகாராஜா ஆகி விடுகிறார்கள். ஸ்தூலமான தகுதியானாலும் அல்லது ஞானத்தின் தகுதியானாலும் மனிதனை மதிப்புள்ளவராக்கி விடுகிறது. தகுதி இல்லையென்றால் மதிப்பு இருப்பது இல்லை. சேவையின் தகுதி தான் மிகப் பெரியது. அந்த மாதிரி தகுதியான ஆத்மாவை எந்த விஷயமும் நிறுத்த முடியாது. தகுதியானவர் ஆவது என்றால் எனக்கு இருப்பதோ ஒரு தந்தை அவ்வளவு தான், வேறு எந்த விஷயமும் இல்லை. குமாரிகள் கேட்டீர்களா? நல்லது.

குமாரர்கள் கூட நிறைய பேர் வந்திருக்கிறார்கள். குமார் நன்றாக ஓடுகிறார்கள். சேவையிலும் ஊக்கம், உற்சாகத்தில் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் குமாரர்களின் விசேஷமே மற்றும் மகான் தன்மையே ஆரம்பத்திலிருந்து இதுவரை தடைகள் அற்ற குமார்களாக இருக்கிறீர்களா? ஒருவேளை குமார், தடைகளற்ற குமார் என்றால் அந்த மாதிரி குமார் தான் மகிமை செய்யப்படுகிறார், ஏனென்றால் உலகிலுள்ளவர்கள் குமாரிகளுக்குப் பதிலாக குமார்கள் தகுதியானவர்கள் ஆவது கஷ்டம் என்று குமார்களைப் பற்றி நினைக்கிறார்கள். நீங்கள் நடக்க முடியாது என்று கூறுகிறீர்கள் ஆனால் நாங்கள் தடைகளற்ற குமார்கள் என்று உலகிற்கு குமார்கள் சவால் விட வேண்டும். அந்த மாதிரி உலகிற்கு மாதிரியைக் காண்பிப்பவர்கள் மகான் குமார் ஆவார்கள். அந்த மாதிரிக் குமாரர்களுக்கு பாப்தாதா எப்பொழுதும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார் புரிந்ததா? இப்பொழுது மிகவும் நன்றாக இருக்கிறேன், ஏதாவது தடை வந்தால்

மேலே கீழே போய்விடுவது அந்த மாதிரி இல்லை. குமார் என்றால் பிரச்சனையாகவும் ஆகக்கூடாது, மேலும் பிரச்சனைகளில் தோல்வியும் அடையக்கூடாது குமார், குமாரிகளை விட முன்னுக்குப் போக முடியும், ஆனால் தடைகள் அற்ற குமாரராக இருக்க வேண்டும். ஏனென்றால் குமாரர்களுக்கு அதிகமாக எனக்குத் துணை இல்லையே, யாராவது துணைவன் வேண்டும், வாழ்க்கைத் துணை வேண்டும் என்ற தடை தான் வருகிறது. எனவே ஏதாவது ஒரு வழியில் தன்னுடைய துணையைத் தேடிக் கொள்கிறார்கள். சில சில குமார்கள் துணையானவர்களையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். மற்றும் சிலர் பேசுவதற்காக உடன் அமருவதற்காக துணையில் வந்து விடுகிறார்கள். பின்பு துணைவனாக ஆக்குவதற்கும் எண்ணம் வருகிறது ஆனால் தந்தையைத் தவிர துணையையும் உருவாக்குவது இல்லை துணைவனையும் உருவாக்குவதில்லை அந்த மாதிரி குமார்களும் இருக்கிறார்கள். தந்தையின் துணையில் இருக்கும் குமார்கள் எப்பொழுதும் சுகமாக இருக்கிறார்கள். அப்படியானால் நீங்கள் எல்லாம் எந்த விதமான குமார்கள்? கொஞ்சம் கொஞ்சம் கம்பெனி வேண்டியிருக்கிறதா? முழு குடும்பமே கம்பெனி தான். அப்படியிருந்தால் சரி தான், ஆனால் இரண்டு மூன்று அல்லது ஒரு கம்பெனி வேண்டும் என்றால் அது தவறு எனவே நீங்கள் அனைவரும் யார்? தடைகள் இல்லாதவர்கள் தானே. புதுக் குமார்கள் கூட அதிசயம் செய்து காண்பிப்பார்கள். கடைசியில் உலகையே தங்கள் முன்னால், தந்தையின் முன்னால் குனிய வைக்க வேண்டும் இல்லையா? எனவே இந்தக் குமார்களின் அதிசயமான செயல்கள் உலகை குனிய வைக்கும். குமார்களின் அதிசயம் என்று உலகம் உங்களுடைய குணங்களை மகிமை செய்யும். குமாரிகள் சேவையின் கம்பெனியிலேயே இருக்கிறார்கள் ஆனால் குமார்களுக்கு கொஞ்சம் கம்பெனி வேண்டும் என்ற எண்ணம் வந்தால் பாண்டவ பவன் உருவாக்கி நன்றாக இருக்கட்டும். அந்த மாதிரி யாராவது செய்து காண்பியுங்கள் ஆனால் இன்று பாண்டவ பவன் உருவாக்கினீர்கள், நாளை ஒரு பாண்டவர் கிழக்கே போய் விட்டார், இன்னொரு பாண்டவர் மேற்கே போய் விட்டார் என்று அந்த மாதிரி பாண்டவ பவன் உருவாக்காதீர்கள்.

பாப்தாதாவிற்கு குமாரர்கள் தனியாக இருந்தாலும் முயற்சி செய்கிறார்கள் என்று விசேஷமான பெருமிதம் இருக்கிறது. குமார்கள்

நீங்கள் உங்களுக்குள் இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஏன் இருக்கக் கூடாது. பெண்கள் தான் துணையாக வேண்டும் என்பதே இல்லை, இரண்டு குமார்கள் கூட சேர்ந்து இருக்கலாம் ஆனால் ஒருவர் இன்னொருவருக்கு தடையில்லாத துணையாக இருக்க வேண்டும். அந்த மாதிரியான சிறப்புகளை இன்னும் காண்பிக்கவில்லை. தேவையானபோது ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்பவராக ஆனால் என்ன தான் முடியாது? வேறு விஷயங்கள் வந்து விடுகின்றன. எனவே பாப்தாதா பாண்டவ பவன் உருவாக்குவதற்கு அனுமதி மறுக்கிறார் ஆனால் மாதிரியாக யாராவது செய்து காண்பியுங்கள். பாண்டவ பவனை உருவாக்கி விட்டு அதன் பின்னாலேயே பொறுப்பான தாதிகள் மற்றும் தீதிகள் நேரத்தை அதற்காகவே எடுத்துக் கொண்டிருப்பது என்று இருக்கக்கூடாது. தடைகள் அற்றவர்களாக இருக்க வேண்டும், ஒருவர் இன்னொருவரை விடத் தகுதியான குமாராக இருக்க வேண்டும், பின்பு பாருங்கள் எவ்வளவு நல்ல பெயர் கிடைக்கிறது என்று குமாரர்கள் கேட்டீர்களா? தகுதியான குமார் ஆகுங்கள். தடையற்ற குமார் ஆகுங்கள். சேவைக் களத்தில் தானே பிரச்சனையாக ஆகாதீர்கள் ஆனால் பிரச்சனையை விலக்குபவர் ஆகுங்கள். பின்பு பாருங்கள் குமார்களுக்கு அதிக மதிப்பு ஏற்படும். ஏனென்றால் குமாரர்கள் இல்லாமல் சேவையும் நடக்க முடியாது? அப்படியென்றால் குமார் என்ன செய்வீர்கள்? அனைவரும் சொல்லுங்கள் தடைகளற்ற குமாராக ஆகிக் காண்பிப்போம். குமார்கள் பாப்தாதா முன்பு எழுந்து நின்று உறுதியளித்தார்கள். இப்பொழுது அனைவரின் போட்டோவும் எடுக்கப்பட்டு விட்டது. நான் எழுந்ததை யாரும் பார்க்கவில்லையென்று நினைக்காதீர்கள். போட்டோ எடுக்கப்பட்டு விட்டது. நல்லது. தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. மேலும் முழு குடும்பமும் உங்களுடன் இருக்கிறது. நல்லது.

நாலாபுறமுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் எப்பொழுதும் பாப்தாதா தன்னுடைய அன்பின் உதவியின் குடை நிழலையும் சேர்த்து சேவைக்காக மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். பாரதம் மற்றும் வெளிநாடுகளின் சேவை செய்தி வந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய மனதின் உண்மையான செய்தியையும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். முக்கியமாக

# 1989 அவ்யக்த முரளி

வெளிநாடுகளிலிருந்து கடிதம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. எனவே சேவை செய்தி கொடுக்கும் குழந்தை களுக்கு வாழ்த்துக்களையும் சேர்த்து கூடவே எப்பொழுதும் சுய சேவை மற்றும் உலக சேவையில் வெற்றி பெறுக என்ற வரதானமும் கொடுக்கிறார். சுயமுயற்சி செய்யும் குழந்தைகள் எப்படி உண்மையான மனதால் தந்தையைத் திருப்தி படுத்திக் கொண்டே இருக்கிறீர்களோ அதேபோல் தானும் தன்னுடைய சம்ஸ்காரம், மற்றும் தன்னுடன் இருப்பவரின் இரகசியம் தெரிந்து நடப்பவர்களாக அதாவது திருப்தியாக இருங்கள். ஒருவர் இன்னொருவரின் சம்ஸ்காரத்தின் இரகசியத்தையும் தெரிய வேண்டும், சூழ்நிலைகளையும் தெரிய வேண்டும், இது தான் இரகசியம் தெரிந்து நடக்கும் நிலை ஆகும். மற்றபடி உண்மையான மனதோடு தன்னுடைய வரவு செலவு கணக்கைக் கொடுங்கள் மற்றும் அன்பின் உரையாடலின் கடிதம் எழுதுங்கள் அதாவது பழையதை முடியுங்கள் மற்றும் அன்பின் உரையாடல் எப்பொழுதும் அருகாமையை அனுபவம் செய்வித்துக் கொண்டே இருக்கும். இது தான் கடிதங்களுக்கு உண்டான பதில் கடிதம் எழுதுவதில் வெளிநாட்டினர் புத்திசாலிகள். வேக வேகமாக எழுதுகிறார்கள். பாரதவாசிகளும் நீள நீளமான கடிதங்கள் அனுப்ப ஆரம்பித்து விடாதீர்கள். இரண்டு வார்த்தைகளின் கடிதம். எழுதுங்கள் என்று பாப்தாதா கூறிவிட்டார். ஓ.கே. (நன்றாக இருக்கிறேன்) சேவைச் செய்திகள் இருந்தால் எழுதுங்கள் மற்றபடி ஓகே. இதில் அனைத்தும் வந்து விடுகிறது. இந்தக் கடிதத்தைப் படிப்பதும், சுலபம், எழுதுவதும் சுலபம் ஆனால் ஒருவேளை நீங்கள் ஓ.கே. ஆக இல்லையென்றால் ஒ.கே. எழுதாதீர்கள். எப்பொழுது ஓகே ஆகி விடுவீர்களோ அப்பொழுது எழுதுங்கள் கடிதங்களைப் படிப்பதிலும் நேரம் செலவழிகிறது இல்லையா? எந்த ஒரு காரியம் செய்தாலும் சுருக்கமாகவும் இனிமையாகவும் இருக்கட்டும். யார் படித்தாலும் அவருக்கு குஷி கிடைக்க வேண்டும் எனவே இராமாயணம் எழுதி அனுப்பாதீர்கள். புரிந்ததா? செய்தி கொடுக்கவும் வேண்டும் ஆனால் செய்தி கொடுக்க கற்றுக் கொள்ளவும் வேண்டும். நல்லது.

அனைத்து சுபபாவனை மற்றும் சுபகாமனாவின் சூட்சும சேவையின் மகத்துவத்தைத் தெரிந்திருக்கும் மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

# 1989 அவ்யக்த முரளி

**வரதானம்: அமைதி சக்தி மூலமாக நொடியில் ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு காணும் ஏகாந்தவாசி ஆகுக!**

எப்போது ஏதாவது புதிய அல்லது சக்திசாலி கண்டுபிடிப்பு செய்யும்பொழுது நிலத்தடியில் செல்வார்கள். இங்கு ஏகாந்தவாசி ஆவது தான் நிலத்தடியில் செல்வது. எந்த நேரம் கிடைத்தாலும், காரியங்கள் செய்தாலும், கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும் டைரக்ஷன் கொடுத்துக் கொண்டும், இந்த உடலின் உலகம் மற்றும் உடலின் ஈர்ப்பிலிருந்து விலகி அமைதியில் சென்று விடுங்கள். இந்தப் பயிற்சி மற்றும் அனுபவம் செய்வது செய்விப்பதின் நிலை ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு கண்டு விடும். இதன் மூலம் ஒரு நொடியில் யாருக்கும் அமைதி மற்றும் சக்திகளின் அனுபவம் செய்வித்து விடும். யார் எதிரில் வந்தாலும் அவர் இந்த நிலையில் சாட்சாத்காரத்தின் அனுபவம் செய்வார்.

**சுலோகன்: வீணான எண்ணங்கள் மற்றும் தீய எண்ணங்களிலிருந்து விலகி ஆத்மீக நிலையில் இருப்பது தான் யோக சொரூபம் ஆவது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 01.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சுயமரியாதை மூலம் தான் மரியாதை கிடைக்கிறது!

இன்று பாப்தாதா நாலாபுறமுமுள்ள சுயமரியாதைக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சுயமரியாதைக் குழந்தைகளுக்குத் தான் முழு கல்பமும் மரியாதை இருக்கிறது. ஒரு பிறவியில் சுயமரியாதை உள்ளவர்கள் முழுக்கல்பத்திலும் மரியாதைக்குரியவர்கள் ஆகிறார்கள். தன்னுடைய இராஜ்யத்தில் கூட இராஜ்ய அதிகாரி ஆவதின் காரணத்தினால் பிரஜைகள் மூலமாக மரியாதை கிடைக்கிறது மற்றும் அரைக்கல்பம் பக்தர்கள் மூலமாக மரியாதையைப் பெறுகிறீர்கள். இப்பொழுது தன்னுடைய கடைசி பிறவியிலும் பக்தர்கள் மூலமாக தேவ ஆத்மா மற்றும் சக்தி ரூபத்தின் மரியாதையைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு அன்போடு இப்பொழுது கூட மரியாதை கொடுக்கிறார்கள். இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தை எப்படி அடைந்தீர்கள். முக்கியமாக ஒரு விஷயத்தின் தியாகத்தின் பாக்கியம் தான் இது. என்ன தியாகம் செய்தீர்கள்? தேக அபிமானத்தை தியாகம் செய்தீர்கள் ஏனென்றால் தேக அபமானத்தை தியாகம் செய்யாமல் சுயமரியாதையில் நிலைத்து இருக்க முடியாது. இந்த தியாகத்தின் பிரதி உபகாரமாக பாக்கியத்தை உருவாக்கும் பகவான் இந்த பாக்கியத்தின் வரதானம் கொடுத்திருக்கிறார். இரண்டாவது விஷயம் சுயம் தந்தை உங்களுக்கு சுயமரியாதை கொடுத்திருக்கிறார். தந்தை குழந்தைகளை காலடியில் கிடக்கும் தாஸ, தாசி நிலையிலிருந்து தன்னுடைய தலையின் கிரீடமாக்கி விட்டார். எவ்வளவு பெரிய சுயமரியாதை கொடுத்திருக்கிறார். அந்த மாதிரி கயமரியாதையை அடையும் குழந்தைகள் மேல் தந்தையும் மரியாதை வைத்திருக்கிறார். தந்தை எப்பொழுதும் குழந்தைகளைத் தன்னை விட முன்னுக்கு வைக்கிறார். எப்பொழுதும் குழந்தைகளின் குணங்களை மகிமை பாடிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நாளும் அன்பு நினைவுகள் கொடுப்பதற்காக மிகவும் அன்போடு பரந்தாமத்திலிருந்து இந்த ஸ்தூல

உலகத்திற்கு வருகிறார். அங்கிருந்து அனுப்புவது இல்லை இங்கு வந்து கொடுக்கிறார். தினந்தோறும் அன்பு நினைவுகள் கிடைக்கிறது இல்லையா? இவ்வளவு உயர்ந்த மரியாதை வேறு யாரும் கொடுக்க முடியாது. சுயம் தந்தை மரியாதை கொடுத்திருக்கிறார். எனவே அழியாத மரியாதைக்குரியவர்கள் ஆகி விட்டீர்கள். அந்த மாதிரி உயர்ந்த நிலையை அனுபவம் செய்கிறீர்களா? சுயமரியாதை மற்றும் மரியாதை இரண்டிற்கும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்கிறது.

சுயமரியாதை உள்ளவர்கள் தனக்கு கிடைத்துள்ள சுய மரியாதையில் இருந்து கொண்டே, சுயமரியாதையின் மரியாதையிலும் இருக்கிறார்கள் மேலும் மற்றவர்களையும் மரியாதையோடு பார்க்கிறார்கள், பேசுகிறார்கள் மற்றும் நெருக்கத்தில் வருகிறார்கள். சுயமரியாதையின் அர்த்தமே தனக்கு மரியாதை கொடுப்பது. தந்தை உலகிலுள்ள அத்தனை ஆத்மாக்கள் மூலமாக மரியாதை அடைபவர், ஒவ்வொரு வரும் மரியாதை கொடுக்கிறார்கள் ஆனால் எவ்வளவு தந்தைக்கு மரியாதை கிடைக்கிறதோ அந்த அளவே அனைத்து குழந்தைகளுக்கும் மரியாதை கொடுக்கிறார்கள். யார் கொடுப்பது இல்லையோ அவர் தேவதை ஆவது இல்லை. அனேக பிறவிகள் தேவதை ஆகிறீர்கள் மற்றும் அனேக பிறவிகள் தேவதை ரூபத்திற்குத்தான் பூஜை நடக்கிறது. ஒரு பிறவி பிராமணன் ஆகிறீர்கள் ஆனால் அனேக பிறவிகள் தேவதை ரூபத்தில் இராஜ்யம் செய்கிறீர்கள் மற்றும் பூஜைக்குரியவர் ஆகிறீர்கள். தேவதா என்றாலே கொடுப்பவர் (தேனே வாலா). ஒருவேளை இந்த பிறவியில் மரியாதை கொடுக்கவில்லையென்றால் தேவதையாக எப்படி ஆவீர்கள் மற்றும் அனேக பிறவிகள் மரியாதையை எப்படிப் பெறுவீர்கள்? தந்தையைப் பின் பற்றுங்கள் (பாலோ ஃபாதர்). சாகார சொரூபத்தில் பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள் தன்னை எப்பொழுதும் உலக சேவாதாரி என்று கூறினார். குழந்தைகளின் சேவாதாரி என்று கூறினார் மற்றும் குழந்தைகளை எஜமானர்களாக ஆக்கினார். எப்பொழுதும் மற்றவர்களுக்கு வணக்கம் கூறினார். எப்பொழுதும் சிறு குழந்தைகளுக்குக் கூட மரியாதை கலந்த அன்பு கொடுத்தார். எதிர்கால விஷ்வ கல்யாணகாரி ரூபத்தில் பார்த்தார். குமாரிகள் மற்றும் குமாரர்களை, இளைஞர்களை எப்பொழுதும் உலகில் புகழ் பெற்ற மகான் ஆத்மாக்களுக்கு சவால் விடுபவர்களாக, நடக்க முடியாததை

நடத்திக் காட்டுபவர்களாக, மகாத்மாக்களைத் தலை குனிய வைப்பவர்களாக, அந்த மாதிரி தூய்மையான ஆத்மாக்களின் மரியாதையோடு பார்த்தார். எப்பொழுதும் தன்னை விட அதிசயம் செய்யும் மகான் ஆத்மா என்று நினைத்து மரியாதை கொடுத்தார் இல்லையா? அதேபோல் வயதான ஆத்மாக்களை எப்பொழுதும் அனுபவம் நிறைந்த ஆத்மாக்களாகவும், தன்னைப் போன்ற ஆத்மாக்களின் மரியாதையோடு பார்த்தார். கடும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆத்மாக்களை எப்பொழுதும் நினைவில் நம்பர் ஒன் என்ற மரியாதையோடு பார்த்தார். எனவே தான் நம்பர் ஒன் அழியாத மரியாதைக்கு அதிகாரி ஆனார். இராஜ மரியாதையிலும் நம்பர் ஒன் அதாவது விஷ்வ மகாராஜன் மற்றும் பூஜ்ய ரூபத்திலும் தந்தையின் பூஜைக்குப் பிறகு முதலில் பூஜைக்குரியவராக இலட்சுமி நாராயணன் தான் ஆகிறார்கள். அப்படி இராஜ மரியாதை மற்றும் பூஜைக்குரிய மரியாதை இரண்டிலும் நம்பர் ஒன் ஆகி விட்டார். ஏனென்றால் அனைவருக்கும் சுயமரியாதை, மரியாதை கொடுத்தார். மரியாதை கொடுத்தால் மரியாதை கொடுப்பேன் என்று அப்படி நினைக்கவில்லை. மரியாதை அளிப்பவர்கள் தன்னை நிந்தனை செய்பவர்களையும் நண்பர்களாக நினைப்பார்கள். மரியாதை கொடுப்பவர்களை மட்டும் தன்னுடையவர்கள் என்று நினைப்பது இல்லை ஆனால் திட்டுபவர்களைக் கூட தன்னுடையவர் என்று நினைக்கிறார். ஏனென்றால் முழு உலகமுமே தன்னுடைய குடும்பம். அனைத்து ஆத்மாக்களின் தண்டு நீங்கள் பிராமண ஆத்மாக்கள் தான். இந்த அனைத்து கிளைகளும் அதாவது வேறு வேறு தர்ம ஆத்மாக்களும் மூலத் தண்டிலிருந்து தான் வந்திருக்கிறார்கள். எனவே அனைவரும் நம்மவர்கள் ஆகி விட்டனர். அந்த மாதிரி சுயமரியாதை உள்ளவர்கள் எப்பொழுதும் தன்னை மாஸ்டர் படைப்பு என்று நினைத்து அனைவருக்கும் மரியாதை கொடுப்பவர்கள் ஆகிறார்கள். எப்பொழுதும் உங்களை ஆதிதேவ் பிரம்மாவின் ஆதி இரத்தினம் ஆரம்ப கதாபாத்திர ஆத்மாவாக நினைக்கிறீர்களா? ஆதி தந்தை பிரம்மா அந்த மாதிரி மரியாதையோடு பார்த்தார். எவ்வளவு போதை இருந்திருக்கும்? எனவே ஆதி ஆத்மா எந்த உயர்ந்த பார்வையில் பர்த்தாரோ, அதே மாதிரியான உயாந்த நிலையின் படைப்பில் இருப்போம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். அடிக்கடி உறுதி எடுத்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள். வார்த்தைகளினாலும் செய்கிறீர்கள்,

மனதாலும் செய்கிறீர்கள், மேலும் எழுதியும் கொடுக்கிறீர்கள் பின்பு மறந்தும் விடுகிறீர்கள். அதனால் உறுதி எடுப்பதின் லாபத்தை அடைய முடிவதில்லை. நினைவு வைத்தீர்கள் என்றால் லாபமும் எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு தடவை உறுதி எடுத்தோம் மற்றும் எவ்வளவு தடவை அதைக் கடைப்பிடித்தோம் என்று அனைவரும் உங்களை சோதனை செய்யுங்கள். கடைப்பிடித்து அதன்படி நடக்கத் தெரியுமா? இல்லை உறுதி எடுக்க மட்டும் தான் தெரியுமா? அல்லது மாறிக் கொண்டே இருக்கிறீர்களா சில நேரம் உறுதி எடுப்பவராகவும், சில நேரம் அதன்படி நடப்பவர்களாகவும் இருக்கிறீர்களா?

டீச்சர்ஸ் என்ன நினைக்கிறீர்கள்? கடைப்பிடிப்பவர்களின் பெயர் உள்ள லிஸ்டில் இருக்கிறீர்களா? டீச்சர்களைப் பாப்தாதா எப்பொழுதும் தன்னுடைய சக ஆசிரியர்கள் என்று கூறுகிறார். எப்பொழுதும் உடன் கூடவே இருப்பவர்களின் விசேஷத்தன்மை என்னவாக இருக்கும்? உடன் இருப்பவர்கள் சமமாக இருப்பார்கள். தந்தை எப்பொழுதாவது மாறுகிறாரா என்ன? டீச்சர்களும் உறுதிமொழி மற்றும் அதன்படி நடப்பது இரண்டிற்கும் சமநிலை வைப்பவர்கள். உறுதிமொழி அதிகமாகவும் லாபம் குறைவாகவும் இருந்தால் அது சமநிலை இல்லை. யார் இரண்டின் சமநிலை வைக்கிறார்களோ அவர்களுக்கு வரமளிக்கும் தந்தை மூலமாக எப்பொழுதும் உறுதியான எண்ணம், காரியம் மூலம் வெற்றி மூர்த்தி ஆகிறார்கள் என்ற வரதானம் மற்றும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. இது தான் உடன் இருக்கும் ஆசிரியரின் விசேஷச் செயல். எண்ணம் மற்றும் செயல் சமமாக இருக்கட்டும். எண்ணம் உயர்ந்ததாக மற்றும் செயல் சாதாரணமாக இருந்தால் இதை சமநிலை என்று சொல்ல முடியாது. எனவே டீச்சர்ஸ் எப்பொழுதும் தன்னை சக ஆசிரியர் அதாவது தந்தைக்கு சமமான ஆசிரியர் என்று நினைத்து இந்த நினைவிலேயே சக்தி நிறைந்தவர்கள் ஆகி நடந்து கொள்ளுங்கள். டீச்சர்ஸின் தைரியத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி வருகிறது. தைரியம் வைத்து சேவையின் பொறுப்பாளர்களாக ஆகி விட்டீர்கள் தானே ஆனால் இப்பொழுது தைரியமுள்ள டீச்சர், தந்தை ஆசிரியரின் சமமானவர்கள். இதை ஒருபோதும் மறக்காதீர்கள். பாப்தாதா உங்கள் எதிரில் இருப்பவர் அதாவது உடன் இருப்பவர் என்பது தான் இயல்பாகவே சமமாகும் குழந்தைகளின் இலட்சியமாக இருக்கட்டும். நல்லது.

நாலாபுறமுமுள்ள சுயமரியாதையிலிருந்து மரியாதைக்குரிவர்கள் ஆகும் குழந்தைகளுக்கு பாப்தாதா கண் எதிரில் பார்த்துக் கொண்டே சமப்பார்வையோடு அன்பு நினைவுகள் கொடுக்கிறார். எப்பொழுதும் இராஜ மரியாதை மற்றும் பூஜைக்குரிய மரியாதையில் சமமாக இருக்கும் உடன் இருக்கும் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பீகார் குரூப்:** அனைவரும் தன்னை சுய இராஜ்ய அதிகாரி என்று நினைக்கிறீர்களா? சுயத்தின் இராஜ்யம் கிடைத்து விட்டதா? இல்லை கிடைக்கப்போகிறதா? சுய இராஜ்யம் என்றால் எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அந்த மாதிரி கர்ம இந்திரியங்கள் மூலமாகக் காரியம் செய்ய முடிய வேண்டும். கர்ம இந்திரியத்தை வென்றவர்கள் என்றால் சுய இராஜ்ய அதிகாரி. அந்த மாதிரி ஆகி விட்டீர்களா? இல்லை எப்போதாவது கர்ம இந்திரியங்கள் உங்களை நடத்துகிறதா? எப்போதாவது மனது உங்களை நடத்துகிறதா அல்லது நீங்கள் மனதை நடத்திச் செல்கிறீர்களா? எப்பொழுதாவது மனதில் வீணான எண்ணங்கள் வருகிறதா? இல்லையா? ஒருவேளை எப்போதாவது வந்தால் அதை சுய இராஜ்யா அதிகாரி என்று சொல்ல முடியுமா? இராஜ்யம் என்பது மிகப் பெரிய அதிகாரம். இராஜ அதிகாரம் என்ன விரும்பினாலும் செய்ய முடியும், எப்படி நடத்த விரும்புகிறதோ அப்படி நடத்த முடியும். இந்த மனம், புத்தி, சம்ஸ்காரம் ஆத்மாவின் சக்திகள். ஆத்மா இந்த மூன்றின் எஜமானன். ஒருவேளை சம்ஸ்காரம் தன் பக்கம் இழுத்துக் கொண்டால் எஜமானன் என்று சொல்ல முடியுமா? எனவே சுய இராஜ்ய அதிகாரம் என்றால் கர்ம இந்திரியங்கள் மேல் வெற்றி அடைவது. யார் கர்ம இந்திரியங்கள் மேல் வெற்றியடைகிறார்களோ அவர்கள் தான் உலக இராஜ்ய அதிகாரத்தை அடைய முடியும். சுய இராஜ்ய அதிகாரி தான் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறார். எனவே சுய இராஜ்யம் பிராமண வாழ்க்கையின் பிறப்புரிமை என்பது பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய சுலோகன் தான். சுய இராஜ்ய அதிகாரியின் நிலை எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான் தான், எந்த ஒரு சக்திக்கும் குறைவு இல்லை. சுய இராஜ்ய அதிகாரி எப்பொழுதும் தர்மம் அதாவது தாரணை மூர்த்தியாகவும் இருப்பார் மற்றும் இராஜ்யம் அதாவது சக்திசாலியாகவும் இருப்பார். இப்பொழுது

இராஜ்யத்தில் ஏன் குழப்பம் இருக்கிறது? ஏனென்றால் தர்மத்தின் சக்தி தனியாகப் போய்விட்டது மற்றும் இராஜ்ய அதிகாரமும் தனியாகப் போய்விட்டது. எனவே முடமாகி விட்டது. ஒரு சக்தி இருக்கிறது எனவே குழப்பம் நிலவுகிறது. அதேபோல் உங்களிலும் ஒருவேளை தர்மம் மற்றும் இராஜ்யம் இரண்டு சக்திகளும் இல்லையென்றால் தடைகள் வரும், குழப்பத்தில் கொண்டு வருவார்கள், யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்கும். மேலும் இரண்டு சக்திகளும் இருந்தால் கவலையில்லா மகாராஜாவாக இருப்பார், எந்த ஒரு தடையும் வர முடியாது. என்ன அந்த மாதிரி கவலையில்லா மகாராஜாவாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் உடலைப் பற்றி உறவினர்களைப் பற்றி கவலை இருக்கிறதா? பாண்டவர்களுக்கு சம்பாதிக்க வேண்டும் என்ற கவலை இருக்கிறது குடும்பத்தை நடத்துவது பற்றி கவலை இருக்கிறது அல்லது கவலையில்லாமல் இருக்கிறார்களா? நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார், செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் அப்படி கருவி என உணர்ந்து செய்பவர்கள் கவலையில்லா மகாராஜாவாக இருப்பார்கள். நான் செய்து கொண்டிருக்கிறேன் -இந்தப் படிப்பு வந்தால் கவலையற்றவர்களாக இருக்க முடியாது ஆனால் தந்தை மூலமாக பொறுப்பிலுள்ள கருவி ஆகியிருக்கிறேன் என்ற இந்த நினைவு இருந்தால் கவலையற்ற வாழ்க்கையை அனுபவம் செய்வார்கள். எந்தக் கவலையும் இல்லை. நாளை என்ன நடக்கும் அந்தக் கவலையும் இல்லை. அல்லது நாளை என்ன நடக்கும் எப்படி நடக்கும் என்று கொஞ்சம் கவலை இருக்கிறதா? வினாசம் எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை, என்ன நடக்கும்? குழந்தைகளுக்கு என்ன ஆகும்? பேரன், பேத்திகளுக்கு என்ன ஆகும் இந்தக் கவலை இருக்கிறதா? கவலையற்ற மகாராஜாவிற்கு என்ன நடக்கிறது அது நல்லதாக நடந்து கொண்டிருக்கிறது மற்றும் என்ன நடக்குமோ அதுவும் மிகவும் நல்லதாகவே நடக்கும் என்ற நிச்சயம் இருக்கிறது ஏனென்றால் செய்விப்பவர் நல்லதிலும் நல்லவர் இல்லையா? இதைத்தான் நிச்சயபுத்தி உடையவர்கள் வெற்றியடைபவர்கள் என்று கூறுவது. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? இல்லை யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஆகவே வேண்டும் இல்லையா? இவ்வளவு பெரிய இராஜ்யம் கிடைக்கிறது இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? தன்னுடைய அதிகாரத்தை யாராவது விடுவார்களா?

குடிசையில் இருப்பவர்கள் கூட, கொஞ்சம் செல்வம் இருந்தால் அவர்களும் கூட விடமாட்டார்கள். இதுவோ எவ்வளவு பெரிய பிராப்தி. எனவே என்னுடைய அதிகாரம் என்ற இந்த நினைவு மூலமாக எப்பொழுதும் அதிகாரியாகி பறந்து கொண்டே இருங்கள். சுயராஜ்யம் நம்முடைய பிறப்புரிமை என்ற இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். கஷ்டப்பட்டு அடைவது இல்லை, இது அதிகாரம். நல்லது. பீஹார் என்றாலே எப்பொழுதும் வசந்தத்தில் (பஹார்) இருப்பவர்கள். இலையுதிர் காலத்தில் போகாதீர்கள். ஒருபோதும் புயல் சூறாவளி வரவேண்டாம். எப்பொழுதும் வசந்தம். நல்லது.

(2) ஆன்மீகப் பார்வை மூலமாக படைப்பை மாற்றுபவர்கள் என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? திருஷ்டி மூலம் சிருஷ்டி மாறிவிடுகிறது என்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது அனுபவி ஆகி விட்டீர்கள். ஆன்மீகப் பார்வை மூலமாகப் படைப்பு மாறிவிட்டது இல்லையா? இப்பொழுது உங்களுக்குத் தந்தை தான் உலகம், எனவே படைப்பு மாறிவட்டது இல்லையா? முன்பு இருந்த படைப்பு அதாவது உலகம் மற்றும் இப்பொழுதுள்ள உலகம் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது இல்லையா? முந்தையை உலகில் புத்தி அலைந்தது மற்றும் இப்பொழுது தந்தையே உலகமாகி விட்டார். எனவே புத்தி அலைவது நின்று விட்டது, ஒருநிலைப்பட்டுவிட்டது ஏனென்றால் முந்தைய வாழ்க்கையில், சில நேரம் உடலின் உறவுகள் மேல், சில நேரம் சம்பந்தப்பட்ட பொருட்கள் மேல் இப்படி அனேக விஷயங்களில் புத்தி சென்றது. இப்பொழுது இவை அனைத்தும் மாறிவிட்டது. இப்பொழுது உடல் நினைவு இருக்கிறதா இல்லை ஆத்மாவா? ஒருவேளை உடல் மேல் புத்தி சென்றால் தவறு என்று நினைக்கிறீர்கள் தானே. பின்பு மாற்றிக் கொள்கிறீர்கள், உடலுக்குப் பதிலாக தன்னை ஆத்மா என்று நினைப்பதற்குப் பயிற்சி செய்கிறீர்கள். எனவே உலகம் மாறி விட்டது இல்லையா? சுயம் தானும் மாறிவிட்டீர்கள். தந்தை தான் உலகமா? அல்லது உலகத்தில் ஏதாவது கொஞ்சம் விட்டுப்போனது இருக்கிறதா? அழியக்கூடிய செல்வம் அல்லது அழியக்கூடிய உறவுகள் பக்கம் புத்தி போகவில்லையே இப்பொழுது என்னுடையது எதுவுமே இல்லை. என்னிடம் நிறைய செல்வம் இருக்கிறது இந்த மாதிரி கனவிலும் நனவிலும் இருக்காது

ஏனென்றால் அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டாகி விட்டது. என்னுடையது என்பது உன்னுடையது என்று ஆகி விட்டது. அல்லது என்னுடையது என்னுடையதே தான் மற்றும் தந்தையினுடையதும் என்னுடையது என்ற அப்படி நினைக்கவில்லையே? இந்த அழியும் உடல், செல்வம், பழைய மனம் என்னுடையது அல்ல, தந்தையிடம் கொடுத்தாகி விட்டது. முதன் முதலில் மாறுவதற்கான எண்ணமே என்னுடையது அனைத்தும் உன்னுடையது என்பது தான். மேலும் உன்னுடையது என்று கூறுவதில் தான் லாபம் இருக்கிறது. இதில் தந்தைக்கு லாபம் இல்லை உங்களுக்குத்தான் லாபம் ஏனென்றால் என்னுடையது என்று சொன்னால் மாட்டிக் கொள்கிறீர்கள். உன்னுடையது என்று கூறுவதால் விலகி விடுகிறீர்கள். என்னுடையது என்று கூறுவதால் சுமையுள்ளவர்கள் ஆகி விடுகிறீர்கள் மற்றும் உன்னுடையது என்று கூறுவதால் டபுள் லைட் டிரஸ்டி ஆகி விடுகிறீர்கள். எனவே எது நல்லது? லேசாவது நல்லதா? இல்லை சுமையாவது நல்லதா? இன்றைய உலகில் அதிக எடையுள்ள உடலிருந்தாலும் நன்றாக இருப்பதில்லை. அனைவரும் எடையைக் குறைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஏனென்றால் அதிக எடை என்றால் நஷ்டம் மற்றும் மெலிவதில் லாபம். அதேபோல் என்னுடையது என்னுடையது என்று கூறுவதால் புத்தியில் சுமை ஏற்பட்டு விடுகிறது. உனது உனது என்று கூறுவதால் புத்தி லேசாகி விடுகிறது. எதுவரை லேசாகவில்லையோ அதுவரை உயர்ந்த நிலை வரை சென்றடைய முடியாது. பறக்கும் கலை தான் ஆனந்தத்தின் அனுபவம் செய்விப்பது. லேசாக இருப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது! நல்லது.

வரதானம்: எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருந்து குஷியை அனுபவம் செய்யும் களைப்பற்ற மற்றும் சோம்பல் இல்லாதவர்கள் ஆகுக!

எந்த விதமான சம்ஸ்காரம் அல்லது சுபாவத்தை மாற்றுவதில் மனமுடைந்து போவது அல்லது அலட்சியம் வருவது கூடக் களைப்படைவது தான். இதிலிருந்து களைப்பற்றவர்களாக ஆகுங்கள். எதில் அலட்சியம் இல்லையோ அது தான் களைப்பற்ற நிலை. எந்தக் குழந்தை இந்த மாதிரி அலட்சியம் இல்லாமல் இருக்கிறார்களோ

அவர்கள் எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள் மேலும் குஷியை அனுபவம் செய்கிறார்கள். அவர்களுடைய மனதில் ஒருபோதும் துக்கத்தின் அலை வரமுடியாது எனவே எப்போதும் எதிரில் இருங்கள். பற்றும் குஷியை அனுபவம் செய்யுங்கள்.

**சுலோகன்: சித்தி சொரூபம் ஆவதற்காக ஒவ்வொரு எண்ணத்திலும் புண்ணியத்தை மற்றும் வார்த்தைகளில் ஆசீர்வாதங்களை சேமித்துக் கொண்டே செல்லுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺

# 05.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா மகிழ்ச்சியாக இருப்பது எப்படி?

இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன பார்த்தார்? ஒவ்வொரு குழந்தையும் தன்னை ஒவ்வொரு நேரமும் எந்தளவு மகிழ்ச்சியாக வைத்திருக்கிறார்கள், கூடவே மற்றவர்களுக்கும் தன் மூலம் எந்தளவு மகிழ்ச்சி செய்விக்கிறார்கள் என்பதை. ஏனெனில் பரமாத்மாவின் எல்லா பிராப்திகளுடைய பிரத்யக்ஷ சொரூபத்தின் மகிழ்ச்சி முகத்தில் தெரிகின்றது. மகிழ்ச்சி பிராமண வாழ்க்கையின் விசேஷ ஆதாரமாகும்! அல்ப கால மகிழ்ச்சி மற்றும் நித்திய சன்பன்னதாவின் மகிழ்ச்சி -இரண்டிற்குமிடையே இரவுபகலுக்கான வித்தியாசம் உள்ளது. அல்ப கால மகிழ்ச்சி, அல்ப கால பிராப்தி அடைபவர் முகத்தில் அல்ப காலத்திற்கு நிச்சயம் தெரியும் ஆனால் ஆன்மீக சம்பன்னதா தன்னையும் மகிழ்ச்சி ஆக்குகிறது மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியின் அதிர்வலைகள் மற்ற ஆத்மாக்கள் வரையும் சென்றடைகின்றது, மற்ற ஆத்மாக்களும் சாந்தி மற்றும் சக்தயை உணர்கின்றனர். எப்படி குளிர்ச்சியின் நிழலை ஒரு பழம் தரும் மரம், மனிதரை |சிறிது நேரம் குளிர்ச்சியாக உணரச் செய்கிறது, அதனால் அவரும் மகிழ்ச்சியாகிறார். அது போல ஆன்மீக மகிழ்ச்சியுடைய ஆத்மா, இத்தகைய பரமாத்ம-பிராப்திகளின் பலன்கள் நிறைந்துள்ளதால், அவர் மற்றவர்களுக்கும் தனது பிராப்திகள் என்ற நிழலின் மூலம் உடல் மற்றும் மனதில் அமைதியையும் சக்தியையும் உணர வைக்கிறார். மகிழ்ச்சியின் அதிர்வலைகள் சூரியனுடைய கிரணங்களைப் போல வாயுமண்டலத்தை, மனிதர்களை, மற்ற எல்லா விஷயங்களையும் மறக்கச் செய்து, உண்மையான ஆன்மீக சாந்தியின், குஷியின் அனுபவமாக மாற்றி விடுகிறது. தற்சமயத்தில் அஞ்ஞானி ஆத்மாக்கள் தங்களது வாழ்க்கையில் நிறைய செலவு செய்தாவது மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறார்கள். நீங்கள் என்ன செலவு செய்தீர்கள்? ஒரு பைசா செலவின்றி சதா மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் அல்லவா.

அல்லது பிறரது உதவி மூலம் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? பாப்தாதா குழந்தைகளுடைய சார்ட்'டை சோதனை செய்து கொண்டிருந்தபோது என்ன பார்த்தார். ஒன்று, சதா மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மற்றும் இரண்டாமவர், மகிழ்ச்சியாக இருப்பவர்கள். சதா என்பது இல்லை. மகிழ்ச்சியும் மூன்று விதமானதைப் பார்த்தார். (1) தன்னுடனே மகிழ்ச்சி, (2) பிறர் மூலம் மகிழ்ச்சி, (3) சேவை மூலம் மகிழ்ச்சி. ஒருவேளை மூன்றிலுமே மகிழ்ச்சியாக இருந்தால் பாப்தாதாவை தானாகவே மகிழ்ச்சியடையச் செய்கிறார் மற்றும் எந்த ஆத்மா மீது தந்தை மகிழ்ச்சி அடைகிறாரோ, அவரோ சதா வெற்றி மூர்த்தியாக இருக்கிறார்.

பல குழந்தைகள் தன்னிடமே மகிழ்ச்சியின்றி இருப்பதை பாப்தாதா பார்த்தார். சின்னச்சின்ன விஷயத்திற்காக மகிழ்ச்சியின்றி இருக்கிறார்கள். முதல் பாடம் 'நான் யார்?' என்பதைத் தெரிந்திருந்தும் கூட மறந்து விடுகிறீர்கள். தந்தை என்னவாக ஆக்கியுள்ளார், என்ன கொடுத்தார் என்பதை மறந்து விடுகிறீர்கள். தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் முழு ஆஸ்தியின் அதிகாரி ஆக்கி உள்ளார். சிலருக்கு முழு ஆஸ்தி, சிலருக்கு பாதி என கொடுக்கவில்லை. யாருக்காவது அரை அல்லது கால் பாகம் கிடைத்ததா? அரை பாகம் கிடைத்ததா அல்லது அரை பாகம் எடுத்துக் கொண்டீர்களா? தந்தையோ அனைவருக்குமே மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற வரதானம் அல்லது ஆஸ்தி கொடுத்துள்ளார். சில சக்திகளை குழந்தைகளுக்குத் தந்தார் மற்றும் சிலவற்றைத் தரவில்லை என இப்படியில்லை. தனக்காகவும் வைத்துக் கொள்ளவில்லை. சர்வ குண சம்பன்னம் ஆக்கினார், சர்வ பிராப்தி சொரூபம் ஆக்கினார் ஆனால் தந்தை மூலம் என்ன பிராப்திகள் கிடைத்துள்ளதோ அவற்றை தனக்குள் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்படி ஸ்தூல செல்வம் அல்லது சாதனம் இருந்தபோதும் செலவு செய்ய அல்லது சாதனங்களை உபயோகம் செய்ய வரவில்லை எனில் பிராப்தி அடைந்தும்கூட அதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக இருக்கின்றனர். அந்த மாதிரி எல்லா பிராய்திகளும் அல்லது கஜானாக்களும் அனைவரிடமும் உள்ளது ஆனால் காரியத்தில் ஈடுபடுத்தும் விதி தெரியவில்லை மற்றும் தேவைப்படும்போது உபயோகப்படுத்தவும் தெரியவில்லை. அப்புறம் சொல்கிறீர்கள் -எனக்கு இதைச் செய்யணும், இதைச் செய்யக்கூடாது என்பது தெரியும் ஆனால் அந்த நேரம் மறந்து போய் விட்டேன்; இப்படி

செய்யக்கூடாது என்பதை இப்போது புரிந்து கொண்டேன் என! அந்த நேரத்தில் ஒரு நொடிகூட சென்று விட்டது என்றால் வெற்றியின் குறிக்கோளை அடைய முடியாது ஏனெனில் நேரத்தின் வண்டி சென்று விட்டது. ஒரு நொடியோ அல்லது ஒரு மணி நேரமோ தாமதமாகியிருக்கலாம் -நேரமோ கடந்து விட்டதல்லவா. மற்றும் எப்போது நேரத்தின் வண்டி சென்று விட்டது என்றால் பின்பு தன் மீதே மனமுடைந்து போய் விடுகிறீர்கள் மற்றும் மகிழ்ச்சியற்ற சம்ஸ்காரம் வெளிப்படுகிறது -என் பாக்கியமே இப்படித்தான், டிராமாவில் எனது பாகமே இப்படித்தான் என.

முன்பும் கூறியிருந்தோம் -தன் மீதே மகிழ்ச்சியற்று இருப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன -ஒன்று, மனமுடைந்து போவது, இரண்டு, மற்றவர்களுடைய விசேஷத்தை அல்லது பாக்கியத்தை அல்லது பாகத்தைப் பார்த்து பொறாமைப்படுவது. தைரியம் குறைவாக உள்ளது, பொறாமை அதிகம் உள்ளது. மனமுடைந்தாலும் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது மற்றும் பொறாமைக்காரராலும் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஏனெனில் இரண்டு கணக்கினாலும் இத்தகைய ஆத்மாக்களின் ஆசை ஒருபோதும் நிறைவேறாது மற்றும் ஆசைகள் நல்லவனாக்க விடாது! ஆதலால் மகிழ்ச்சியின்றி இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக இருக்க சதா ஒரு விஷயத்தை புத்தியில் வையுங்கள் -டிராமாவினுடைய நியமப்படி சங்கம யுகத்தில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் ஏதாவது சிறப்பம்சம் கிடைத்துள்ளது. மாலையினுடைய இறுதி 16,000'ன் மணியாக இருந்தாலும்கூட, அதற்கும் கூட ஏதாவது சிறப்பம்சம் கிடைத்துள்ளது. அதிலிருந்தும் இன்னும் முன்னே சென்றால், 9-லட்சத்திற்கு என்ன மகிமை பாடப்பட்டுள்ளதோ, அவர்களுக்கும்கூட ஏதாவது சிறப்பம்சம் கிடைத்துள்ளது. தனது விசேஷங்களை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். இப்போதோ 9-லட்சம் ஆகவில்லை எனில் பிராமண வாழ்க்கையினுடைய பாக்கியத்தின் விசேஷங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்; அவற்றைத் தெரிந்து கொண்டு, காரியத்தில் ஈடுபடுத்துங்கள். மற்றவர்களின் விசேஷங்களை மட்டும் பார்த்து மனமுடைவதோ, பொறாமைப்படுவதோ கூடாது ஆனால் தனது விசேஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்துவது மூலம் ஒரு விசேஷமானது பின்னர் பல விசேஷங்களைக் கொண்டு வரும்.

ஒன்றுக்கு முன் புள்ளி வைத்தால் எத்தனை ஆகி விடும்? ஒன்றுக்கு முன் ஒரு புள்ளி வைத்தால் 10-என ஆகி விடும், இரண்டாவது புள்ளி வைத்தால் 100-என ஆகி விடும், மூன்றாவது வைத்தால்..., இந்தக் கணக்குப்போட வருமல்லவா. காரியத்தில் ஈடுபடுத்துவது என்றால் அதிகப்படுத்துவது. மற்றவர்களைப் பார்க்காதீர்கள். தனது விசேஷத்தைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

எப்படி பாருங்கள், பாப்தாதா சதா கள்ளங்கபடமற்ற களஞ்சியத்தின் (போலி-பண்டாரி, போலி தாதியை) உதாரணம் கூறுகிறார். மகாரதிகளின் பெயர் எப்போதாவது வரும் ஆனால் இவருடைய பெயர் வருகிறது. என்ன விசேஷம் இருந்ததோ அதை காரியத்தில் ஈடுபடுத்தினார். பண்டாராவை நிர்வகித்துக் கொண்டிருந்தார் என்றாலும் விசேஷத்தைக் காரியத்தில் ஈடுபடுத்துவது மூலம் விசேஷ ஆத்மாக்களுடைய உதாரணமாகப் பாடப்படுகின்றார். எல்லோரும் மதுபனை வர்ணிக்கிறீர்கள் எனில் தாதிகளுடைய விஷயங்களைக் கூறினோம் எனில் 'போலி' தாதியைப் பற்றியும் கூறினோம். பேசுவதோ இல்லை ஆனால் விசேஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்துவதால் தானும் விசேஷமாகி விட்டார், பிறரையும் விசேஷமானப் பார்வையில் பார்க்கின்றார். மகிழ்ச்சியாயிருக்க என்ன செய்ய வேண்டும்? விசேஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும், அப்போது வளர்ச்சியும் ஏற்படும்; எப்போது எல்லாம் வந்து விடுகிறது எனில் சம்பன்னமாகி விடுவீர்கள் மற்றும் பிரஸன்னதா'வின் ஆதாரம் சம்பன்னதா! யார் தன்னிடமே மகிழ்ச்சியாக இருக்கிறாரோ அவர் மற்றவர்களிடமும் மகிழ்ச்சியாக இருப்பார், சேவையிலும் மகிழ்ச்சியாக இருப்பார். எந்த சேவை கிடைத்தாலும் அதில் மற்றவர்களையும் மகிழ்ச்சியுறச் செய்து சேவையில் நம்பர் முன்னே பெறுங்கள். அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய சேவை உங்களுடைய மகிழ்ச்சியான உருவம் செய்யும். என்றால் கேட்டீர்களல்லவா, சார்ட்'ல் என்ன பார்த்தோம் என்பதை. நல்லது!

டீச்சர்களுக்கு முன்னால் அமர்வதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது, ஏனெனில் வழிகாட்டியாகி வந்துள்ளீர்கள் எனில் உழைப்பு நிறைய செய்கிறீர்கள். ஒருவரை 'ஸூக்தாம்'லிருந்து கூப்பிடுவோம் என்றால் அடுத்தவரை 'விஷால் பவன்'லிருந்து கூப்பிடுவோம். உடற்பயிற்சி

நன்றாக ஆகி விடுகிறது. சென்டரிலோ நடப்பதில்லை. எப்போது ஆரம்பத்தில் சேவை ஆரம்பமானதோ அப்போது நடந்து சென்றீர்கள் அல்லவா. உங்களுடைய பெரிய தாதிகளும் நடந்தேதான் சென்றனர். சாமான்களின் பையை கையில் எடுத்துக் கொண்டு, நடந்து சென்றனர். இந்நாளில் நீங்கள் அனைவரும் உருவான உருவாக்கப்பட்டதில் இருக்கிறீர்கள் என்றால் அதிர்ஷ்டசாலிகள் அல்லவா. உருவான உருவாக்கப்பட்ட சென்டர் கிடைத்து விட்டது. உங்களுடைய கட்டிடம் தயாராகி விட்டது. முன்பு ஜமுனாகாட்'ல் இருந்தீர்கள். ஒரே ஒரு அறை -இரவு தூங்குவது, பகலில் சேவைக்காக இருந்தது ஆனால் குஷி குஷியுடன் யார் தியாகம் செய்தனரோ அவரது பாக்கியத்தின் பலன் இப்போது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பழத்தை உண்பதற்கு சரியான நேரத்தில் வந்துள்ளீர்கள். இவர்கள் விதைத்தனர், உண்பது நீங்கள். பழம் சாப்பிடுவது மிக எளிதல்லவா. இப்போது அந்த மாதிரி பலன் சொரூப தரமானவர்களை தயார் செய்யுங்கள். புரிந்ததா? எண்ணிக்கையோ இருக்கவே செய்கிறது மற்றும் இதுவும் வேண்டும். 9-லட்சம் வரை செல்ல வேண்டும் எனில் எண்ணிக்கை மற்றும் தரம் இரண்டுமே வேண்டும்; ஆனால் 16,000'ன் உடைய உறுதியான மாலையைத் தயாராக்குங்கள். இப்போது தரமான சேவை மீது விசேஷமாக அடிக்கோடிடுங்கள்.

ஒவ்வொரு குரூப்பிலும் டீச்சர்களும் வருகின்றனர், குமாரிகளும் வருகின்றனர் ஆனால் ஒன்றும் வெளிப்படவில்லை. மதுபன் நன்றாக உள்ளது, தந்தையிடம் அன்பும் உள்ளது ஆனால் சமர்ப்பணம் ஆவதற்கு யோசிக்கின்றனர். யார் தானாகவே முன்வருகின்றனரோ அவர்கள் தடையின்றி செல்கிறார்கள் மற்றும் சொல்வதால் ஆகிறார்களோ அவர்கள் நிற்பது, செல்வது என உள்ளனர்; அவர் அடிக்கடி உங்களைத்தான் கூறுவார் -நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் சமர்ப்பணம் ஆக வேண்டாம் என. இதற்கு வெளியே தங்கி சேவை செய்தால் நன்றாக இருக்கும் என சிலர் நினைக்கின்றனர் ஆனால் வெளியே தங்கி சேவை செய்வது மற்றும் தியாகம் செய்து சேவை செய்வது இதில் வித்தியாசம் உள்ளது. யாருக்கு சமர்ப்பணத்தின் மகத்துவம் தெரியுமோ அவர் சதா பல விஷயங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மெல்ல மெல்ல வந்து விட்டனர், பலர் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டனர், என்றால் டீச்சர்கள் தனது

மகத்துவத்தை நல்ல விதமாகத் தெரிந்துள்ளீர்களா? வேலை மற்றும் இந்த சேவை -இரண்டு வேலையும் செய்பவர்கள் சிறந்தவர்களா அல்லது ஒரு வேலை செய்பவர்கள் சிறந்தவர்களா? அவர்களுக்குப் பின்பும் கூட இரட்டைப் பாகம் (part) நடிக்க வேண்டியுள்ளது. நல்லது தடையற்றவர்கள், இருப்பினும் இரட்டைப் பாகமோ இருக்கிறதல்லவா உங்களுக்கோ ஒரே ஒரு பாகம் தான். இல்லறத்தினர் மூன்று பாகங்களை நடிக்க வேண்டியுள்ளது -ஒன்று, படிப்பு, இரண்டு சேவை மற்றும் கூடவே குடும்பத்தையும் பாலனை செய்வது. நீங்களோ எல்லா விஷயங்களிலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள். நல்லது!

எல்லா சதா மகிழ்ச்சியின் விசேஷத்தில் சம்பன்ன சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தனது விசேஷத்தைத் தெரிந்து காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய விவேகமான மற்றும் தரமான (sensible & essenceful) ஆத்மாக்களுக்கு, சதா மகிழ்ச்சியாயிருக்கக்கூடிய, மகிழ்ச்சி செய்விக்கக்கூடிய சிரேஷ்ட மகான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**குழுக்களுடன் சந்திப்பு: (சாரம்)**

ஆக்ரா - ராஜஸ்தான்: ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்கிற குழந்தைகள்தான் தந்தையின் உள்ளத்தில் அமர்ந்துள்ளனர். அழியாத சிம்மாசனம் அல்லது இதய சிம்மாசனத்தை மறந்து தேகத்தின் பூமியில், மண்ணில் வந்து விடாதீர்கள்.

குஜராத் குரூப்: எந்த ஒரு வேலையும் யோகயுக்த் ஆகி செய்யுங்கள். குஷி குஷியாகச் செய்தீர்கள் என்றால் களைப்படைய மாட்டீர்கள். வலுக்கட்டாயமாகச் செய்தால் களைப்படைந்து விடுவீர்கள்.

மாதாக்கள்: சதா குஷியாக இருங்கள். என்ன செய்வது, எப்படி செய்வது,... என்ற இந்தப் பாட்டைப் பாடாதீர்கள். குஷியின் பாடலைப் பாடுங்கள்.

இல்லறத்தினர்: தந்தை நம்மைத் தேடி கண்டுபிடித்து, தன்னுடையவராக்கி உள்ளார் -இதே போதையில் அல்லது குஷியில் ஒவ்வொரு காரியத்தையும் செய்தவாறே வெற்றி மூர்த்தி ஆகிக்

கொண்டே செல்லுங்கள். இந்த நினைவு வரதான ரூபமாகி விடும், சக்திசாலி ஆக்கி விடும்.

அகமதாபாத் ஹாஸ்டல் குமாரிகளுடன்: கிரீடதாரியை சதா சிரேஷ்டமானவர் எனக் கூறுவர், கூடை சுமப்பவரை அல்ல! அவரோ வலுக்கட்டாயமாக கூடை சுமக்கிறார். சிலர் வேலைக்குப் போகின்றனர் எனில் கண்டிப்பாக ஏதாவது கட்டாயம் என்பது இருக்கும்.

பாண்டவர்கள்: ஒருவேளை குமாரியாக இருந்திருந்தால் நாமும் டீச்சராகி இருப்போம், சென்டரும் கிடைத்திருக்கும் என இப்படி பாண்டவர்கள் நினைக்கவில்லைதானே. ஒவ்வொருவரின் பாகத்திலும் அவரவருக்கென விசேஷம் உள்ளது, ஒவ்வொருவரின் விசேஷமும் தனியானது மற்றும் மேன்மையானது. ஒருவர் மற்றவரது பாகத்தைப் பார்த்து குஷியாக இருக்க வேண்டும். தனது பாகத்தைக் குறைவாக நினைக்கக்கூடாது. எல்லோருடைய பாகமும் மிக மிக நல்லதே.

பஞ்சாப் குரூப்: உங்களுக்கு சுயம் தந்தையே ராஜதிலகம் அளித்துள்ளார். இந்த ராஜதிலகத்தின் முன்பு சத்யுகத்தின் ராஜதிலகம் ஒன்றும் பெரிய விஷயம் இல்லை.
உண்மையான உள்ளத்துடன் தந்தையிடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டால், அதன் அடையாளமாக சதா டபுள் லைட் ஆக இருப்பீர்கள், எவ்வித சுமையும் இருக்காது.

பாம்பே குரூப்: சதா இந்த நினைவில் இருங்கள் -நான் மாஸ்டர் படைப்பவன், இதனால் முயற்சியும் வேகமாகி விடும். முயற்சி தீவிர வேகமாவதற்கான ஆதாரம் -டபுள் லைட் ஆவது! டபுள் லைட் ஆவதற்காக இந்த ஒரு சொல்லை சதா நினைவில் வையுங்கள் -மேரா பாபா!
கஷ்டப்பட்ட நாட்கள் முடிந்து விட்டன. கஷ்டம் என்ற சொல் இந்த பிராமண வாழ்க்கையிலும் இல்லை, தேவதை வாழ்க்கையிலும் இல்லை. எனவே கஷ்டத்தை எளிதாக்கக் கூடியவர் என்று தந்தையை மகிமை செய்கின்றனர், எனில் தந்தையின் மகிமை எதுவோ அது குழந்தைகள் உங்களுடையதும் ஆகும். நல்லது!

✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳ ✳

## 09.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## யோகயுக்த், யுக்தியுக்த் ஆவதற்கான யுக்தி!

இன்று பாப்தாதா தனது எல்லா குழந்தைகளிலும் விசேஷமாக இரண்டு விதமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று, சதா யோகயுக்த் மற்றும் ஒவ்வொரு செயலிலும் யுக்தியுக்த். இரண்டாவது, யோகி ஆனால் சதா யோகயுக்த் ஆக இல்லை மற்றும் சதா ஒவ்வொரு செயலிலும் தானாகவே யுக்தியுக்த் ஆக இல்லை. எண்ணம், சொல், செயல் -இம்மூன்றிலும் சில சமயம் இதில், சில சமயம் அதில் யுக்தியுக்த் ஆக இல்லை. அதே போல், பிராமண வாழ்க்கை என்றால் தானாகவே யோகயுக்த் மற்றும் சதா யுக்தியுக்த்! பிராமண வாழ்க்கையின் அலௌகீகத்தன்மை அல்லது விசேஷத்தன்மை அல்லது விலகியும் அன்பானவராகவும் இருப்பதுதான் -யோகயுக்த் மற்றும் யுக்தியுக்த் ஆகும்; ஆனால் சில குழந்தைகள் இந்த விசேஷத்தில் சகஜமாகவும் இயல்பாகவும் இருந்தனர் மற்றும் சிலர் கவனமும் வைக்கின்றனர், இருந்தாலும் சதா இரண்டு விஷயங்களின் அனுபவம் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஞானமோ அனைவருக்குமோ உள்ளது மற்றும் லக்ஷியமும் அனைவருக்குமே ஒன்றாகத்தான் உள்ளது. யோகயுக்த் மற்றும் யுக்தியுக்த் ஸ்திதியின் அனுபவத்தின் அருகில் உள்ளனர் மற்றும் சிலர் சில சமயம் வேகமான முயற்சி மூலம் அருகில் வருகின்றனர் ஆனால் சில சமயம் அருகில் மற்றும் சில சமயம் போகப்போக ஏதாவது காரணவசமாகி நின்று விடுகின்றனர். ஆதலால் சதா லக்ஷணத்தினுடைய அருகாமையின் உணர்வு ஏற்படுவதில்லை. எல்லா பிராமண ஆத்மாக்களிலும் இந்த சிரேஷ்ட லக்ஷியம் வரை நம்பர்-1 அருகில் இருப்பவர் யார்? பிரம்மாதந்தை! இந்த வெற்றியை அடைய அவர் எந்த விதியை தனதாக்கினார்? சதா யோகயுக்த் ஆக இருப்பதற்கு எளிதான விதி -சதா தன்னை சாரதி மற்றும் சாக்ஷி எனப் புரிந்து நடப்பது!

# 1989 அவ்யக்த முரளி

சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் இந்த ரதத்தின் சாரதிகள். ரதத்தை ஓட்டுகின்ற ஆத்மா சாரதி ஆவார். இந்த நினைவு தானாகவே இந்த ரதம் அதாவது தேகத்திலிருந்து விலகியிருக்கச் செய்கிறது, எவ்விதமான தேக உணர்விலிருந்தும் விலகியிருக்கச் செய்கிறது. தேக உணர்வு இல்லையேல் எளிதாக யோகயுக்த் ஆக முடியும் மற்றும் ஒவ்வொரு செயலும் யோகயுக்த், யுக்தியுக்த் ஆக தானாகவே ஆகி விடும். தன்னை சாரதி எனப் புரிந்து கொள்வதால் எல்லா கர்ம இந்திரியங்களும் தனது கட்டுப்பாட்டில் இருக்கும், அதாவது எல்லா கர்ம இந்திரியங்களையும் சதா லக்ஷியம் மற்றும் லக்ஷணத்தின் குறிக்கோளுக்கு அருகில் கொண்டு வருவதற்கான கட்டுப்படுத்தும் சக்தி வந்து விடுகிறது. சாரதி தானாகவே எந்த கர்ம இந்திரியங்களுக்கும் வசமாக முடியாது. ஏனெனில் மாயா எப்போது யார் மீதாவது போரிடுகிறது என்றால் மாயா போரிடும் விதியாவது, ஏதாவது ஸ்தூல கர்ம இந்திரியங்கள் அல்லது சக்திகள் -மனம் புத்தி சம்ஸ்காரத்தை பிற வசமாக்கி விடும். சாரதி ஆத்மாக்கள் உங்களுக்குத் தந்தை மூலம் மகாமந்திரம், வசீகரிக்கும் மந்திரம் என்ன கிடைத்ததோ அதை மாற்றம் செய்து வசீகரிப்பதற்குப் பதில் வசமாகுபவர் ஆக்கி விடுகிறது. மற்றும் ஒரு விஷயத்திலும்கூட வசமாகியிருந்தால் எல்லா பூதங்களும் பிரவேசமாகி விடுகின்றது. ஏனெனில் இந்த பூதங்கள் தங்களுக்குள் மிகுந்த ஒற்றுமையுடன் இருக்கின்றன. ஒரு பூதம் வந்தால், அதாவது அனைத்தையும் அழைத்துக் கொண்டு வந்து விடும். பின்பு என்ன ஆகிறது? இந்த பூதங்கள் உங்களை சாரதியிடமிருந்து சுயநலமிக்கவராக்கி விடுகிறது. பின்பு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எப்போது சாரதி என்ற ஞாபகம் வருகிறதோ அப்போது பூதங்களை விரட்டுவதற்கான யுத்தம் செய்கிறீர்கள். யுத்தத்தின் ஸ்திதியை யோகயுக்த்-ஸ்திதி என்று கூற மாட்டோம். ஆதலால் யோகயுக்த் அல்லது யுக்தியுக்த் குறிக்கோளுக்கு அருகில் செல்வதற்குப் பதிலாக நின்று விடுகிறீர்கள் மற்றும் முதலாவது ஸ்திதியிலிருந்து இரண்டாவதில் வந்து விடுகிறீர்கள். சாரதி என்றால் வசமாகுபவர் அல்ல ஆனால் கட்டுப்பாட்டுடன் நடத்துபவர், என்றால் நீங்கள் அனைவரும் யார்? சாரதிகள்தானே!

சாரதி என்றால் ஆத்ம அபிமானி, ஏனெனில் ஆத்மா தான் சாரதி. பிரம்மாதந்தை இந்த விதி மூலம்தான் நம்பர்-1 ஆக வெற்றி பெற்றார்.

ஆதலால் தந்தையும் இவரது சாரதி ஆனார். சாரதி ஆவதற்கான நினைவுச்சின்னத்தை தந்தை செய்து காட்டினார், தந்தையைப் பின்பற்றுங்கள். சாரதி ஆகி சதா சாரதி வாழ்க்கையில் மிக விலகிய மற்றும் அன்பான ஸ்திதியின் அனுபவம் செய்வித்தார்; ஏனெனில் தேகத்தை நிரந்தரமாகச் செய்து, தந்தை பிரவேசம் செய்கிறார், அதாவது சாரதி ஆகிறார், தேகத்திலேயே நிரந்தரமாக இருப்பதில்லை. எனவே அன்பாகவும் விலகியும் இருக்கிறார். இப்படி பிராமண ஆத்மாக்கள் நீங்கள் அனைவருமே தந்தைக்குச் சமமாக சாரதியினுடைய ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். போகும்போதும் வரும்போதும் இதை சோதனை செய்யுங்கள் -நான் சாரதி, எல்லாவற்றையும் நடத்தக்கூடிய விலகிய மற்றும் அன்பான ஸ்திதியில் நிலைத்திருக்கிறேனா என்று. இடையிடையே இதை சோதனை செய்யுங்கள். முழு நாளும் கழிந்த பின் இரவு சோதனை செய்வது என இப்படியில்லை. முழு நாளும் கழிந்தது என்றால் கழிந்த அந்த நேரம் வருமானத்திலிருந்தும் சென்று விட்டது. எனவே இழந்து விட்டு பின் கலங்கக் கூடாது! இது தானாகவே இயல்பான சம்ஸ்காரமாக ஆக்குங்கள். எதை? சோதனை செய்வதை! எப்படி யாருக்காவது ஏதாவது பழைய சம்ஸ்காரம் இந்த பிராமண வாழ்க்கையில் இப்போதும்கூட முன்னேறுவதில் தடை ரூபமாகி விடுகிறது எனில் கூறுகிறார்தானே விரும்பாவிடினும் கூட சம்ஸ்கார வசமாகி விடுகிறேன் என. எதைச் செய்ய விரும்பவில்லையோ அதைச் செய்து விடுவது. எப்போது தலைகீழான சமஸ்காரம் நீங்கள் விரும்பாமலேயே ஏதாவது கர்மம் செய்ய வைத்து விடுகிறது எனில் இந்த இயல்பான சோதனையினுடைய சுத்த சமஸ்காரத்தை தனதாக்கி கொள்ள முடியாதா? எவ்வித உழைப்புமின்றி இந்த சோதனையினுடைய சுத்த சம்ஸ்காரம் தானாகவே காரியங்களைச் செய்விக்கும். மறந்து விடுகிறது அல்லது மிகுந்த பிஸி ஆக இருந்தேன் என இவ்வாறு கூற மாட்டீர்கள். இது அசுத்த அல்லது வீணான சம்ஸ்காரமாகும். பல குழந்தைகளிடம் அசுத்த சம்ஸ்காரம் இல்லை என்றாலும் வீணான சமஸ்காரம் உள்ளது. இந்த அசுத்த வீணான சம்ஸ்காரத்தை மறக்க நினைத்தாலும் மறக்க முடியவில்லை மற்றும் எனது உள்நோக்கம் இது இல்லை ஆனால் இது என்னுடைய பழைய சுபாவம் அல்லது சம்ஸ்காரம் என கூறவும் செய்கிறீர்கள். ஆகவே அசுத்தத்தை மறப்பதில்லை ஆனால் சுத்த சம்ஸ்காரத்தை எப்படி மறந்து போகிறீர்கள்? அசுத்த பழக்கத்தால் நீங்கள்

நிர்பந்திக்கப்படுகிறீர்கள் மற்றும் இந்த பழக்கத்தால் நீங்கள் வலிமை பெறுவீர்கள். எனவே, தொடர்ந்து யோகயுக்த்-யுக்தியுக்தாக இருக்கும் முறை என்னவென்று கேட்டீர்களா? 'சாரதியாகி நடப்பது! எதைச் செய்தாலும், பார்த்தாலும், கேட்டாலும் சாரதி தானாகவே சாட்சியாக இருப்பார். சாட்சியாகி பார்ப்பது, சிந்திப்பது, செய்வது எல்லாவற்றிலும் எல்லாமே செய்தாலும் எதிலும் ஒட்டாதவராக இருப்பார், அதாவது மாயாவின் வர்ணத்திலிருந்து விலகியே இருப்பார். எனவே பாடம் உறுதியாகி விட்டதா! பிரம்மாதந்தையைப் பின்பற்றுபவர்கள்தானே. பிரம்மாதந்தையிடம் மிக்க அன்பு உள்ளதல்லவா. அன்பின் அடையாளம் தந்தைக்குச் சமமாவது, அதாவது பின்பற்றுவது.

டீச்சர்கள் அனைவருக்கும் தந்தையிடம் எவ்வளவு அன்பு உள்ளது. தந்தை சதா டீச்சர்களை தனது சேவையினுடைய அருகிலிருக்கும் துணைவர்கள் என நினைக்கின்றார். எனவே முதலில் டீச்சர்கள் பின்பற்றுவீர்கள்தானே! இதில் சதா இந்த லக்ஷியத்தை வையுங்கள் -முதலில் நான்! பொறாமையினால் முதலில் நான் என்பது கூடாது, அது நஷ்டத்தை விளைவிக்கும். அதே வார்த்தை தான் 'முதலில் நான்' ஆனால் ஒன்று பொறாமை வசமான நான்; ஆகவே இதனால் முதல் என்பதற்குப் பதிலாக கடைசிக்குச் சென்று விடுவீர்கள். முதலிலிருந்து கடைசிக்கு சென்று விடுவது மற்றும் தந்தையைப் பின்பற்றுவதில் முதலில் நான் என்பது மேலும் செய்வது என்றால் முதல் (first) உடன் சேர்ந்து நீங்களும் முதல் (first) ஆகி விடுவீர்கள். பிரம்மா முதல் நம்பர் அல்லவா! ஆகவே சதா இந்த லக்ஷியம் வையுங்கள், டீச்சர்கள் என்றால் தத்தையைப் பின்பற்றுபவர் மற்றும் நம்பர்-1 தந்தையைப் பின்பற்றுபவர். எப்படி பிரம்மா நம்பர்-1 ஆனார் என்றால் பின்பற்றுபவரும் கூட நம்பர்-1'ன் லக்ஷியம் வையுங்கள். எல்லா டீச்சர்களும் இப்படி உறுதியாக இருக்கிறீர்கள்தானே, பின்பற்றுவதற்குத் தைரியம் இருக்கிறதா? ஏனெனில் டீச்சர்கள் என்றால் நிமித்தமாகக் கூடியவர்கள், அநேக ஆத்மாக்களுக்கு நிமித்தமானவர்கள். ஆகவே நிமித்தம் ஆகக்கூடியவர்கள் மீது எத்தனை பொறுப்பு உள்ளது. எப்படி பிரம்மாதந்தை நிமித்தமாக இருந்தார் என்றால் பிரம்மாதந்தையைப் பார்த்து எவ்வளவு பிராமணர்கள் உருவானார்கள். அது போல டீச்சர்கள் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் -உணவு தயாரித்தாலும் சரி, சுத்தம் செய்து கொண்டிருந்தாலும் சரி, ஆனால் ஒவ்வொரு காரியம்

செய்யும்போதும் இது நினைவிலிருக்கட்டும் -நான் நிமித்தமானவன், 'என்ன மற்றும் எவ்வாறு' நான் செய்வேனோ நிமித்த ஆத்மா என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள்! ஆதலால் பாப்தாதா சதா கூறுகின்றார், ஒருபக்கம் பேசுவது, மறுபக்கம் பாத்திரம் கழுவுவது என, இரண்டு வேலைகளும் யோகயுக்த், யுக்தியுக்த் ஆக இருக்க வேண்டும். வேலை எதுவாக இருந்தாலும் ஆனால் ஸ்திதி சதா யோகயுக்த், யுக்தியுக்த் ஆக இருக்க வேண்டும். சொற்பொழிவு செய்யும்போது மட்டும் யோகயுக்த் ஆக இருப்பது மற்றும் பாத்திரம் கழுவும்போது, அதாவது சாதாரண வேலை செய்யும்போது ஸ்திதி சாதாரணமாக இருப்பது என்று இப்படி கூடாது. ஒவ்வொரு நேரமும் தந்தையைப் பின்பற்ற வேண்டும். கேட்டீர்களா!

முன்னால் அமர்ந்திருக்கிறீர்கள் எனில் முன்னாடி அமர்ந்திருப்பதிலும் எவ்வளவு நன்றாக இருக்கிறது மற்றும் சதா முன்னேறுவது எவ்வளவு நன்றாக இருக்கும். எப்போதாவது ஏதாவது கடினமான சமஸ்காரம் பின்னால் தள்ளி விட முயற்சித்தது எனில், இந்தக் காட்சியை நினைவில் வையுங்கள். எப்போது முன்னால் அமர்வது நன்றாக உள்ளது எனில் முன்னேறுவதில் ஏன் பின்னால் இருக்க வேண்டும்? மதுபன் வந்தடைவது மற்றும் தன்னை தைரியமாக ஊக்கத்தில் கொண்டு வருவது; ஏனெனில் பின்னால் இருக்கக்கூடியவர்கள் நிறைய பேர் பின்னாலே வருவார்கள், நீங்களும்கூட பின்னால் இருந்து விட்டீர்கள் எனில் பின்னாலிருப்பவருக்கு முன்னால் செல்ல வேண்டியிருக்கும். ஆதலால் சதா இதை நினைவில் வைத்திருங்கள், நாம் முன்னால் இருப்பவர்கள்! பின்னால் இருப்பது என்றால் பிரஜை ஆவது. பிரஜையோ ஆகக் கூடாதுதானே. பிரஜாயோகியோ இல்லை, ராஜயோகி தானே; என்றால் தந்தையைப் பின்பற்ற வேண்டும். நல்லது!

வெளிநாட்டினர் என்ன செய்வீர்கள்? தந்தையைப் பின்பற்றுவீர்கள்தானே! எதுவரை வந்தடைவீர்கள்? எல்லாத் துறைகளிலும் வருவீர்கள். யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, தந்தையைப் பின்பற்றி, வேகமாக, முதலாவதாக வர வேண்டும். முதலாவதாக ஒருவர்தான் வர முடியும் என நினைக்காதீர்கள் ஆனால் முதல் பிரிவில் நிறைய பேர் இருப்பார்கள் அல்லவா. முதல் எண்ணில் பிரம்மாபாபா தான் வருவார் ஆனால் முதல் பிரிவில் தோழர்களாக

கூடவே இருப்பீர்கள். ஆதலால் முதலில் வர வேண்டும். ஒரு முதல் எண்ணில் மட்டும் வர முடியாது ஆனால் முதல் பிரிவினர் அதிகம் இருப்பர். இப்படி நினைக்காதீர்கள் -முதல் எண்ணோ ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டது ஆதலால் இரண்டில் வருவோம் என; இரண்டாம் பிரிவில் செல்லக் கூடாது. முதல் நம்பர் என்றால் அர்ஜுன்! முதல் பிரிவில் வருவதற்கு எல்லோருக்குமே வாய்ப்பு உள்ளது, எல்லோரும் வர முடியும். முதல் பிரிவு எல்லையற்றது, குறைந்தது ஒன்றும் இல்லை எனில் அனைவருமே முதலாவதாக வருவீர்கள்தானே, உறுதியாக? நல்லது!

சதா பிரம்மாதந்தையைப் பின்பற்றக்கூடிய, சதா தானாகவே யோகயுக்த்-யுக்தியுக்தியாக இருக்கக்கூடிய, சதா சாரதியாகி கர்மேந்திரியங்களை சிரேஷ்ட வழியில் நடத்தக்கூடிய, அத்தகைய சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

குழுக்களுடன் சந்திப்பு (சாரம்) -இந்தோர் ஜோன் குரூப்: 'அந்த் மதி ஸோ கதி' என்று ஏன் பாடப்பட்டுள்ளது? ஏனெனில் இந்த சக்கரத்தின் இறுதியில் தந்தை வந்து உயர்ந்த வழியைத் (ஸ்ரீமத்) தருகிறார். எனில் இந்த இறுதி நேரத்தில் ஸ்ரீமத் பெற்றுக் கொண்டு அநேக ஜென்மங்களுக்கு சத்கதி அடைகிறீர்கள். ஆகவே இந்த சங்கம யுகத்து மகிமையைத்தான் பக்தர்களும் செய்து கொண்டிருக்கின்றனர். நினைவுச்சின்னமாக எப்படி ஆனது? நீங்கள் தந்தையின் நினைவில் இருந்து எல்லாக் காரியங்களும் செய்வதால்தான்!

மாதாக்கள்: இல்லறத்தில் இருந்தாலும் நான் டிரஸ்டி, சேவாதாரியாகி சேவை செய்து கொண்டிருக்கின்றேன் என நினைத்து எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள். என்னுடையது என்பதால்தான் தொந்தரவு அடைகிறீர்கள், என் குடும்பம், என் குழந்தைகள்,.... என்னுடையது, என்னுடையது என்றால் அபிமானத்தில் வருவது; உன்னுடையது, உன்னுடையது என்றால் சுவமானத்தில் இருப்பது ஆகும்.

## 1989 அவ்யக்த முரளி

இரட்டை வெளிநாட்டினர்: எல்லையற்ற தந்தையின் ஆஸ்தியும் எல்லையற்றதாகவே இருக்கும். பாப்தாதா இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் தீவிர முயற்சியின் வேகத்தைப் பார்த்து குஷி அடைகின்றார், டபுள் லக்கி குழந்தைகள்! பாரதவாசிகளுக்கு ஒவ்வொரு கல்பமும் நாம் அழியாத பாரதவாசிகளாவோம் என்ற இந்த போதை உள்ளது. அழியாத கண்டமோ பாரதம் அல்லவா! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தெய்வீக பிராமண பிறவியின் பாக்கியத்தின் ரேகைகள்!

இன்று உலகைப் படைப்பவர் பாப்தாதா தன்னுடைய உலகத்தின் அனைத்து மனித ஆத்மாக்கள் ரூப குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து ஆத்மாக்களில் அதாவது குழந்தைகளில் இரண்டு விதமான குழந்தைகள் இருக்கிறார்கள். ஒன்று தந்தையைத் தெரிந்தவர்கள், மற்றும் இன்னொன்று அழைப்பவர்கள் அல்லது அறிந்து கொள்ள பல வழிகளில் முயலுபவர்கள் ஆனால் அனைவரும் குழந்தைகள் தான். அப்படி இன்று இரண்டு விதமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அனைத்துக் குழந்தைகளில் தெரிந்து கொண்ட குழந்தைகள் மற்றும் பிராப்தி அடைந்து கொண்டிருக்கும் குழந்தைகள் மிகக் குறைவு, மற்றும் அழைத்துக் கொண்டிருப்பவர்கள் மற்றும் அறிந்து கொள்ள முயலுபவர்கள் அனேகர் இருக்கிறார்கள். தெரிந்து கொண்டிருக்கும் குழந்தைகளின் நெற்றியில் உயர்ந்த பாக்கியத்தின் கோடுகள் மின்னிக் கொண்டிருக்கின்றன. தந்தை மூலமாகக் கிடைத்த தெய்வீக பிராமண பிறவியின் கோடு தான் அனைத்தையும் விட உயர்ந்த பாக்கியத்தின் கோடாகும். தெய்வீக பிறவியின் ரேகை மிக உயர்வாக மின்னிக் கொண்டிருக்கிறது. அழைத்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் தெரியாதவர்கள் கூட பகவான் தான் தங்களைப் படைத்தார் என்று நம்புகிறார்கள் ஆனால் அவரைத் தெரியாமல் இருக்கும் காரணத்தினால் தெய்வீக பிறவியின் அனுபவம் செய்ய முடியாது. எங்களுக்கு பாப்தாதா தெய்வீக பிறவி கொடுத்தார் என்று நீங்களும் கூறுகிறீர்கள். மேலும் அவர்களும் பகவான் தான் படைத்தார், பகவான் தான் படைப்பவர் மற்றும் பகவான் தான் வளர்ப்பவர் என்று கூறுகிறார்கள் ஆனால் இருவர் கூறுவதிலும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் அனுபவத்தில், போதையில், ஞானத்தின் ஆதாரத்தில் எங்களை பாப்தாதா அதாவது தாய் தந்தையினர் படைத்தார்கள் அதாவது பிராமண பிறவி

கொடுத்தார்கள் என்று கூறுகிறீர்கள். படைப்பவரை பிறவியை, பிறந்த ஜாதகத்தை, தெய்வீக பிறவியின் விதி மற்றும் சித்தி சொரூபம் ஆகிய அனைத்தையும் தெரிந்திருக்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் தன்னுடைய தெய்வீக பிறவியின் பிறந்த நாள் ஞாபகம் இருக்கிறது இல்லையா? இந்த தெய்வீக பிறவியின் விசேஷம் என்ன? சாதாரண பிறவி எடுத்த ஆத்மாக்கள் தன்னுடைய பிறந்த நாளைத் தனியாகக் கொண்டாடுவார்கள், திருமண நாளைத் தனியாகக் கொண்டாடுவார்கள், நண்பர்கள் தினத்தைத் தனியாக கொண்டாடுவார்கள் மற்றும் படிப்பின் தினத்தைக் கூடத் தனியாகக் கொண்டாடுவார்கள் ஆனால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? உங்களுடைய பிறந்த நாளும் அது தான் என்றால் திருமண நாள் மற்றும் படிப்பின் நாளும் அது தான். மதர் டே என்று சொன்னாலும், பாதர் டே என்று சொன்னாலும், நிச்சயதார்த்த நாள் என்று சொன்னாலும் அனைத்தும் ஒன்று தான். அப்படிப்பட்ட தெய்வீக பிறவியைப் பற்றி எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? முழு கல்பத்திலும் ஆத்மாக்களாகிய உங்களுக்கு அந்த மாதிரியான நாள் ஒருபோதும் வராது. சத்யயுகத்தில் கூட பிறந்த நாளும் திருமண நாளும் ஒன்றாக இருக்காது ஆனால் இந்த சங்கமயுகத்தில் இந்த மகான் பிறயிவில் இது விசேஷமாகவும் மற்றும் விசித்திரமாகவும் உள்ளது. அப்படி எந்த நாள் பிராமணன் ஆனீர்களோ அது தான் உங்களுடைய பிறந்த நாளும், மற்றும் உங்களுடைய திருமண நாள் கூட அது தான். ஏனென்றால் ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்று தானே அனைவரும் உறுதி அளிக்கிறீர்கள். முதலிலேயே இந்த உறுதியான எண்ணத்தை உருவாக்குகிறீர்கள் இல்லையா? உங்களுடன் இருந்து தான் சாப்பிடுவோம், உங்களோடு தான் அமருவோம், உங்ளுடன் தான் அனைத்து உறவுகளையும் வைத்துக் கொள்வோம் என்று அனைவரும் உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா? பாண்டவர்கள், மாதர்கள், குமாரிகள் அனைவரும் உறுதி அளித்திருக்கிறார்கள். கனவில் கூட வேறு எங்கும் மனம் போக முடியாது. அந்த மாதிரி உறுதியானவர்கள் தானே? இல்லை யாருடைய துணையாவது தேவை இருக்கிறதா? சேவைக்காக விசேஷமாக ஏதாவது துணை தேவை இருக்கிறதா? எனவே நண்பனின்/தோழனின் நாள் என்று யாருடையதை கொண்டாடுவீர்கள்? உடன் இருக்கும் சேவாதாரி தோழன்/தோழிக்கா? அல்லது தந்தை தோழனாக இருக்கிறார் அவருடையதைக் கொண்டாடுவீர்களா? சேவை செய்பவராக இருந்தாலும், சேவை

வாங்குபவராக இருந்தாலும் சேவை நேரத்தில் சேவை செய்தீர்கள் பின்பு விசேஷமாக எந்த ஒரு ஈர்ப்பும் இல்லாத அளவிற்கு விலகி இருப்பவராகவும் அன்பாக இருப்பவராகவும் ஆகி விடுங்கள். சேவையில் உதவுபவர்கள் விசேஷமானவர்களாக இருப்பார்கள் இல்லையா? யார் விசேஷ சேவை செய்கிறார்களோ அது சகோதரனாக இருந்தாலும் அல்லது சகோதரியாக இருந்தாலும் விசேஷ அதிகாரம் கூட வைப்பார். எனவே சேவையின் சாட்சி ஆகுங்கள், சாட்சி ஆகி பின்பு உடன் சேவை செய்யும் தோழியாகுங்கள். சாட்சி நிலை மறந்து விடுகிறது பின்பு தோழி/தோழனாக மட்டும் ஆவதினால் தந்தையை மறந்து விடுகிறார்கள். சாட்சி நிலையில் நடந்து கொள்ளும் பயிற்சி செய்யுங்கள்.

ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் நான்கு பாக்கியத்தின் கோடுகள் மின்னிக் கொண்டிருக்கின்றன. (1) தெய்வீக பிறவியின் ரேகை (2) பரமாத்ம வளர்ப்பின் ரேகை (3) பரமாத்ம படிப்பின் ரேகை மற்றும் (4) சுயநலமற்ற சேவையின் ரேகை. அனைவரின் நெற்றியிலும் நான்கு பாக்கியத்தின் ரேகைகளும் மின்னிக் கொண்டிருக்கின்றன ஆனால் மின்னுவதில் மற்றும் எப்பொழுதும் ஒரே மாதிரியான வளர்ச்சியை அடைவதில் வித்தியாசம் இருக்கும் காரணத்தினால் மின்னுவதில் ஏற்றத்தாழ்வு தென்படுகிறது. ஆரம்பத்திலிருந்து இதுவரை நான்கு ரேகைகளும் எப்பொழுதும் சரியான ரூபத்தில் இருந்து கொண்டே இருப்பது என்பது மிகக் குறைவானவர்களிடம் தான் காணப்பட்டது. இடைஇடையே ஏதாவது ஒரு காரணத்தினால் பாக்கியத்தின் ரேகை துண்டிக்கப்பட்டு விடுகிறது அல்லது மின்னுவது குறைந்து விடுகிறது. தெளிவாக இருப்பதில்லை. எப்படி கை ரேகைகள் கூட பார்க்கிறீர்கள் இல்லையா? சிலருக்கு துண்டிக்கப்பட்டு இருக்கும் சிலருக்கு ஒரே மாதிரி இருக்கும், சிலருக்குத் தெளிவாக இருக்கும். சிலருக்குத் தெளிவாக இருக்காது. பாப்தாதாவும் குழந்தைகளின் பாக்கியத்தின் ரேகைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். தெய்வீக பிறவி அனைவரும் எடுத்தீர்கள் ஆனால் தெய்வீக பிறவியின் ரேகை துண்டிக்கப்பட்டு இருக்கிறது அல்லது தெளிவாக இல்லை. ஏனென்றால் தன்னுடைய பிறவியின் தர்மத்தில் துண்டிக்கட்டடாமல் நடந்து கொள்ளவில்லை என்றால் அவர்களுடைய பாக்கியத்தின் ரேகை துண்டிக்கப்பட்டு விடுகிறது. தர்மம் என்ன, செய்ய வேண்டிய காரியங்கள் என்ன? இதைத்

தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அதே போல் அனைத்து பிராமணர்களும் பரமாத்ம பாலனையில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். சமர்ப்பணமானவர்களும் சரி, குடும்பத்தில் இருப்பவர்களும் சரி தந்தையின வழிகாட்டுதலின்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் சம்பாதித்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்களா? தந்தையினுடையதை சாப்பிடுகிறீர்களா? தந்தையினுடையதை சாப்பிடுகிறீர்கள் இல்லையா! ஏனென்றால் உங்களுடையது அனைத்தும் தந்தைக்கு கொடுத்து விட்டதால் தந்தையினுடையதே ஆனது அல்லவா! சம்பாதித்தாலும் சரி ஆனால் சம்பாதித்ததை தந்தையிடம் ஒப்படைத்து விடுகிறீர்களா? இல்லை உங்களுடைய காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களா? டிரஸ்டி ஆக இருக்கிறீர்கள் இல்லையா? டிரஸ்டிக்கு தன்னுடையது என்று எதுவும் இருப்பது இல்லை. குடும்பஸ்தன் என்றால் தன்னுடையது என்று இருக்கிறது, டிரஸ்டி என்றால் அனைத்தும் தந்தையுடையது. உங்கள் கையால் சமைத்தால் கூட பிரம்மா போஜனம் சாப்பிடுகிறோம் என்று தானே நினைக்கிறீர்கள். முதலில் 'போக்' யாருக்கு வைக்கிறீர்கள்? தந்தைக்கு அர்ப்பணம் செய்கிறீர்கள் இல்லையா! அர்ப்பணம் செய்வது என்றால் தந்தையின் உணவு. பிரம்மா போஜனம் சாப்பிடுகிறீர்கள். குழந்தைகளுக்காகக் கூட வைத்தாலும் டைரக்ஷன்படி வைக்கிறீர்கள். எப்படி சமர்ப்பணமான சகோதர-சகோதரிகள் விதவிதமான காரியங்களில் உடலையும், மனதையும் ஈடுபடுத்தினாலும் பணத்தையும் சேவையில் ஈடுபடுத்துகிறார்கள். அதேபோல் குடும்பத்தில் இருப்பவர்களும் சேவையில் உடலை ஈடுபடுத்தினாலும், பணத்தை ஈடுபடுத்தினாலும் தந்தையின் ஸ்ரீமத்படி அவருடையது என்று புரிந்து காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். அப்படி செய்கிறீர்கள் தானே? ஒப்படைக்கப்பட்ட பொருள் மீது தனக்குத் தேவைக்கான துஷ்பிரயோகமோ மற்றும் மனம் சொல்லும் வழியை கலந்து விடவில்லையே. எனவே பரமாத்மாவின் பாலனை அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. சக்திசாலியாக ஆக்குவதற்காகப் பாலனை செய்யப்படுகிறது. தாயின் பாலனையின் பிரத்யக்ஷ ரூபம் என்னவாக இருக்கிறது? குழந்தை சக்திசாலி ஆகிறார். எனவே பிரம்மா தாயின் பாலனை மூலமாக அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விட்டீர்கள் ஆனால் சில குழந்தைகள் எப்பொழுதும் சக்திகளைக் காரியத்தில் ஈடுபடுத்துகிறார்கள் மற்றும்

சில குழந்தைகள் அடைந்த சக்திகளை அதாவது பாலனையைக் காரியத்தில் ஈடுபடுத்துவது இல்லை, அதாவது பாலனையை நடைமுறையில் கொண்டு வருவது இல்லை. எனவே உயர்ந்த பாலனை கிடைத்தும் கூட பலஹீனமாக இருந்து விடுகிறார்கள் மற்றும் பாக்கியத்தின் ரேகை துண்டிக்கப்பட்டுவிடுகிறது. அதேபோலத் தான் படிப்பின் ரேகையும் படிப்பின் நோக்கமே உயர்ந்த பதவி அடைவது தான் ஆசிரியர்-தந்தை அனைவருக்கும் ஒரே படிப்பு தான் படிப்பிக்கிறார். ஒரே நேரத்தில் படிப்பிக்கிறார் ஆனால் உயர்ந்த பிராமண வாழ்க்கையின் மற்றும் படிப்பின் பதவி மற்றும் போதை அனைவருக்கும் ஒரே மாதிரி இருப்பது இல்லை. பரிஷ்தாவிலிருந்து தேவதை நிலையை எப்பொழுதும் நினைவில் வைப்பது இல்லை எனவே பாக்கிய ரேகையில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

அதேபோல் தான் சேவையின் ரேகையும். சேவையின் விசேஷத்தை பிரம்மாபாபா கடைசி வரதான ரூபத்தில் நினைவூட்டியிருக்கிறார் - நிராகாரி-நிர்விகாரி-நிர்அகங்காரி! நிராகாரி நிலையில் நிலைத்திருக்காமல் எந்த ஒரு ஆத்மாவிற்கும் சேவையின் பலனைக் கொடுக்க முடியாது. ஏனென்றால் ஆத்மாவின் அம்பு ஆத்மாவில் தான் பாய்கிறது. தான் எப்பொழுதும் இந்த நிலையில் நிலைத்திருக்கவில்லையென்றால் யாருக்கு சேவை செய்கிறீர்களோ அவரும் எப்பொழுதும் நினைவு சொரூபம் ஆக முடியாது. அதேபோல் தான் நிர்விகாரியும். எந்த ஒரு விகாரத்தின் அம்சம் அந்நிய ஆத்மாவின், சூத்ர வம்சத்தை மாற்றி பிராமண வம்சி ஆக்க முடியாது. அந்த ஆத்மாவும் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே அன்பின் பலனை எப்பொழுதும் அனுபவம் செய்ய முடியாது. நிர்அகங்காரி சேவையின் அர்த்தமே பலன் சொரூபமாகி குணிவது தான். பணிவாகாமல் நிர்மாணம் அதாவது சேவையின் வெற்றிக் கிடைக்க முடியாது. எனவே நிராகாரி, நிர்விகாரி, நிர்அகங்காரி இந்த மூன்று வரதானங்களையும் எப்பொழுதும் சேவையில் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இதைத்தான் துண்டிக்கப்படாத பாக்கியத்தின் ரேகை என்று கூறுவது. இப்பொழுது நான்கு பாக்கிய ரேகைகளும் துண்டிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை துண்டிக்கப்படவில்லையா, தெளிவாக இருக்கிறதா? இல்லை தெளிவாக இல்லையா? என்று சோதனை செய்யுங்கள். கோடியில் சிலராகி விட்டீர்கள் ஆனால் அந்த

சிலரிலும் சிலர் ஆக வேண்டும். யார் அந்த சிலரிலும் சிலராக இருப்பார்களோ அவர் தான் இப்பொழுது அனைவரின் மரியாதைக்குரியவராகவும் எதிர் காலத்தில் பூஜைக்குரியவராகவும் ஆகிறார். யார் துண்டிக்கப்படாத பாக்கிய ரேகையுடையவரோ அவருடைய அடையாளம் என்னவாக இருக்கும் என்றால் அவர் இப்பொழுது கூட அனைத்து பிராமணக் குடும்பத்திற்கும் அன்பிற்குரியவராக இருப்பார். மரியாதைக்குரியவர் ஆன காரணத்தினால் அனைவரின் ஆசீர்வாதம் உயர்ந்த ஆத்மாக்களின் பாக்கிய ரேகையை பிரகாசிக்கச் செய்வித்துக் கொண்டிருக்கிறது. எனவே நான் யார்? என்று உங்களை நீங்களே கேளுங்கள். இன்று என்ன பார்த்தோம் என்று கேட்டீர்களா?

வளர்ப்பவர், பிறவி கொடுப்பவர் என்று உலகிலுள்ளவர்கள் கூறுகிறார்கள் ஆனால் பிறவி கொடுப்பவரின் அறிமுகம் கிடையாது. பிறவி கொடுத்த பரமாத்மா எப்படி இருக்கிறார், வளர்ப்பவர் பரமாத்மா எப்படி இருக்கிறார் என்று நீங்கள் போதையோடு கூற முடியும். பிரம்மா அம்மாவின் பாலனையும் கிடைத்துக் கொண்டிருக்கிறது மற்றும் தந்தையின் உயர்ந்த வழிப்படி தகுதியான ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். தந்தை குழந்தையைத் தகுதியானவராக்குகிறார் மற்றும் தாய் சக்திசாலி ஆக்குகிறார். இரண்டு அனுபவமும் இருக்கிறது இல்லையா? நல்லது. கீதாபாடசாலையைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வந்திருக்கிறார்கள் கீதாபாடசாலையைச் சேர்ந்தவர்கள் யார் ஆகி விட்டார்கள்? கீதையின் ஞானம் கேட்கும் அர்ஜுன் ஆகி விட்டீர்கள். அர்ஜுனன் என்று நினைத்து கீதை ஞானம் கேட்கிறீர்களா? இல்லை அர்ஜுனன் வேறு யாருமா? நான் தான் அர்ஜுனன் என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் நான் அர்ஜுனன் மற்றும் விசேஷமாக பகவான் எனக்கு கீதையின் ஞானம் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று அனுபவம் செய்து கேளுங்கள். கீதா பாடசாலையைச் சேர்ந்தவர்கள் தான் அனைவரையும் விட நம்பர் ஒன்றாக வந்து விடுவார்கள். இந்த விதியோடு கேட்டீர்கள் என்றால் முன்னுக்குப் போய்விடலாம். டீச்சர்களை பிஸியாக வைத்துக் கொள்ள இந்த கீதாபாடசாலைகள் மிகவும் நல்லது. கீதாபாடசாலை சக்கரவர்த்தியாகவும் ஆக்குகிறது, பிஸியாகவும் வைக்கிறது. நன்றாக வளர்ச்சி அடைகிறது. குறைந்த உழைப்பில் அதிகமான உதவியாளர்கள்

உருவாகிறார்கள். கீதாபாடசாலையைச் சேர்ந்தவர்கள் மேல் தான் பலியாக வேண்டும். எனவே தான் தந்தைக்கு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் அன்பிற்குரியவர்களாக இருக்கிறார்கள். பெரிய இடங்களில் மாயாவும் பெரிய ரூபத்தில் வருகிறது. கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாயாவும் கிராமத்தைச் சேர்ந்ததாகத்தான் வருகிறது. எனவே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் நல்லவர்கள். எங்கிருந்து அதிகமான எண்ணிக்கையில் வந்திருக்கிறார்கள்? ஆனால் இப்பொழுது அனைவரும் மதுபன்னில் இருப்பவர்கள்.

அனைத்து டீச்சர்களின் நிரந்தரமான முகவரி எது? மதுபன்தானே! அது (சென்டர்) கடை, இது வீடு. அதிகமாக எது நினைவில் இருக்கிறது. கடையா? அல்லது வீடா? சிலருக்கு கடை அதிகமாக நினைவில் இருக்கிறது. தூங்கினாலும் கூட கடை ஞாபகத்திலிருக்கும் நீங்கள் எங்கு விரும்பினாலும் புத்தியை நிலைத்து நிறுத்த முடியும். சேவை நிலையத்திலிருந்தும் மதுபன்னில் இருப்பவர் ஆக முடியும் மற்றும் மதுபன்னில் இருந்தும் சேவாதாரி ஆக முடியும், இந்த மாதிரி பயிற்சி இருக்கிறது இல்லையா? ஒரு வினாடியில் நினைத்தீர்கள் மற்றும் நிலைத்திருந்தீர்கள் -இதுதான் டீச்சர்களின் நிலையின் விசேஷமாகும். புத்தியும் கூட சம்ர்ப்பணமாகி இருக்கிறது அல்லவா? இல்லை சேவைக்காக மட்டும் சமர்ப்பணமாகி இருக்கிறீர்களா? எங்கு நினைக்கிறீர்களோ, எப்பொழுது நினைக்கிறீர்களோ அங்கு நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இது தான் சமர்ப்பண புத்தி. இது தான் விசேஷத்தின் அடையாளம். புத்தியோடு சேர்த்து சமர்ப்பணம் ஆகியிருக்கிறீர்கள் அப்படித் தானே? இல்லை புத்தியால் பாதி சமர்ப்பணம் மற்றும் உடலால் முழுமையாக அப்படியா?

யோகாவில் அமரும்பொழுது ஆத்ம அபிமானி ஆவதற்குப் பதிலாக சேவை நினைவு வருகிறது என்று சில டீச்சர்கள் (சகோதரிகள்) கூறுகிறார்கள் ஆனால் அப்படி இருக்கக்கூடாது. ஏனென்றால் கடைசி நேரத்தில் ஒருவேளை அசரீரி ஆவதற்குப் பதிலாக சேவையின் எண்ணம் வந்தால் ஒரு வினாடியின் கேள்வித்தாளில் தோல்வி அடைந்து விடுவீர்கள். அந்த நேரம் தந்தையைத் தவிர மற்றும் நிராகாரி நிர்விகாரி, நிர்அகங்காரி என்பதைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாத நிலை இருக்க வேண்டும். முற்றிலும் நிராகாரி இதைத்தான்

பிரம்மாபாபா தன்னுடைய கடைசி நிலையாக ஆக்கியிருந்தார் இல்லையா? இருந்தாலும் சேவையில் சாகாரத்தில் வந்து விடுவார். எந்த நேரம் என்ன விரும்புகிறீர்களோ அந்த நிலை இருக்க வேண்டும். எனவே இந்தப் பயிற்சி செய்ய வேண்டும் இல்லையென்றால் ஏமாற்றம் ஆகி விடும். சேவையின் எண்ணம் தானே வந்தது, தீய எணண்ங்களோ வீணான எண்ணங்களோ வரவில்லையே என்று நினைக்காதீர்கள் ஆனால் கட்டுப்பாட்டு சக்தி இல்லாமல் இருந்து விட்டது இல்லையா? கட்டுப்பாட்டு சக்தி இல்லையென்றால் ஆளும் சக்தி வர முடியாது, பின்பு ஆள்பவர் (மகாராஜா) ஆக முடியாது. எனவே பயிற்சி செய்யுங்கள் இப்பொழுதிலிருந்தே வெகு காலத்தின் பயிற்சி தேவை. இதை இலேசாக விட்டுவிடாதீர்கள். டீச்சர்களுக்கு என்ன பயிற்சி செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? அப்பொழுது தான் டீச்சர்கள் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் என்று கூற முடியும். எப்பொழுதும் பிரம்மாபாபாவை எதிரில் வையுங்கள் மற்றும் மூன்று வரதானங்களை நினைவு வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் பின்பற்றுங்கள். இது சுலபம் தானே? இந்த கடைசி வரதானம் மிகவும் சக்திசாலியானது. இந்த மூன்று வரதானங்களையும் ஒருவேளை நீங்கள் எப்பொழுதும் நினைவில் வைத்து நடைமுறையில் வந்தீர்கள் என்றால் தந்தையின் இதய சிம்மாசனம் மற்றும் இராஜ சிம்மாசனத்தின் அதிகாரியாக அவசியம் ஆவீர்கள். நல்லது.

தந்தைக்கு சமமான எப்பொழுதும் ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்த குழந்தைகளுக்கு எப்பொழுதும் பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக எப்பொழுதும் பிராமண பிறவியின் வளர்ப்பு மற்றும் படிப்பில் முன்னேற்றிக் கொண்டிருக்கும், அந்த மாதிரி துண்டிக்கப்படாத அனைத்து பாக்கியவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

மகாராஷ்ட்டிரா குரூப்: எப்பொழுதும் தன்னை அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவர்களாக அனுபவம் செய்கிறீர்களா? எப்போதாவது காலியாகி விடுவது இல்லையே? ஏனென்றால் தந்தை அவ்வளவு பிராப்தி செய்வித்திருக்கிறார். ஒருவேளை அனைத்து பிராப்திகளை தன்னுள் சேமித்தீர்கள் என்றால் ஒருபோதும் காலியாக முடியாது. இந்த பிறவியின் விஷயம் மட்டும் இல்லை ஆனால் அனேக

பிறவிகள் கூட இங்கு நிரம்பியது உடன் இருக்கும் எதிர்காலத்திற்கு வரும் அளவிற்கு கொடுத்திருக்கும்பொழுது, இப்பொழுது எப்படி காலியாகும்? ஒருவேளை புத்தி காலியாக இருந்தால் குழம்பும். எந்த ஒரு பொருளும் ஒருவேளை முழுமையாக நிரம்பி இருக்கவில்லையென்றால் தழும்பும். எனவே மாயா வருவதற்கு இடமே இல்லாமல் இருப்பது தான் நிரம்பி இருப்பதின் அடையாளம். மாயா தான் அசைக்கிறது. அப்படியானால் மாயா வருகிறதா? இல்லையா? எண்ணத்திலும் வருகிறதா? மாயாவின் இராஜ்யத்தில் அரைக்கல்பம் அனுபவம் செய்தீர்கள், மேலும் இப்பொழுது உங்களுடைய இராஜ்யத்திற்குச் சென்று கொண்டிருக்றீர்கள். எப்பொழுது மாயாவை வென்றவர்கள் ஆவீர்களோ அப்பொழுது உங்களுடைய இராஜ்யம் வரும் மற்றும் மாயாவை வெற்றியடைவதற்கான எளிதான வழி அனைத்து பிராப்திகளினால் நிரம்பி இருப்பது. ஏதாவது ஒரு பிராப்தியில் கூட வஞ்சிக்கப்படாமல் இருங்கள். அனைத்து பிராப்திகளும் இருக்கட்டும். இவைகள் எல்லாமே இருக்கின்றனவே ஒரே ஒரு விஷயம் இல்லையென்றால் என்ன? என்று அப்படி நினைக்கக்கூடாது. ஒருவேளை கொஞ்சம் குறைவு இருந்தாலும் மாயா விடாது. அதே இடத்திலிருந்து (குறைவான இடம்) உலுக்கும். எனவே மாயா வருவதற்கு இடமே இல்லாமல் இருக்கட்டும். வந்து விட்டது பின்பு விரட்டினீர்கள் என்றால் அதில் நேரம் வீணாகிறது. அதனால் மாயாவை வென்றவர்களாக ஆகி விட்டீர்களா? 2-3 வருடங்களில் ஆகி விடும் என்று நினைக்காதீர்கள். இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை! என்பது பிராமணர்களுக்கான சுலோகன். இப்பொழுது நேரத்தின் வேகத்திற்கேற்றாற்போல் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். எனவே தீவிர முயற்சியாளர் ஆகுங்கள். நல்லது.

**வரதானம்: மாயாவின் தடைகளை விளையாட்டிற்கு சமமாக அனுபவம் செய்யும் மாஸ்டர் உலகைப் படைப்பவர் ஆகுக!**

எப்படி யாராவது பெரியவர்கள் முன்பு சின்னக் குழந்தைகள் தங்களுடைய குழந்தைத் தனத்தின் அலட்சியத்தின் காரணமாக ஏதாவது சொல்லி விட்டாலும் ஏதாவது அந்த மாதிரி காரியம் செய்து விட்டாலும், இவர்கள் மேல் ஒரு குற்றமும் இல்லை, சின்னக்

குழந்தைகள் தெரியாமல் செய்கிறார்கள் என்று தான் பெரியவர்கள் நினைப்பார்கள். அவர்கள் பாதிக்கப்படுவதில்லை. அதேபோல் எப்பொழுது நீங்கள் உங்களையே மாஸ்டர் உலகைப் படைப்பவர் என்று நினைப்பீர்களோ அப்பொழுது மாயாவின் தடைகள் சிறு குழந்தைகளின் விளையாட்டு போல் தென்படும். மாயா எந்த ஒரு ஆத்மா மூலமாக பிரச்சனை, தடை அல்லது சோதனைத் தாளாகி வந்தாலும் அதில் பயப்படமாட்டார்கள் ஆனால் அவர்கள் மேல் ஒரு குற்றமும் இல்லை என்று தான் நினைப்பார்கள்.

சுலோகன்: அன்பு, சக்தி மற்றும் ஈஸ்வரிய கவர்ச்சி தன்னுள் நிரப்பினீர்கள் என்றால் அனைவரும் சகயோகி ஆகி விடுவார்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா சக்திசாலியாக ஆவது எப்படி?

இன்று சக்திசாலியான தந்தை தனது நாலா பக்கமும் உள்ள மாஸ்டர் சக்திசாலி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு சாரார், சதா சக்திசாலிகள், இன்னொரு சாரார் எப்போதாவது சக்திசாலிகள், எப்போதாவது வீணானது பக்கம் செல்ல விரும்பாவிடினும் ஈர்க்கப்படுகின்றனர். ஏனென்றால் எங்கு சக்திசாலியான நிலை இருக்கிறதோ அங்கு வீணானது இருக்க முடியாது, சங்கல்பத்தில் கூட வீணானது உற்பத்தி ஆக முடியாது. அவ்வப்போது வீணான சங்கல்பங்களை முறையீடுகளாக மாற்றி விடுகின்றனர், விரும்புவதில்லை ஆனால் வந்து விடுகிறது என இவ்வாறு பல குழந்தைகளுடைய முறையீடு இதுவரை தந்தை முன்னால் உள்ளது என்பதை பாப்தாதா பார்த்தார். தீய எண்ணங்களின் நிலையை பெரும்பான்மையோர் பெரும்பாலான நேரம் வரை முடித்து விட்டனர் ஆனால் வீணானதைப் பார்ப்பது, வீணானதைக் கேட்பது, வீணானதை சிந்திப்பது, வீணாக நேரத்தை இழப்பது -இதில் முழுத் தேர்ச்சி பெறவில்லை. ஏனென்றால் அமிர்தவேளை முதல் முழு நாளுக்குமான தினசரியத்தை தனது மனம் புத்தியில் சக்திசாலி ஆன நிலையில் நிலைத்து இருப்பதற்கான திட்டத்தை செட் (set) செய்யவில்லை ஆதலால் மனவருத்தப் (upset) படுகின்றனர். எப்படி தனது ஸ்தூல காரியங்களின் திட்டத்தை தினமும் 'செட்' செய்கிறீர்களோ, அது போல தனது மனம் சக்திசாலி நிலையில் நிலைப்பதற்கான திட்டத்தை செய்தீர்கள் என்றால் தானாகவே ஒருபோதும் 'அப்செட்' ஆக மாட்டீர்கள். எந்தளவு மனதை சக்திசாலியான எண்ணங்களில் பிஸி ஆக வைத்திருப்பீர்களோ அந்தளவு மனம் 'அப்செட்' ஆவதற்கு நேரம் கிடைக்காது. இந்நாட்களில் உலகில் பெரிய பதவியிலிருப்போர், யாரையெல்லாம் ஐ.பி. அல்லது வி.ஐ.பி. எனக் கூறுகிறார்களோ, அவர்கள் சதா தனது காரியங்களை நேரப்படி செட் செய்கின்றர். எனவே நீங்கள் யார்? அவர்கள் வி.ஐ.பி.கள் ஆனால் முழு உலகிலும் ஈஸ்வரிய

குழந்தையான காரணத்தால், பிராமண வாழ்க்கையின் காரணத்தால், நீங்கள் எத்தனை 'வி' முன்னால் போட்டுக் கொண்டாலும்கூட குறைவுதான். ஏனெனில் உங்களுடைய ஆதாரத்தினால் உலக மாற்றம் ஏற்படுகிறது. நீங்கள் புது உலகம் உருவாக்குவதற்கான ஆதாரமூர்த்திகள். எல்லையற்ற டிராமாவில் 'ஹீரோ' நடிகர்கள் மற்றும் வைரத்திற்கு (ஹீரோ) ஒப்பான வாழ்க்கை வாழ்பவர்கள் நீங்கள், எனவே எவ்வளவு பெரியவர்கள்! இந்த சுத்த போதை சக்திசாலி ஆக்குகிறது மற்றும் தேக அபிமானத்தின் போதை கீழே கொண்டு வருகிறது. உங்களுடையது ஆத்மீக ஆன்மீக போதை ஆதலால் கீழே கொண்டு வருவதில்லை, சதா உயரே பறக்கும் கலையின் பக்கம் எடுத்துச் செல்கிறது. ஆகவே வீணானது பக்கம் ஈர்க்கப்படுவதன் காரணம் -தனது மனம் புத்தியின் தினசரி வழக்கத்தை செட் செய்யாததுதான்! மனதை பிஸி ஆக வைத்திருக்கும் கலையை முழுமையான முறையில் சதா உபயோகப்படுத்துவதில்லை.

இன்னொரு விஷயம், பாப்தாதா அமிர்தவேளை முதல் இரவு தூங்கும் வரை எண்ணம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் எப்படி நடக்க வேண்டும் அல்லது இருக்க வேண்டும் என்பதற்காக எல்லோருக்கும் ஸ்ரீமத் அதாவது, கட்டளை கொடுத்துள்ளார். மனதில், நினைவில் என்ன வைக்க வேண்டும் -ஒவ்வொரு செயலிலும் தனது மனநிலைக்கான வழிகாட்டுதல், கட்டளை கிடைத்துள்ளது மேலும் நீங்கள் எல்லோரும் கட்டளைக்குக் கீழ்படிந்த குழந்தைகள்தானே அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? கட்டளைக்குக் கீழ்படிந்தவர் என்றால் தந்தையுடைய சம்பந்தம் மூலம் தந்தையுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர் அதாவது அடி மேல் அடி எடுத்து வைப்பவர்! என்றால் மனைவியும் என்ன செய்கிறார்? அவருக்கு என்ன போதனை கிடைக்கிறது? கணவனது அடி மீது அடி வைத்து செல்! எனில் கட்டளைக்குக் கீழ்படிந்தவர் அதாவது பாப்தாதாவின் கட்டளை ரூப அடி மேல் அடி வைப்பதாகும். இது எளிதா அல்லது கடினமாக உள்ளதா? எங்கு அடி வைப்பது -சரியா, இல்லையா, இதை சிந்திக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. மிக எளிதானது ஆனால் முழு நாளும் போகும்போதும் வரும்போதும் ஏதாவது கட்டளையை மீறுகிறீர்கள். சின்னச்சின்ன விஷயங்கள்தான் ஆனால் கட்டளையை மீறுவதால் கொஞ்சம் கொஞ்சமாக சுமை சேர்ந்து விடுகிறது. கட்டளைக்குக்

கீழ்படிபவருக்கு எல்லா சம்பந்தங்கள் மூலம் பரமாத்ம-ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. இது நியமம்! சாதாரண முறையிலும் ஏதாவது மனித ஆத்மாவின் கட்டளைப்படி 'ஹான் ஜீ' என கூறிக் கொண்டே காரியங்கள் செய்தீர்கள் என்றால் யாருக்காக காரியம் செய்கிறீர்களோ, அவர் மூலம், அவருடைய மனம் மூலம் அவருக்கு ஆசீர்வாதங்கள் அவசியம் கிடைக்கின்றது. இதுவோ பரமாத்ம-ஆசீர்வாதங்கள் ஆகும். பரமாத்ம-ஆசீர்வாதங்களுக்கான காரணம் கட்டளைக்குக் கீழ்படிந்த ஆத்மா சதா டபுள் லைட் பறக்கும் கலையில் இருப்பார். கூடவே கட்டளைக்குக் கீழ்படிந்த ஆத்மாவிற்கு கட்டளையை பாலனை செய்வதற்கான பிரதிபலன் தந்தை மூலம் மன உறுதி (willpower) விசேஷ வரதானத்தின் ரூபத்தில், ஆஸ்தியின் ரூபத்தில் கிடைக்கின்றது. தந்தை எல்லா சக்திகளையும் உயிலாக குழந்தைகளுக்குத் தருகிறார் ஆதலால் எல்லா சக்திகளும் சகஜமாகவே பிராப்தி ஆகி விடுகின்றன. எனவே இத்தகைய மன உறுதியைப் பெறுகின்ற கட்டளைக்குக் கீழ்படிந்த ஆத்மா -ஆஸ்தி, வரதானம் மற்றும் ஆசீர்வாதங்கள், இந்த அனைத்து பிராப்திகளும் கிடைப்பதால் சதா குஷியில் நடமாடுவார் 'ஆஹா ஆஹா' என்ற பாடலைப் பாடியபடியே பறந்து கொண்டே இருப்பார். ஏனென்றால் அவரது ஒவ்வொரு செயலும் அவருக்கு கைமேல் பலனை செய்விக்கிறது. கர்மம் தான் விதை! எப்போது விதை சக்திசாலியாக உள்ளதோ பழமும் அதைப் போல் தானே கிடைக்குமல்லவா! ஆகவே ஒவ்வொரு செயலின் கைமேல் பலன், உழைப்பின்றி தானாகவே கிடைத்து விடுகிறது. எப்படி பழத்தின் சக்தி மூலம் உடல் சக்திசாலி ஆகிறது, அதுபோல செயலின் கைமேல் பலனின் பிராப்தியினால் ஆத்மா சதா சக்திசாலியாக இருக்கிறது. எனவே சதா சக்திசாலியாக இருப்பதற்கான இன்னொரு ஆதாரம் -சதா மற்றும் தானாகவே கட்டளைக்குக் கீழ்படிந்தவராவது! அத்தகைய சக்திசாலியான ஆத்மா சதா சகஜமாக பறந்து கொண்டே தனது சம்பூர்ண குறிக்கோளை, 'தந்தையின் அருகில் இருக்கும் ஸ்திதி'யை அடைகிறது. ஆகவே வீணானது பக்கம் ஈர்க்கப்படுவதற்கான காரணம் -கட்டளையை மீறுவது! பெரிய பெரிய கட்டளைகளை மீறுவதில்லை ஆனால் சின்னச்சின்னவை ஆகி விடுகின்றன. அதில் முக்கியமான முதல் கட்டளை -தூய்மை ஆகுங்கள், காமத்தை வென்றவராகுங்கள்! இந்த கட்டளையை பாலனை செய்வதில் பெரும்பாலோர் தேர்ச்சி பெற்று விடுகிறீர்கள். அப்பாவி மாதாக்களும் இதில் தேர்ச்சி பெற்று

விடுகின்றனர், எந்த விஷயத்தை உலகினர் அசம்பவம் என நினைக்கின்றனரோ அதில் தேர்ச்சி பெற்று விடுகின்றனர்; ஆனால் அதனுடைய இன்னொரு சகோதரர் கோபம் -இதில் அவ்வப்போது பாதி பேர் தோல்வி (fail) அடைந்து விடுகின்றனர். பின் சாமர்த்தியசாலிகளும்கூட! பல குழந்தைகள் கூறுகின்றனர் -கோபம் அடையவில்லை ஆனால் கொஞ்சம் பயமுறுத்த வேண்டியுள்ளது, கோபம் வருவதில்லை, கொஞ்சம் பயமுறுத்தி வைக்கிறேன். எப்போது அசம்பவத்தை சம்பவமாக்கி விட்டீர்களோ, இதுவே அதனுடைய சின்னத்தம்பி, எனில் இதை கீழ்ப்படிவது என்பீர்களா அல்லது கீழ்ப்படியாமையா?

இதை விட சிறிய கீழ்ப்படியாமை அமிர்தவேளையின் நியமம், பாதி பாலனை செய்கிறீர்கள். எழுந்து உட்கார்ந்து விடுகிறீர்கள் ஆனால் தந்தையின் கட்டளை என்னவோ, அந்த விதிப்படி வெற்றி அடைகிறீர்களா? சக்திசாலி ஸ்திதி இருக்கிறதா? இனிமையான அமைதியுடன் கூடவே உறக்கத்தின் அமைதியும் கலந்து விடுகிறது. பாப்தாதா ஒருவேளை ஒவ்வொருவருக்கும் அவரவருடைய ஒரு வாரத்திற்கான டி.வி.யைக் காட்டினார் என்றால் பார்ப்பதற்கு மிகுந்த வேடிக்கையாக இருக்கும். என்றால் பாதி கட்டளையை ஏற்கிறீர்கள், நெறிமுறை தவறாதவர்களாகிறீர்கள் ஆனால் வெற்றி சொரூபம் ஆவதில்லை. இதற்கு என்ன சொல்வீர்கள்? இந்த மாதிரி சின்னச்சின்ன கட்டளைகள் உள்ளன. எப்படி கட்டளையோ -எந்த ஒரு ஆத்மாவிற்கும் துக்கம் கொடுக்கக் கூடாது, துக்கம் எடுக்கக் கூடாது; இதிலும் கூட துக்கம் தருவதில்லை ஆனால் எடுத்துக் கொள்கிறீர்கள். வீண் எண்ணம் எழுவதற்கான காரணம் இது தான் -வீணாக துக்கம் எடுப்பது! கேட்டு விட்டால் துக்கம் அடைந்து விடுகிறீர்கள். விரும்பாவிடினும்கூட கேட்ட விஷயம் மனதில் ஓடுகிறது - இது ஏன் சொன்னார், அவர் சொன்னது சரியில்லை, இது நடந்திருக்கக் கூடாது,...! வீணானதைக் கேட்பது, பார்ப்பதன் பழக்கம் மனதை 63-ஜென்மங்கள் வரை இருந்துள்ளது ஆதலால் இப்போதும் கூட அந்தப் பக்கம் ஈர்க்கப்படுகிறீர்கள். சின்னச்சின்ன கீழ்ப்படியாமை மனதை பாரமாக்கி விடுகின்றன மற்றும் பாரமானதால் உயர்ந்த ஸ்திதியின் பக்கம் பறக்க முடிவதில்லை. இது மிகவும் ஆழமான ரகசியம்! எப்படி போன ஜென்மங்களுடைய பாவகர்மத்தின் சுமையினால் ஆத்மாவைப் பறக்க விடுவதில்லை, அது

போல இந்த ஜென்மத்தின் சின்னச்சின்ன கீழ்ப்படியாமையின் சுமை, எந்த ஸ்திதி விரும்புகிறீர்களோ அதை அனுபவம் செய்ய விடுவதில்லை.

பிராமணர்களின் நடத்தை மிக நன்றாக இருக்கிறது. பாப்தாதா கேட்கின்றார் -எப்படி இருக்கிறீர்கள்? என்றால் எல்லோரும் கூறுகிறீர்கள் மிக நன்றாக இருக்கிறோம். பின்பு, எப்படி ஸ்திதி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறீர்களா என கேட்டால்? மௌனமாகி விடுகிறீர்கள். இதற்கு காரணம் இந்த கீழ்ப்படியாமையின் சுமை சதா சக்திசாலி ஆக்க விடுவதில்லை. எனவே இன்று இந்த ஸ்லோகனை நினைவில் வையுங்கள் -வீணானதை நினைக்காதே, வீணானதைப் பார்க்காதே, வீணானதைக் கேட்காதே, வீணானதைப் பேசாதே, வீணான செயல்களில் நேரத்தை இழக்காதே! நீங்கள் கெட்டதிலிருந்து தூர விலகி விட்டீர்கள். இப்போது இத்தகைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்த சரித்திரத்தின் சித்திரத்தை உருவாக்குங்கள், இவருக்குத்தான் சதா சக்திசாலியான ஆத்மா! என கூறப்படுகிறது. நல்லது!

எல்லா டீச்சர்களும் கலைஞர்கள்தான் (artists). ஓவியம் வரைய வருமா? தனது சிரேஷ்ட சரித்திரத்தின் சித்திரத்தை வரைய வருமல்லவா. யார் ஒவ்வொரு அடியிலும் சரித்திரத்தின் சித்திரத்தை உருவாக்குகிறோரோ அவர்தான் பெரியதிலும் பெரிய ஓவியர். இந்த சரித்திரத்தின் சித்திரத்தை உருவாக்குவதால் தான் உங்களுடைய ஜட சித்திரம் அரை கல்பத்திற்கு தொடர்கிறது. எனவே டீச்சர்கள் என்றால் பெரியதிலும் பெரிய ஓவியர். தனது சித்திரத்தையும் உருவாக்குகிறீர்கள் மற்றும் மற்ற ஆத்மாக்களையும் சித்திரத்தை உருவாக்கச் செய்கிறீர்கள். மற்றவர்களும் சிரேஷ்ட சரித்திரம் உருவாக்குவதற்கு நிமித்தமானவர்கள் டீச்சர்களே. இதிலேயே பிஸி ஆக இருக்கிறீர்களா, முழு பிஸி ஆக இருங்கள். ஒரு நொடிகூட மனம் புத்தியை ஓய்வாக வைத்தீர்கள் என்றால் வீண் சங்கல்பம் தனது பக்கம் ஈர்த்து விடும். கேட்டீர்களா இல்லையா, சேவையினுடைய கைமேல் பலன் சதா பிராப்தி ஆகட்டும் -சதா கட்டளைக்குக் கீழ்படிந்த ஆத்மாவின் அடையாளம் இதுதான்! ஏதாவது கீழ்ப்படியாமை நடக்கிறது. டீச்சர்கள் என்றால் அமிர்தவேளை முதல் இரவு வரை ஒவ்வொரு கட்டளை மீதும் அடி மேல் அடி வைப்பவர்கள், இத்தகைய டீச்சர்களா அல்லது

அவ்வப்போது அலட்சியம் வந்து விடுகிறதா? அலட்சியமானவராகக் கூடாது. பொறுப்பின் கிரீடதாரிகள் நீங்கள். எப்போதாவது கிரீடம் பாரமாகி விடுகிறது எனில் கழற்றி விடுகிறீர்கள். நீங்களோ இறங்குபவர்கள் இல்லைதானே. சதா கட்டளைக்குக் கீழ்படிவது என்றால் சதா பொறுப்பின் கிரீடதாரி! டீச்சர்களாகவே எல்லோரும் இருக்கிறீர்கள் ஆனால் தகுதியான டீச்சர், யோகி டீச்சர் என இத்தகையோருக்குத்தான் கூறப்படுகிறது. டீச்சர்கள் ஒருபோதும் புகார் கூற முடியாது. மற்றவர்களை முழுமையாக்கக்கூடியவர்கள் (complete), புகார் (complain) சொல்லக்கூடியவர்கள் அல்ல. எப்போதாவது இப்படி கடிதம் எழுவதில்லைதானே -என்ன செய்வது, இப்படி ஆயிற்று, ஆகியிருக்கக் கூடாது...! அதுவோ முடிந்து விட்டதுதானே. கேட்டீர்கள்தானே -கட்டாயமாக கடிதம் எழுதுங்கள், மதுபனுக்கும் கட்டாயமாக அனுப்புங்கள் ஆனால் 'நான் சதா ஓ.கே. (ok) -இந்த இரு வரிகள் எழுதுங்கள் போதும். படிப்பவருக்கும் நேரம் கிடையாது. பின்பு புகார் செய்கிறீர்கள் கடிதங்களுக்குப் பதிலே வரவில்லை என. உண்மையில் உங்கள் அனைவருடைய கடிதங்களுக்கான பதில் பாப்தாதா தினமும் முரளியில் தருகின்றார். நீங்கள் ஓ.கே. என எழுதுகிறீர்கள் மற்றும் பாப்தாதா ஓ.கே.'விற்குப் பதில் தருகிறார் -அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் என, எனில் பதில் கிடைத்து விட்டதல்லவா. நேரத்தையும் சேமிக்க வேண்டும்தானே. சேவை செய்திகளையும் சுருக்கமாக எழுதுங்கள். இதனால் நேரமும் சிக்கனமாகும், பேப்பரும் சிக்கனமாகும், தபால் செலவும் சிக்கனமாகும். என்ன சிக்கனம் ஆக முடியும். மூன்று பக்க கடிதம் கூட எழுதுகிறீர்கள். சிலருக்கு விரிவாக எழுதுவதற்கான வழிகாட்டுதல் கிடைக்கிறது எனில் தாராளமாக எழுதுங்கள் ஆனால் இரண்டே வரியில் தனது தவறின் மன்னிப்பையும் பெற முடியும். எதையும் மறைக்காதீர்கள் ஆனால் சுருக்கமாக எழுதுங்கள். எவ்வளவு கடிதங்கள் எழுதுகிறீர்கள், அதில் எந்த சாரமும் இருப்பதில்லை. தந்தைக்குக் கூறுங்கள் -எனது இந்த வேலையை செய்யுங்கள், என்னை சரி செய்யுங்கள், எனது வேலையை சரி செய்யுங்கள், எனது மனைவியை சரி செய்யுங்கள்,... இத்தகைய கடிதங்கள் ஒரு முறை அல்ல 10-முறை அனுப்புகிறீர்கள் என்றால் இப்போது சிக்கனத்தின் அவதாரம் ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள். நல்லது! எல்லோருக்கும் இந்த விழா நன்றாக இருக்கிறதுதானே. உலகத்தினர் கூறுகின்றனர், 2-நாளுக்கான விழா

மற்றும் உங்களுக்கோ 4-நாளுக்கான விழா ஆகும். எல்லோருக்கும் இந்த விழா பிடித்திருந்ததுதானே. நல்லது!

நாலாபுறமும் உள்ள சதா சகதிசாலியான ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு அடியிலும் எப்போதும் கீழ்ப்படிகின்ற கீழ்ப்படிதலுள்ள குழந்தைகளுக்கு, சதா வீணானதை சக்திசாலியாக மாற்றம் செய்யக்கூடிய உலகை மாற்றக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா தனது சரித்திரனுடைய சித்திரத்தை வரைகின்ற குழந்தைகளுக்கு சக்திசாலியான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**குழுவினருடன் சந்திப்பு: (சாரம்)**

குஜராத் குரூப்: குழந்தைகளை உலகத்தின் ராஜ்ய அதிகாரிகளாக ஆக்குகின்றார், தான் ஆவதில்லை, என்றால் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டின் அதிகாரமும் கிடைத்து விட்டது மேலும் இரண்டுமே எல்லையற்றது.

சதா இந்த போதையில் இருங்கள் -நான் எல்லையற்ற தந்தை மற்றும் எல்லையற்ற ஆஸ்தியினுடைய குழந்தை மற்றும் எஜமானன் ஆவேன்!

டில்லி குரூப்: பரமாத்மாவிடமிருந்து எவ்வளவு பட்டங்கள் (titles) கிடைத்துள்ளது என்று பட்டியல் இடுங்கள். அவிநாசி தந்தை அளித்த அவிநாசி பட்டங்கள், இதனால் போதையும் அவிநாசியாக இருக்கட்டும்.

பாம்பே குரூப்: சுய-ஸ்திதி சக்திசாலியாக இருந்தது என்றால் அதற்கு முன் பர-ஸ்திதி ஒன்றுமே இல்லை.

சாக்ஷியாகி பார்ப்பவர் மகிழ்ச்சியுடன் இருப்பார், ஈர்க்கப்பட மாட்டார்.

பர-ஸ்திதி மகாவீர் ஆக்குகின்றது மற்றும் இதனால் அனுபவத்தின் அதிகாரமும் அதிகமாகின்றது. நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிதேவ் படைப்பவர் மூலம் வரதானங்களின் பிராப்தி!

இன்று திரிதேவ் படைப்பவர் தனது சாகார மற்றும் சூட்சும படைப்பை பார்த்துக் கொண்டிருக்கின்றார். படைப்பு சதா 'ஆஹா படைப்பவரே' என்ற இந்த குஷியின் பாடலை பாடிக் கொண்டிருந்தனர் மற்றும் படைப்பவரும் சதா 'ஆஹா எனது படைப்பே' என்ற பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். எனில் தந்தை ஒவ்வொரு சிரேஷ்ட படைப்பை விசேஷமாக மூன்று சம்பந்தங்கள் மூலம் எவ்வளவு சம்பன்னம் ஆக்கி உள்ளார். தந்தையுடைய சம்பந்தம் மூலம் வள்ளலாகி, ஞான கஜானாக்கள் மூலம் சம்பன்னம் ஆக்கி, ஆசிரியர் ரூபம் மூலம் பாக்கியத்தை வழங்கும் வள்ளலாகி, அநேக ஜென்மங்களுக்காக பாக்யவான் ஆக்கி, சத்குரு ரூபத்தில் வரதாதா ஆகி வரதானங்களினால் பையை நிரப்புகின்றார். இது அவிநாசி சிநேகம் அல்லது அன்பாகும். அன்பின் விசேஷம் இதுதான் -யார் மீது அன்பு ஏற்படுகிறதோ அவருடைய குறைகளைப் பார்க்க சகிக்காது, குறைகளை அற்புதத்தின் ரூபத்தில் மாற்றம் செய்வோம். தந்தைக்கு குழந்தைகளுடைய குறை சதா அற்புதத்தின் ரூபத்தில் மாற்றம் செய்வதற்காக சதா சுப சங்கல்பம் வைக்கிறார். தந்தைக்கு அன்பினால், குழந்தைகளின் கடின உழைப்பைப் பார்க்க விரும்புவதில்லை. கொஞ்சம் கடின உழைப்பு தேவை எனில் செய்யுங்கள் ஆனால் பிராமண வாழ்க்கையில் கடினமாக உழைக்கத் தேவையேயில்லை. ஏனெனில் வள்ளல், விதியை உருவாக்குபவர், வரமளிப்பவர் (தாதா, விதாதா, வரதாதா) -மூன்று சம்பந்தங்கள் மூலம் இந்தளவு சம்பன்னம் ஆகி விடுவீர்கள் அதனால் கடின உழைப்பின்றி ஆன்மீக மகிழ்ச்சியில் இருக்க முடியும். ஆஸ்தியும் உள்ளது, படிப்பும் உள்ளது மற்றும் வரதானமும் உள்ளது. யாருக்கு மூன்று ரூபங்கள் மூலம் பிராப்தி ஆகியிருக்கிறதோ, அத்தகைய சர்வ பிராப்தியடைந்த ஆத்மாவிற்கு கடின உழைப்பு செய்வதற்கு என்ன அவசியம் உள்ளது. சில சமயம் ஆஸ்தியின் ரூபத்தில் அல்லது தந்தையை வள்ளலின்

ரூபத்தில் நினைவு செய்தால் ஆன்மீக உரிமைத்தன்மையின் போதை இருக்கும். ஆசிரியரின் ரூபத்தில் நினைவு செய்தால் இறை மாணவன், அதாவது பகவானுடைய மாணவன் நான் என்ற இந்த பாக்கியத்தின் போதை இருக்கும். சத்குரு ஒவ்வொரு அடியிலும் வரதானங்கள் மூலம் நடத்திக் கொண்டிருக்கிறார், ஒவ்வொரு கர்மத்திலும் சிரேஷ்ட வழி -வரமளிப்பவரின் வரதானம் ஆகும். யார் ஒவ்வொரு அடியும் சிரேஷ்ட வழி மூலம் செல்கிறாரோ அவருக்கு ஒவ்வொரு அடியிலும் கர்மத்தின் வெற்றியின் வரதானம் சகஜமாக, தானாக மற்றும் கண்டிப்பாக பிராப்தியாகும். சத்குருவின் வழி சிரேஷ்ட கதியை பிராப்தி செய்விக்கிறது. கதி-சத்கதியை பிராப்தி செய்விக்கிறது. சிரேஷ்ட வழி மற்றும் சிரேஷ்ட கதி! தனது இனிமையான வீடு அதாவது கதி மற்றும் இனிமையான ராஜ்யம் அதாவது சத்கதி -இதுவோ பிராப்தி ஆகியேத் தீரும் ஆனால் பிராமண ஆத்மாக்களுக்கு இன்னுமொரு விசேஷ கதி பிராப்தி ஆகிறது -அது இந்த நேரத்திலும் சிரேஷ்ட வழியினுடைய சிரேஷ்ட கர்மத்தினுடைய உடனடி பலன் அதாவது வெற்றி!

இந்த சிரேஷ்ட கதி சங்கம யுகத்தில் மட்டுமே பிராமணர்களுக்கு பிராப்தி ஆகிறது. ஆகவே கூறுகின்றனர் -எப்படி வழியோ, அப்படி கதி! என. அவர்கள் நினைக்கின்றனர் இறந்த பின் நற்கதி கிடைக்கும் என்று, ஆதலால் 'அந்த் மதி ஸோ கதி' என்கின்றனர்; ஆனால் பிராமண ஆத்மாக்கள் உங்களுக்காக இந்த இறுதி மர்ஜீவா வாழ்க்கையில் ஒவ்வொரு கர்மத்தின் வெற்றியின் பலன் அதாவது கதி பிராப்தி ஆவதற்கான வரதானம் கிடைத்துள்ளது. நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் -சதா கதி-சத்கதி இருக்கிறது. நீங்கள் எதிர்காலத்திற்காக காத்திருக்கவில்லை. சங்கம யுகத்தினுடைய பிராப்தியின் மகத்துவம் இது. இப்போதே கர்மம் செய்வது மற்றும் இப்போதே பிராப்தியின் உரிமையை எடுத்துக் கொள்வது, இதற்கு கூறப்படுகிறது -ஒரு கையால் கொடுப்பது மற்றும் மறு கையால் பெறுவது. எப்போதாவது கிடைக்குமா அல்லது எதிர்காலத்தில் கிடைக்குமா, இது ஆறுதலுக்கான பேரம் இல்லை. உடனடி தானம் மகா புண்ணியம், பிராப்தியும் அது போலத்தான். இதற்குத்தான் உடனடி ஒப்பந்தம் என! கிடைத்து விடும், கிடைத்து விடும்,... என பக்தியில் காத்திருக்கிறீர்கள். பக்தியில் எப்போதாவது கிடைக்கிறது மற்றும் தந்தை கூறுகிறார், இப்போதே எடுத்துக் கொள்ளுங்கள் என. ஆரம்பத்தில் ஸ்தாபனையிலும்

உங்களுக்குப் புகழ் இருந்தது, சாக்ஷாத்காரமும் உடனே ஆனது மற்றும் ஆகிக் கொண்டும் இருந்திருக்கிறது, எனில் ஆரம்பத்திலிருந்தே ஒப்பந்தம் உடனடியாக ஆகியிருக்கிறது. இதற்குத்தான் கூறப்படுகிறது. படைப்பவருக்கு படைப்பவர் மீது உண்மையான அன்பு என. முழு கல்பமும் இந்த மாதிரி அன்பு யாருக்குமே கிடைக்காது. எவ்வளவுதான் பிரபலமானவரின் அன்பாக இருக்கட்டும் ஆனால் இதுவோ அழியாத அன்பு மற்றும் அழியாத பிராப்தி எனில் இத்தகைய அன்பானவர் எவருமே இருக்க முடியாது. ஆதலால் தந்தைக்கு குழந்தைகளது கடின உழைப்பைப் பார்த்து இரக்கம் வருகிறது. வரதானி, சதா ஆஸ்தியின் உரிமையாளர்கள் ஒருபோதும் கடின உழைப்பு செய்ய முடியாது. பாக்கியவிதாதா டீச்சருடைய பாக்கியவான் குழந்தைகள் சதா மதிப்புடன் தேர்ச்சி பெறுவார்கள், தோல்வி அடைய மாட்டர்கள், வீணான விஷயங்களில் வருத்தமுற (feel) மாட்டார்கள்.

கடினமாக உழைக்க இரண்டு காரணங்கள் மட்டுமே உள்ளன -ஒன்று மாயாவின் தடைகள் அல்லது சம்பந்தம் தொடர்பில், அது பிராமணர்களாயினும் சரி, அஞ்ஞானிகளாயினும் சரி, தோல்வி அடைகிறீர்கள்; இரண்டு சம்பந்தங்களிலும் செயலில் வரக்கூடிய ஒரு சிறிய விஷயத்தில் தப்பாக உணரச் செய்து விடுகிறீர்கள், இதை நீங்கள் 'ஃப்ளூ' (flu) காய்ச்சல் என்று சொல்கிறீர்கள். 'ஃப்ளூ' என்ன செய்கிறது? ஒன்று, நடுங்க (குழப்பம்) வைக்கிறது. அதில் உடல் ஆடுகிறது மற்றும் இங்கு ஆத்மாவின் ஸ்திதி ஆடுகிறது, மனம் ஆடுகிறது மற்றும் வாய் கசப்பாகி விடுகிறது. இங்கும் வாய் கசப்பான பேச்சு பேசுகிறது, பின்பு என்ன ஆகிறது? சில சமயம் குளிர், சில சமயம் சூடு ஏறி விடுகிறது. இங்கும் கூட எப்போது மனம் நோகுகின்றது எனில் உள்ளுக்குள் கொந்தளிப்பு ஆகிறது, சூடு ஏறுகிறது -இவர் இதை ஏன் கூறினார், இதை ஏன் செய்தார்?,... இதுதான் கொந்தளித்தல். அனுபவிகள்தானே. இன்னும் என்ன ஆகின்றது? உண்பது - குடிப்பது எதுவும் பிடிக்காது. இங்கும் கூட யாராவது ஞானத்தின் நல்ல விஷயங்களைக் கூறினாலும் அது அவருக்குப் பிடிக்காது. இறுதியில் இதன் விளைவு என்ன? பலகீனம் வந்து விடுகிறது. இங்கும் கூட சிறிது நேரம் வரை பலகீனம் இருக்கிறது. எனவே தோல்வியடைய வேண்டாம், உணர வேண்டாம்! பாப்தாதா சிரேஷ்ட வழியைத் தருகிறார். தூய உணர்வு இருக்கட்டும் -நான் சர்வ சிரேஷ்ட கோடியிலும் சில ஆத்மா ஆவேன், நான் தேவ

ஆத்மா, மகான் ஆத்மா, பிராமண ஆத்மா, விசேஷ பார்ட்தாரி ஆத்மா ஆவேன்! இந்த உணர்வில் இருப்பவருக்கு வீணான உணர்வின் 'ஃப்ளூ' வராது. இந்த தூய உணர்வில் இருங்கள். எங்கு சுத்த உணர்வு உள்ளதோ அங்கு அசுத்த உணர்வு வர முடியாது. எனவே 'ஃப்ளூ' காய்ச்சல், அதாவது கடின உழைப்பிலிருந்து தப்பித்து விடுவீர்கள் மற்றும் நான் வரதானங்கள் மூலம் வாழ்ந்து கொண்டிருக்கிறேன், வரதானங்கள் மூலம் முன்னே பறந்து கொண்டிருக்கிறேன், வரதானங்கள் மூலம் சேவையில் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறேன் என தன்னை இவ்வாறு சதா அனுபவம் செய்வீர்கள்.

கடின உழைப்பு நன்றாக உள்ளதா அல்லது கடின உழைப்பின் பழக்கம் உறுதியாகி விட்டதா? கடின உழைப்பு நன்றாக உள்ளதா அல்லது ஆனந்தமாக இருப்பது நன்றாக உள்ளதா? சிலருக்கு கடின உழைப்பு இல்லாமல் வேறு எந்த வேலையும் பிடிக்காது. நீங்கள் அவர்களை நாற்காலியில் வசதியாக உட்கார வைத்தாலும், எங்களுக்கு கடின உழைப்பை கொடுங்கள் என்று சொல்வார்கள். இதுவோ ஆத்மாவின் கடின உழைப்பு மற்றும் ஆத்மா 63-ஜென்மங்கள் கடின உழைப்பு செய்து களைத்துப் போயிருக்கிறது. 63-ஜென்மங்கள் தேடிக் கொண்டே இருந்தீர்கள்தானே. யாரையாவது தேடுவதில் கடின உழைப்பு தேவைப்படுகிறதல்லவா. என்றால் முதலிலேயே களைத்து விட்டீர்கள். 63-ஜென்மங்கள் கடினமாக உழைத்து விட்டீர்கள். இப்போது ஒரு ஜென்மமாவது ஆனந்தமாக இருங்கள். 21-ஜென்மங்கள் என்பது எதிர்கால விஷயம் ஆனால் இது ஒரு ஜென்மத்தின் சிறப்பு ஆகும். கடின உழைப்பு மற்றும் ஆனந்தம் -இரண்டின் அனுபவமும் செய்ய முடியும். எதிர்காலத்தில் அங்கு இந்த எல்லா விஷயங்களையும் மறந்து விடுவீர்கள். ஆனந்தமோ இப்போதுதான். மற்றவர்கள் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கின்றனர், நீங்களோ ஆனந்தமாக இருக்கிறீர்கள். நல்லது!

டீச்சர்கள் பக்தி செய்திருக்கிறீர்களா? எத்தனை ஜென்மங்கள் செய்திருப்பீர்கள்? இந்த ஜென்மத்திலோ செய்யவில்லைதானே! உங்களுடைய பக்தி முதல் ஜென்மத்திலேயே முடிந்து விட்டது. எப்போதிருந்து மீண்டும் பக்தி ஆரம்பமானது? யாருடன் ஆரம்பமானது? பிரம்மாதந்தையுடன் கூடவே நீங்களும் பக்தி செய்தீர்கள். எந்த

கோவிலில் செய்தீர்கள்? எனில் பக்தியிலும் ஆதி ஆத்மாக்களாகி விட்டீர்கள் மற்றும் ஞானமார்க்கத்திலும்கூட ஆதி ஆத்மாக்களாகி விட்டீர்கள். ஆரம்பத்தில் பக்தியில் அவ்விபசாரி பக்தி இருந்ததால் ஆனந்தமும், சுகமும் அந்த நேரத்திற்கு ஏற்றபடி குறையவில்லை. அந்த சுகம் மற்றும் ஆனந்தமும்கூட உங்களுடைய இடங்களில் சிரேஷ்டமாக இருந்தது.

நீங்கள் பக்த-மாலையில் உள்ளீர்களா? நீங்கள் பக்தியைத் தொடங்கியபோது, நீங்கள் பக்த-மாலையில் இல்லையா? பக்த-மாலையில் இரட்டை வெளிநாட்டினர்கள் இருந்தார்களா? பக்தராக இருந்தீர்களா அல்லது பக்த-மாலையில் இருந்தீர்களா? நாம் இருந்தோமா இல்லையா என்று இப்போது எல்லோரும் நினைத்துப் பார்க்கிறீர்களா! வெற்றிமாலையிலும் இருந்தீர்களா, பக்த-மாலையிலும் இருந்தீர்களா? பூஜாரிகளாக ஆனீர்கள், ஆனால் பக்த-மாலையில் இருந்தீர்களா? பக்த-மாலை தனிப்பட்டது. நீங்களோ ஞானியாகவும் பக்தராகவும் ஆகிறீர்கள். அவர்களோ பக்தர்கள், எனவே பக்த-மாலைக்கும், ஞானிகளின் மாலைக்கும் வித்தியாசம் உள்ளது. ஞானிகளின் மாலைதான் வெற்றி மாலை! மற்றும் பக்தர்களாக மட்டுமே இருப்பவர்கள், அத்தகைய தீவிர பக்தர்கள் பக்தியைத் தவிர வேறு எதையும் கேட்க விரும்பாத, பக்தியை மட்டுமே சிரேஷ்டமாக நினைக்கின்றனர் எனில் பக்த-மாலை வேறு, ஞான-மாலை வேறு! நீங்கள் நிச்சயமாக பக்தி செய்தீர்கள், ஆனால் அதை பக்த-மாலை எனக் கூற மாட்டோம், ஏனென்றால் பக்தியின் பங்கை நடித்த பிறகு, நீங்கள் அனைவரும் ஞானத்திற்குள் வர வேண்டும். அவர்கள் தீவிர பக்தர்கள் மற்றும் நீங்களோ தீவிர ஞானிகள்! ஆத்மாவில் சம்ஸ்காரங்களுடைய வித்தியாசம் இருக்கிறது. பக்தர் என்றால் சதா கேட்கும் சம்ஸ்காரம் உடையவர். நான் தாழ்ந்தவனாக இருக்கிறேன், தந்தை உயர்ந்தவராக இருக்கிறார் என்ற இந்த சமஸ்காரம் இருக்கும். அவர்கள் ராயலான பிச்சைக்காரர்கள் மற்றும் ஆத்மாக்கள் உங்களிடம் உரிமைத்தன்மையின் சம்ஸ்காரம் உள்ளது. ஆதலால் அறிமுகம் கிடைத்தவுடனேயே உரிமையுடையவராகி விட்டீர்கள். புரிந்ததா? பக்தர்களுக்கும் கூட கொஞ்சம் கொடுங்களேன் இரண்டிலுமே நீங்கள் வருவீர்களா? அவர்களுக்கும் அரைக்கல்பம்தான், உங்களுக்கும் அரைக்கல்பம்தான்! அவர்களும் மகிமையின் மாலையில் வரத்தான்

வேண்டும். இருந்தாலும் உலக மக்களை விட சிறந்தவர்கள்தான். அந்தப்பக்கமோ புத்தி இல்லை, தந்தையின் பக்கம் மட்டுமே உள்ளது. சுத்தமாகவோ இருக்கிறார்கள். தூய்மையின் பலன் கிடைக்கிறது -மகிமைக்குத் தகுதியானர் ஆகிறார்கள். உங்களுக்குப் பூஜை நடக்கிறது. அவர்களுக்குப் பூஜை நடப்பதில்லை, மகிமைக்காக சிலைகளை மட்டுமே உருவாக்கி விடுகிறார்கள். மீராவிற்கு ஒருபோதும் கோவில் அமைவதில்லை. தேவதைகளைப் போல மீராவிற்குப் பூஜை நடப்பதில்லை, மகிமை மட்டுமே உள்ளது. இப்போது இறுதி ஜென்மத்தில் யாருக்கு வேண்டுமானாலும் பூஜை செய்கின்றனர். பூமியையும் கூட பூஜை செய்கின்றனர் எனில் மரத்திற்கும் கூட பூஜை செய்கின்றனர் ஆனால் நியமப்படி அவர்களுக்கு மகிமை மட்டுமே செய்யப்படுகிறது, பூஜை கிடையாது. நீங்கள் பூஜைக்குரியவராகிறீர்கள். எனவே நீங்கள் பூஜைக்குரிய ஆத்மாக்கள் ஆவீர்கள் -இந்த போதை சதா நினைவிலிருக்கட்டும். பூஜைக்குரிய ஆத்மா ஒருபோதும் எவ்வித அபவித்ர சங்கல்பத்தை கூட தொட முடியாது. அத்தகைய பூஜைக்குரியவராக இருங்கள். நல்லது!

நாலா புறமும் உள்ள ஆஸ்திக்கு அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா படிப்பில் மதிப்புடன் தேர்ச்சி பெறக்கூடிய, சதா வரதானங்கள் மூலம் வரதானி ஆகி மற்றவர்களையும் கூட வரதானி ஆக்கக்கூடிய, அத்தகைய தந்தை, ஆசிரியர், சத்குருவின் அன்பில், சதா ஆன்மீக மகிழ்ச்சியில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

(பின்பு பஞ்சாப், ராஜஸ்தான், ஒரிசா, குல்பர்கா, விசாகப்பட்டினம், குஜராத் குழுக்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது).

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 25.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பெரிய நாள் (கிறிஸ்துமஸ்) மகா வாக்கியம்!

இன்று பெரியதிலும் பெரிய தந்தை குழந்தைகளுக்கு தெய்வீக சங்கம யுகத்தினுடைய ஒவ்வொரு நாளுக்கான வாழ்த்துக்களை அளித்துக் கொண்டிருக்கின்றார். உலகத்தினருக்கு விசேஷமாக ஒரு பெரிய நாள் இருக்கிறது மற்றும் பெரிய நாளன்று அவர்கள் என்ன செய்கின்றனர்? அவர்கள் நினைக்கின்றனர் பெரிய உள்ளத்துடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என ஆனால் அவர்கள் என்ன கொண்டாடுகிறார்கள் என்பது தந்தைக்குத் தெரியும். அவர்கள் கொண்டாடுவது மற்றும் பெரியதிலும் பெரிய தந்தையினுடைய பெரிய உள்ளம் கொண்ட குழந்தைகள் நீங்கள் கொண்டாடுவது, எவ்வளவு அன்பாகவும் விலகியும் இருக்கிறது. எப்படி உலகத்தினருடைய பெரிய நாள் இருக்கிறது, குஷியுடன் ஆடியும் பாடியும் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். அதுபோல குழந்தைகள் உங்களுக்கும் சங்கம யுகமே பெரிய யுகமாக இருக்கிறது; ஆயுளில் குறைவாக இருந்தாலும் விசேஷங்களும் பிராப்திகளும் அளிக்கக் கூடிய எல்லாவற்றையும் விட மிகப் பெரிய யுகம் ஆகும். எனவே சங்கமத்தின் ஒவ்வொரு நாளும் உங்களுக்காக பெரிய நாள்தான். ஏனெனில் பெரியதிலும் பெரிய தந்தை பெரிய யுகமான சங்கம யுகத்தில் தான் கிடைக்கின்றார். கூடவே தந்தை மூலம் பெரிய பெரிய பிராப்தியும் இப்போதுதான் கிடைக்கிறது. பாப்தாதா எல்லா குழந்தைகளையும் பெரியதிலும் பெரிய புருஷோத்தமனாக இப்போது ஆக்குகின்றார். இன்று குஷியுடன் கொண்டாடியபடியே ஒருவர் மற்றவருக்கு பரிசு அளிப்பது, வாழ்த்துக்கள் கூறுவது மற்றும் தந்தை மூலம் பரிசு பெறுவதற்கான நாளாக விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். உங்கள் அனைவருக்கும் தந்தை சங்கமத்தில் தான் பெரியதிலும் பெரிய பரிசு என்ன அளிக்கின்றார்? பாப்தாதா சதா கூறுகின்றார் -நான் குழந்தைகள் உங்களுக்காக உள்ளங்கையில் சொர்க்கத்தின் ராஜ்ய பாக்கியத்தை

எடுத்துக் கொண்டு வந்துள்ளேன். எனில் அனைவருடைய உள்ளங்கையிலும் சொர்க்கத்தின் ராஜ்ய பாக்கியம் இருக்கிறதுதானே! இதற்குத்தான் கூறப்படுகிறது -உள்ளங்கையில் சொர்க்கம் இருக்கிறது! என. இதை விட பெரிய பரிசு வேறு யாராவது கொடுக்க முடியுமா? எவ்வளவு பெரிய மனிதராயினும் எவ்வளவு பெரிய பரிசு கொடுத்தாலும் தந்தையுடைய பரிசுக்கு முன் அவை என்ன? சூரியனுக்கு முன்னால் இருக்கின்ற தீபத்தை போன்றவை.

எனவே சங்கம யுகத்தினுடைய நினைவுச்சின்ன அடையாளமாக மற்ற மதங்களிலும் வைத்துள்ளனர். உங்களுக்கு பெரிய யுகத்தில் பெரிய தந்தை பெரியதிலும் பெரிய பரிசு அளித்துள்ளார், ஆதலால் பெரிய நாளான இன்று இந்த விதி மூலம் கொண்டாடுகிறீர்கள். அவர்கள் கிறிஸ்துவ தந்தை என்று கூறுகின்றனர். தந்தை சதா குழந்தைகளுக்கு தரக்கூடிய வள்ளல் ஆவார். லௌகீக முறையிலும் பாருங்கள் தந்தை குழந்தைகளுக்கு வள்ளல் ஆகின்றார். இவரோ எல்லையற்ற தந்தையாவார். எல்லையற்ற தந்தை பரிசையும் எல்லையற்றதாகத் தருகின்றார். மற்ற எந்த பரிசும் எத்தனை நாட்கள் வரை இருக்கும்? எவ்வளவு நல்ல நல்ல வாழ்த்து அட்டைகளை பரிசாக கொடுக்கின்றனர் ஆனால் இன்றைய நாள் கழிந்தது எனில், அந்த வாழ்த்து அட்டைகளை என்ன செய்வார்கள்? சிறிது காலம் வைத்திருக்கின்றனர் அல்லவா. இனிப்புகளும் வழங்குகின்றனர் அதுவும்கூட எத்தனை நாட்களுக்கு இருக்கும்! எவ்வளவு காலம் குஷியுடன் கொண்டாடுவார்கள். ஆடுவதும் பாடுவதும் ஒரு இரவுதான். ஆத்மாக்கள் உங்களுக்கோ தந்தை அத்தகைய பரிசு அளிக்கின்றார் அது இந்த பிறவியில் கூடவே இருக்கிறது ஆனால் ஜென்ம ஜென்மத்திற்கும் கூடவே இருக்கும். உலகினர் கூறுகின்றனர் வெறும் கையுடன் வந்தோம் மற்றும் வெறும் கையுடன் தான் செல்வோம் என ஆனால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் உடனே கூறுவீர்கள் ஆத்மாக்கள் நாங்கள் தந்தை மூலம் கிடைத்துள்ள பொக்கிஷங்களை நிரப்பிக் கொண்டு செல்வோம் மற்றும் அனேக ஜென்மங்கள் வரை நிரம்பியே இருப்போம். 21-ஜென்மங்கள் வரை இந்தப் பரிசு கூடவே இருக்கும். அத்தகைய பரிசை எப்போதாவது பார்த்து இருக்கிறீர்களா? யாராவது வெளிநாட்டு ராஜா ராணியாக கூட இருக்கட்டும் ஆனால் இத்தகைய பரிசு கொடுக்க முடியுமா? விருப்பத்தின் வெளிப்பாடாக இந்த சிம்மாசனத்தை கூட எடுத்துக்

கொள்ளுங்கள் என கொடுக்கட்டும். நீங்கள் என்ன செய்வீர்கள், எடுத்துக் கொள்வீர்களா? தந்தையுடைய இதய சிம்மாசனத்திற்கு முன்பாக இந்த சிம்மாசனமும் என்ன! எனவே நீங்கள் பெருமையுடன் இருக்கிறீர்கள், பெருமை என்றால் ஆன்மீக போதை. இந்த ஆன்மீகப் பெருமையில் இருப்பவர்கள் எந்த ஒரு விஷயத்திற்கும் கவலைப்படுவதில்லை, கவலையற்ற ராஜா ஆகி விடுகிறார்கள். இப்போதும் ராஜா மற்றும் எதிர்காலத்திலும் ராஜ பதவியை பெறுகின்றீர்கள் எனில் எல்லாவற்றையும் விட பெரிய மற்றும் எல்லாவற்றையும் விட மிக சிறப்பானது இந்த கவலையற்ற ராஜ்யம். ஏதாவது கவலை இருக்கிறதா? குடும்பத்தில் இருப்பவர்களுக்கு குழந்தைகுட்டிகளின் கவலை இருக்கிறதா? குமாரர்களுக்கு உணவு சமைப்பதற்கான கவலை அதிகம் உள்ளது; குமாரிகளுக்கு என்ன கவலை உள்ளது? வேலையுடையதா அல்லது நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்ற கவலை உள்ளதா? கவலையற்றவர்கள்தானே! யாருக்கு கவலை உள்ளதோ அவர் கவலையற்ற ராஜாங்கத்தின் குஷியை அனுபவிக்க முடியாது. உலகத்தின் ராஜ்யம் 20-ஜென்மங்களுக்கு நடக்கும் ஆனால் இந்த கவலையற்ற ராஜ்யம் மற்றும் இதய சிம்மாசனம் -இந்த ஒரே ஒரு யுகத்தில் மட்டும் தான் கிடைக்கிறது, ஒரு ஜென்மத்திற்காக எனில் ஒன்றுக்கு மகத்துவம் உள்ளதல்லவா!

பாப்தாதா சதா இதைத்தான் கூறுகின்றார் -பிராமண வாழ்க்கை என்றால் கவலையற்ற ராஜா! பிரம்மாதந்தை கவலையற்ற மகாராஜாவாக ஆனபோது அவர் எந்த பாடலைப் பாடினார் -அடைய வேண்டியதை அடைந்து விட்டேன், என்ன காரியம் மீதம் உள்ளது! நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? சேவையின் காரியம் மீதம் உள்ளது ஆனால் அதுவும் கூட செய்பவர் தந்தை செய்து கொண்டிருக்கிறார் மற்றும் செய்து கொண்டே இருப்பார். 'நாம்' செய்ய வேண்டியுள்ளது -இதனால் சுமையாக ஆகின்றது. தந்தை நம் மூலமாக செய்து கொண்டிருக்கிறார் ஏனில கவலையற்றவர் ஆகி விடுவீர்கள். நிச்சயம் இருக்கிறது இந்த சிரேஷ்ட காரியம் நடந்தே ஆக வேண்டும் அல்லது நடந்தே இருக்கிறது ஆதலால் நிச்சய புத்தியுடன் கவலையற்று இருக்கிறீர்கள். இதுவோ குழந்தைகளை பிஸியாக வைப்பதற்காக சேவையின் ஒரு விளையாட்டை செய்து கொண்டிருக்கிறார். நிமித்தம் ஆவதன் மூலம் உங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால சேவையின் பலன்களுக்கு

# 1989 அவ்யக்த முரளி

நீங்கள் உரிமையுடையவராகிக் கொண்டிருக்கிறீர்கள். வேலை தந்தையினுடையது, பெயரோ குழந்தைகளுக்கு! பழத்தை குழந்தைகளுக்கு அளிக்கிறார், தான் உண்பதில்லை! எனில் கவலையற்றவர்கள் ஆகி விட்டீர்கள்தானே! சேவையில் வெற்றிக்கான சகஜ சாதனமும் இதுதான் -செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார்! ஒருவேளை 'நான்' செய்து கொண்டிருக்கிறேன் என்றால் ஆத்மாவின் சக்திக்கு ஏற்ப சேவையில் பலன் கிடைக்கிறது. தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்றால் தந்தை சர்வசக்திவான் ஆதலால் கர்மத்தின் பலனும் இவ்வளவு சிரேஷ்டமாக கிடைக்கிறது. எனவே சதா தந்தை மூலம் கிடைத்துள்ள கவலையற்ற ராஜதானி அல்லது உள்ளங்கையில் சொர்க்கத்தின் ராஜ்ய பாக்கியத்தை இறைவனின் பரிசு என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தந்தை மற்றும் பரிசு இரண்டின் நினைவின் மூலம் ஒவ்வொரு நாளும் என்ன, ஆனால் ஒவ்வொரு நொடியும் பெரியதிலும் பெரிய நொடி, பெரிய நாள் என, இத்தகைய அனுபவம் செய்வீர்கள். உலகினரோ வாழ்த்துக்கள் மட்டுமே கூறுகின்றனர். என்ன கூறுகின்றனர்? மகிழ்ச்சியாக இருங்கள், ஆரோக்கியம் செல்வத்துடன் இருங்கள்,... இவ்வாறு கூறுகிறார்கள் ஆனால் அவ்வாறு ஆவதோ இல்லையல்லவா. தந்தையோ அத்தகைய வாழ்த்துக்களை அளிக்கின்றார் அதனால் சதா காலத்திற்கும் ஆரோக்கியம் செல்வம் மகிழ்ச்சி வரதானங்களின் ரூபத்தில் கூடவே இருக்கின்றது. வாயால் மட்டுமே கூறி குஷி படுத்துவது இல்லை ஆனால் அவ்வாறு ஆக்குகின்றார் மற்றும் ஆவதுதான் கொண்டாடுவது ஏனெனில் அவிநாசி தந்தையின் வாழ்த்துக்களும் அவிநாசி ஆகத்தான் இருக்கும், எனவே வாழ்த்துக்கள் வரதானம் ஆகி விடுகின்றன.

நீங்கள் தண்டிலிருந்து வந்துள்ளீர்கள். இந்த அனைத்து கிளைகளும், இந்த எல்லா தர்மங்களும் உங்களுடைய கிளைகள் தான், கல்ப விருட்சத்தின் கிளைகள். ஆதலால் விருட்சத்தின் அடையாளமாக கிறிஸ்துமஸ் 'ஃட்ரீ' (tree) மரத்தை காண்பித்துள்ளனர். அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்தை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? இதில் என்ன செய்கிறார்கள்? (மேடை மீது இரண்டு கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரித்து வைத்துள்ளனர்). இதிலென்ன காட்டியுள்ளனர்? விசேஷமாக மின்னிக் கொண்டிருக்கும் விளக்குகளை (bulbs) காண்பித்துள்ளனர். சின்னச்சின்ன

விளக்குகளால்தான் அலங்கரிக்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? கல்ப விருட்சத்தில் மின்னிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் நீங்கள் மற்றும் எந்த தர்ம பிதாக்கள் வந்தாலும் அவர்களும் தங்களது கணக்கின் மூலம் சதோபிரதானம் ஆகின்றனர், ஆதலால் சத் யுக ஆத்மா பிரகாசிக்கின்றது. ஆதலால் ஒரு கல்ப விருட்சத்தின் அடையாளம் -மற்ற தர்மத்தின் கிளைகளும், ஒவ்வொரு வருடமும் அடையாளமாக கொண்டாடிக் கொண்டே இருக்கின்றனர். முழு விருக்ஷத்தினுடைய 'கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர்' அல்லவா! எந்த 'கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர்'? தந்தை பிரம்மாவை முன் வைத்துள்ளார். சாகார படைப்பினுடைய ஆத்மாக்களின் ஆதிபதி, ஆதிநாத் பிரம்மா ஆவார், ஆதலால் 'கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர்' ஆகிறார். ஆதிதேவன் கூடவே நீங்களும் இருக்கிறீர்களா, இல்லை ஆதிதேவன் தனியாக உள்ளாரா? ஆதி ஆத்மாக்கள் நீங்கள் ஆதிதேவனுடன் இருக்கிறீர்கள் மற்றும் எதிர்காலத்திலும் கூடவே இருப்பீர்கள் என்ற போதை இருக்கிறதா? குஷியின் பாடலை தினமும் பாடிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது இன்று மட்டும் பாடுவீர்களா?

இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டினருடைய தினமாகும். உங்களுக்குத் தினமும் பெரிய நாள் தானா அல்லது இன்று மட்டுமா? நாலாபக்கமும் உள்ள உள்நாட்டு வெளிநாட்டு குழந்தைகள் கல்ப விருட்சத்தில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாக தெரிகின்றீர்கள். சூட்சும ரூபத்தில் அனைவருமே மதுபன் வந்தடைந்து விட்டீர்கள். அவர்களும் சூட்சும ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் சாகார ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். எல்லோருடைய உள்ளமும் தந்தையினுடைய இறை பரிசை பார்த்து குஷியுடன் நடனம் ஆடிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் எல்லா சாகார ரூப மற்றும் ஆகார ரூபதாரி குழந்தைகளை 'சதா மகிழ்ச்சியாக இருங்கள்' என்ற வாழ்த்துக்களை அளிக்கின்றார். சதா தில்குஷ் மிட்டாய் சாப்பிட்டுக் கொண்டே இருங்கள் மற்றும் பிராப்தியின் பாடலை பாடிக் கொண்டே இருங்கள். நாடகப்படி பாரதவாசிகளுக்கு விசேஷ பாக்கியம் கிடைத்துள்ளது. நல்லது!

அனைத்து ஆசிரியர்களும் தினமும் கொண்டாடும் பெரிய நாளை கொண்டாடுகிறீர்களா? தந்தை பெரியவர் மற்றும் நீங்களும்

பெரியவர்கள் ஆதலால் உலகத்தினர் பெரிய நாளன்று அவர்களுக்கு மகத்துவம் தருகின்றனர். இதிலும் கூட பெரிய சிறிய சகோதரர்கள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கிறார்கள். எல்லா டீச்சர்களும் கவலையற்ற ராஜாக்கள் தானே? ராஜா என்றால் சதா நிச்சயம் மற்றும் போதையில் நிலைத்திருக்கக்கூடியவர் ஏனென்றால் நிச்சயம் வெற்றியை அளிக்கிறது மற்றும் போதை சதா உயர பறக்க வைக்கிறது. எனில் கவலையற்ற ராஜாக்கள் தானே. யாராவது கவலை உள்ளவர் இருக்கிறீர்களா? சேவை எப்படி அதிகமாகும், நல்ல நல்ல ஆர்வமுள்ள குழந்தைகள் எப்போது கிடைப்பார்கள் எனத் தெரியவில்லையே, சேவை எது வரை செய்ய வேண்டி இருக்குமோ -இந்த சிந்தனை இல்லையே? சிந்தனையற்றவராக இருப்பதன் மூலம் தான் சேவை வளரும், சிந்திப்பதால் ஒன்றும் வளராது. சிந்தனை அற்றவராகி, புத்தியை சுதந்திரமாக வைத்தால் அப்போது தந்தையுடைய சக்தி உதவியின் ரூபத்தில் அனுபவமாகும். சிந்திப்பதிலேயே புத்தியை பிஸியாக வைத்திருந்தீர்கள் என்றால் தந்தையின் 'டச்சிங்', தந்தையின் சக்தியை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். பாபாவும் நானும் இணைந்து இருக்கின்றோம், செய்விப்பருடன் செய்வதற்கு நிமித்தமான ஆத்மா நான்! இதற்கு கூறப்படுகின்றது சிந்தனையற்ற நிலை அதாவது ஒருவருடைய நினைவு! என. சுப சிந்தனையில் இருப்பவருக்கு ஒருபோதும் கவலை வராது. எங்கு கவலை உள்ளதோ அங்கு சுப சிந்தனை இருக்காது மற்றும் எங்கு சுபசிந்தனை உள்ளதோ அங்கு கவலை இருக்காது! நல்லது.

நாலா புறமும் உள்ள இறை பரிசினுடைய அதிகாரி, பெரியதிலும் பெரிய தந்தையின் பெரியதிலும் பெரிய பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, ஆதி பிதாவினுடைய சதா துணைவனான ஆதி ஆத்மாக்களுக்கு, சதா பெரியதிலும் பெரிய தந்தை மூலம் அன்பின் வாழ்த்துக்களையும் அழியாத வரதரனத்தையும் பிராப்தி செய்யும் சர்வ சாகார ரூபதாரி மற்றும் ஆகாரி ரூபதாரி -எல்லாக் குழந்தைகளுக்கும் தில்குஷ் மிட்டாய் உடன் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

(பிறகு பூனா, பீதர், பெல்காம், சோலாப்பூர், பல்வேறு குழுவினர், டாக்டர்கள் குழுக்களைச் சந்தித்தார்!).

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 29.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# படிப்பின் சாரம் -வருவது மற்றும் போவது!

இன்று முரளிதர் தந்தை தனது மாஸ்டர் முரளிதர் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். எல்லா குழந்தைகளும் முரளி மற்றும் சந்திப்பினுடைய தாகத்தில் இருக்கின்றனர். இத்தகைய தாகத்தை விட பிராமண ஆத்மாக்களுக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த ஞான முரளி மற்றும் பரமாத்மா சந்திப்பு அன்பாகவும், விலகியும் உள்ளது. உலகிலுள்ள ஆத்மாக்கள் பரமாத்மா சந்திப்பின் தாகத்தில் இருக்கின்றனர், காத்துக் கொண்டிருக்கின்றனர்; ஆனால் பிராமண ஆத்மாக்கள் நீங்கள் இவ்வுலகில் ஒரு மூலையில் குப்த ரூபத்தில் தனது சிரேஷ்ட பாக்கியத்தை பிராப்தி செய்து கொண்டிருக்கின்றீர்கள் ஏனென்றால் தெய்வீக தந்தையை தெரிந்து கொள்வதற்கு, அதாவது பார்ப்பதற்கு தெய்வீக புத்தி மற்றும் தெய்வீகப் பார்வை வேண்டும்; அதை தந்தை விசேஷ ஆத்மாக்கள் உங்களுக்கு அளித்திருக்கின்றார் ஆதலால் பிராமணர்கள் நீங்கள்தான் தெரிந்து கொள்ள முடியும் மற்றும் சந்திப்பையும் கொண்டாட முடியும். உலகினரும் அழைத்துக் கொண்டு இருக்கிறார்கள் -ஒரு துளி தாகத்தில் இருக்கிறோம் நாங்கள் மற்றும் நீங்கள் கூறுகிறீர்கள் -நாங்கள் ஆஸ்தியின் உரிமையாளர்கள் என, எவ்வளவு வித்தியாசம் உள்ளது -எங்கு தாகத்தில் உள்ளவர்கள் மற்றும் எங்கு உரிமையுள்ளவர்கள்! இப்போதும்கூட எல்லோரும் உரிமையாளராகி உரிமையுடன் இங்கு வந்து அடைந்துள்ளீர்கள். நாம் நமது தந்தையுடைய வீட்டில் அல்லது தனது வீட்டில் வந்திருக்கிறோம் என்று உள்ளத்தில் இந்த போதை உள்ளது. நாங்கள் ஆசிரமத்திற்கு வந்து இருக்கிறோம் என இவ்வாறு கூற மாட்டீர்கள். உங்களுடைய வீட்டிற்கு வந்து இருக்கிறீர்கள் -இப்படி நினைக்கிறீர்களா? உரிமையின் அடையாளம் -என்னுடையது என்பது. தங்களுடைய தந்தையிடம் வந்துள்ளீர்கள் தங்களுடைய குடும்பத்தில் வந்துள்ளீர்கள். கஷ்டப்பட்டு வருவதில்லை ஆனால் குழந்தைகள் உங்களுடைய வீட்டுக்கு

வந்துள்ளீர்கள். நீங்கள் நான்கு நாட்களுக்கு வந்தாலும்கூட, மதுபன் என்னுடைய இடம் என புரிந்து வந்தடைகிறீர்கள்.

எனவே இது வருவது மற்றும் போவது. பிராமணர்கள் உங்களுடைய படிப்பு என்னவோ அல்லது முரளிதர் உடைய என்ன முரளியோ, அதன் சாரம் இந்த இரு வார்த்தைகளில் உள்ளது -வருவது மற்றும் போவது! நினைவு யாத்திரையின் பயிற்சி செய்கிறீர்களா? கர்மயோகி என்றாலே -நான் அசரீரி ஆத்மா சரீரத்தின் பந்தனத்திலிருந்து விலகி இருக்கின்றேன், கர்மம் செய்வதற்காக கர்மத்தில் வருகின்றேன் மற்றும் கர்மத்தை முடித்து விட்டு கர்ம சம்பந்தத்திலிருந்து விலகி இருக்கின்றேன் சம்பந்தத்தில் இருக்கின்றேன், பந்தனத்தில் இல்லை -எனில் இது என்ன ஆயிற்று? கர்மத்திற்காக வருவது மற்றும் விலகி இருப்பது என்றால் செல்வது. கர்மத்தின் பந்தனம் வசமாகி கர்மத்தில் வருவதில்லை ஆனால் கர்ம இந்திரியங்களை நிலைக்கச் செய்து, அதிகாரத்தின் மூலம் கர்மம் செய்வதற்காக கர்மயோகி ஆகிறீர்கள். இந்திரியங்களடைய கர்மத்தில் வசம் ஆவதில்லை. யாராவது யாருடைய வசம் ஆகி விடுகிறார் என்றால் அந்த வசமான ஆத்மா அடிமையாகி விடுகிறது மற்றும் எஜமானனாகக்கூடிய ஆத்மா ஒருபோதும் யாருக்கும் அடிமை ஆவது கிடையாது, தனது சுவமானத்தில் உறுதியாக இருக்கிறது. பல குழந்தைகள் இப்போதும் கூட அவ்வப்போது ஏதாவது கர்ம இந்திரியங்கள் வசமாகி விடுகிறார்கள் பின்னர் கூறுகின்றனர் -இன்று கண்கள் ஏமாற்றி விட்டது, இன்று வாய் ஏமாற்றி விட்டது, பார்வை ஏமாற்றி விட்டது,... என. பிற வசமாவது என்றால் ஏமாற்றம் அடைவது மற்றும் ஏமாற்றத்தின் அடையாளம் துக்கத்தின் அனுபவம் ஆவது! ஏமாற விருப்பமில்லை ஆனால் விரும்பாவிடினும் கூட ஏமாந்து விடுகின்றனர், இவருக்கு கூறப்படுகிறது -வசப்பட்ட ஆத்மா என. உலகத்தினர் கூறுகின்றனர் -நான் குழப்பமடைந்தேன்... விரும்பவில்லை, ஆனால் நான் எப்படி குழப்பமடைந்தேன் என்று எனக்கேத் தெரியவில்லை என்று கூறுகிறார்கள். சுயதரிசன சக்கரதாரி ஆத்மாக்கள் நீங்கள் எவ்வித ஏமாற்றத்திலும் வர முடியாது ஏனெனில் சுயதரிசன சக்கரம் குழப்பத்திலிருந்து விடுவிக்க கூடியது. தனக்கு மட்டுமின்றி ஆனால் மற்றவர்களையும்கூட விடுவிப்பதற்கு நிமித்தம் ஆகிறீர்கள். அனேக விதமான துக்கத்தின் சக்கரங்களிலிருந்து தப்பிக்க நினைக்கிறார்கள்

-இந்த சிருஷ்டி சக்கரத்தில் இருந்து விடுபட்டு விட வேண்டும் என...! ஆனால் சிருஷ்டி சக்கரத்தின் உள்ளே பாகத்தில் நடித்தபடியே, அனேக துக்கங்களின் சக்கரத்திலிருந்து முக்தி அடைந்து ஜீவன்முக்தி நிலையை அடைய முடியும் -இது எவருக்குமே தெரியவில்லை. நீங்கள் சவால் விடுகிறீர்கள் நாங்கள் உங்களுடைய வாழ்க்கையில் முக்தியை இரட்டிப்பாக்க முடியும் என -வாழ்ந்து கொண்டும் இருங்கள் மற்றும் முக்தியும் அடையுங்கள் -இப்படி சவால் விட்டிருக்கிறீர்களா? போதையுடன் கூறுகிறீர்கள் ஜீவன்முக்தி உங்களுடைய மற்றும் எங்களுடைய பிறப்புரிமை என்றால் சுயதரிசன சக்கரதாரி அதாவது துக்கத்தின் சக்கரங்களிலிருந்து முக்தி அடைபவர் மற்றும் முக்தி தரக்கூடியவர். இந்தப் பயிற்சியை செய்கிறீர்கள்தானே -கர்மத்தில் வருவது மற்றும் பின்பு விலகி செல்வது, எனில் நினைவு யாத்திரை என்பது என்ன? வருவது மட்டும் போவது!

மேலும் படிப்பு என்றால் ஞானத்தின் சாரம் என்ன? கர்மாதீத் ஆகி வீட்டுக்குச் செல்வது மற்றும் பின்னர் திரும்பி வந்து பாகத்தில் நடிப்பது, தனது ராஜ்யத்தில் வருவது. இதுதான் ஞானத்தின் சாரம். போவது மற்றும் வருவது! இதுதான் ஞானம் மற்றும் யோகம் -இந்த பயிற்சியை இரவு பகல் செய்து கொண்டே இருங்கள். புத்தியில் வீடு செல்வது மற்றும் பின்பு ராஜ்யத்தில் வருவதன் குஷி இருக்கிறது. எப்படி மதுபன் தனது வீட்டிற்கு வருகிறீர்கள் என்றால் எவ்வளவு குஷியாக இருக்கிறீர்கள். எப்போது பயணச்சீட்டைப் பதிவு செய்கிறீர்களோ, அப்போதிருந்தே போக வேண்டும், போக வேண்டும் என்பது புத்தியில் நினைவிருக்கிறது தானே. எனில் எப்போது மதுபன் வீடு செல்ல குஷி இருக்கிறது என்றால் ஆத்மாவின் வீடு செல்வதற்கும் குஷி இருக்கிறது ஆனால் குஷியுடன் யார் செல்வார்கள்? எந்தளவு சதா இந்த போவது மற்றும் வருவதன் பயிற்சி உள்ளதோ அதுவரை! எப்போது தேவையோ அப்போது அசரீரி ஸ்திதியில் நிலைத்து விடுங்கள் மற்றும் எப்போது தேவையோ அப்போது கர்மயோகி ஆகி விடுங்கள் -இந்த பயிற்சி மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். நீங்கள் அசரீரியாக விரும்புகிறீர்கள் மற்றும் உடலின் பந்தனம், கர்மத்தின் பந்தனம், மனிதர்களின் பந்தனம், வைபவங்களின் பந்தனம், சுபாவ சம்ஸ்காரங்களின் பந்தனம் தனது பக்கம் ஈர்க்கிறது என்பது கூடாது. எந்த ஒரு பந்தனமும் அசரீரி ஆக விடாது! எப்படி சிலர் இறுக்கமான

ஆடை அணிகிறார் எனில் ஒரு நொடியில் அதை அவிழ்க்க முடியாது, இழுக்க வேண்டியிருக்கும் ஏனெனில் உடலுடன் ஒட்டிக் கொண்டு இருக்கும். அதுபோல பந்தனமும் தனது பக்கம் இழுக்கும். பந்தனம் ஆத்மாவை இறுக்கமாக்கி விடுகிறது. ஆதலால் பாப்தாதா சதா இந்த பாடத்தை படிப்பிக்கின்றார் -பற்றற்ற நிலை அதாவது அன்பாகவும் விலகியும் இருப்பது, இதற்கு நீண்ட கால பயிற்சி தேவை.

ஞானத்தை கேட்பது சொல்வது சேவை செய்வது என்பது இது தனியான விஷயம் ஆனால் இந்த பயிற்சி மிக அவசியமானது. மதிப்புடன் தேர்ச்சி பெற வேண்டுமெனில் இந்த பயிற்சியில் தேர்ச்சி பெறுவது மிகவும் அவசியம். மேலும் இந்த பயிற்சி மீது கவனம் செலுத்துவதில் இரட்டை அடிக்கோடு இடுங்கள், அப்போதுதான் டபுள் லைட் ஆகி கர்மாதீத் ஸ்திதியைப் பிராப்தி செய்து இரட்டை கிரீடதாரி ஆக முடியும். பிராமணன் ஆனீர்கள், தந்தையுடைய ஆஸ்திக்கு உரிமையுடையவர்கள் ஆனீர்கள், இறை மாணவர்கள் ஆனீர்கள், ஞானி-ஆத்மா ஆனீர்கள், உலக சேவாதாரி ஆனீர்கள் -இந்த பாக்கியத்தையோ அடைந்து விட்டீர்கள் ஆனால் இப்போது மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்காக, கர்மாதீத் நிலையின் அருகே செல்வதற்காக, பிரம்மாதந்தைக்குச் சமமாக விலகியவராகவும், அசரீரி ஆவதற்கான பயிற்சியின் மீது விசேஷ கவனம் வையுங்கள். எப்படி பிரம்மாதந்தைக்கு கர்மாதீத் ஆவதற்கு முன்பு 'அன்பாக மற்றும் விலகியும்' இருப்பதற்கான பயிற்சியை பிரத்யக்ஷமாக அனுபவம் செய்வித்தார். எனவே எல்லாக் குழந்தைகளும் அனுபவம் கூறுகிறீர்கள் -கேட்கும்போதும் விலகி, காரியம் செய்யும்போதும் விலகி, பேசும்போதும் விலகி இருந்தார்; சேவை அல்லது ஏதாவது காரியத்தை விடவில்லை ஆனால் விலகியிருந்து இறுதி நாள் கூட குழந்தைகளுடைய சேவையை முடித்து வைத்தார். விலகி இருக்கும் தன்மை எல்லாக் காரியங்களிலும் வெற்றியை சகஜமாக அனுபவம் செய்விக்கிறது. செய்து பாருங்கள். ஒரு மணி நேரம் யாருக்காவது புரிய வைத்துப் பாருங்கள் மற்றும் 15-நிமிடத்தில் கூறிக்கொண்டே, பேசிக்கொண்டே விலகியிருக்கும் ஸ்திதியில் நிலைத்து, மற்ற ஆத்மாவிற்கும் விலகியிருக்கும் ஸ்திதியின் வைப்ரேஷன் கொடுத்துப் பாருங்கள். இந்த 15-நிமிடத்தின் வெற்றியானது 1-மணி நேரத்திலும்கூட

ஆகாது. இந்த பயிற்சியை பிரம்மாதந்தை செய்து காட்டினார் எனில் என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா!

முதலில் நிமித்தமானவர்களோ டீச்சர்கள். தந்தையைப் பின்பற்றுவீர்கள்தானே. சேவை எவ்வளவுதான் விஸ்தாரம் ஆகட்டும் ஆனால் விஸ்தாரத்தில் சென்று கொண்டு, சாரத்தின் ஸ்திதியினுடைய அனுபவம் குறையக்கூடாது, விஸ்தாரத்தில் சாரத்தை மறந்து விடக்கூடாது. சாப்பிடுங்கள் குடியுங்கள் சேவா செய்யுங்கள் ஆனால் விலகியிருக்கும் தன்மையை மறந்து விடக்கூடாது. வார்த்தைகள் மூலமாகவும் எது வரை சேவை செய்வீர்கள், எந்த அளவு செய்வீர்கள். இப்போது ஆன்மீக அதிர்வலைகளை, அசரீரியாகும் ஸ்திதியின் அதிர்வலைகளை, அன்பாகி-விலகி இருக்கும் சக்திசாலி அதிர்வலைகளை வாயுமண்டலத்தில் பரப்புங்கள். சேவையினுடைய தீவிர வேகத்திற்கான சாதனமும் இதுதான். மற்றவர்களுக்கு சேவை செய்யும் முன், தன்னை இந்த விதியினால் சம்பன்னமாக்குங்கள் அப்போது சேவையிலும் வெற்றி கிடைக்கும். இப்போது வார்த்தையில் வருவது சகஜமாகி விட்டது மற்றும் மனதாரவும் செய்கிறீர்கள் ஏனென்றால் பயிற்சி நன்றாக பழக்கமாகி விட்டது. அதேபோல் இந்த பயிற்சியும் இயல்பானதாகட்டும். இந்த இயல்பான பயிற்சி மூலம் இயற்கையும் மாறி விடும். அது மனித ஆத்மாக்களின் இயல்பாக இருக்கலாம், இயற்கையின் இயல்பாகவும் இருக்கலாம், புரிந்ததா? கஷ்டமாக இல்லையே! பெரியதிலும் பெரிய தந்தையின் குழந்தைகள் மற்றும் பெரியதிலும் பெரிய பிராப்தியின் உரிமையாளர்கள் எனில் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. கவனமாயிருக்க (attention) வருகிறதா அல்லது டென்ஷன் (tension) வருகிறதா? தனிப்பட்ட சம்ஸ்காரம் கவனத்திற்குரியவை. டென்ஷனாக இருக்க முடிகிறது எனில், கவனமாக இருப்பது என்ன பெரிய விஷயம்? டென்ஷனாக இருப்பது பழக்கமாகி விட்டதல்லவா. கவனமாக இருப்பதற்கும் டென்ஷன் ஆகாதீர்கள் ஆனால் இயல்பான கவனம் வையுங்கள். பலர் இப்படி செய்கின்றனர் -கவனத்தை டென்ஷனாக மாற்றி விடுகின்றனர். ஆதலால் கவனத்தை கவனத்தின் ரூபத்திலேயே செய்யுங்கள், மாற்றாதீர்கள். ஆத்மாவை விலகியிருக்கச் செய்வதே அசல் பயிற்சி. விலகி இருந்தது, விலகி இருக்கிறது, பின்பு விலகியவராகும். தானாகவே விலகியவராக விடாது. எப்படி ஆத்மாவுடைய அசலான

இயல்பு தேகத்திலிருந்து விலகி இருப்பது. சரீரம் ஆத்மா கிடையாது, ஆத்மா சரீரம் கிடையாது, எனில் விலகி இருக்கிறதுதானே. 63-ஜென்மங்களின் பற்று பழக்கமாகி விட்டது. அசலானது அசலாகத்தான் இருக்கும். நல்லது.
இரட்டை வெளிநாட்டினரும் அதிகம் வந்துள்ளனர் -புதிய வருஷம் கொண்டாடுவதற்காக. விருந்தினராக வந்திருக்கிறீர்களா அல்லது குழந்தையாகி வந்திருக்கிறீர்களா? என்னுடையது என்பது உள்ளதுதானே. பாப்தாதா குழந்தைகளை தனது வீட்டில் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகள் எப்போதும் வீட்டின் அலங்காரம் ஆவார்கள். குழந்தைகளால் மதுபன் அழகு பெறுகிறது, எனவே பாப்தாதா தனது வீட்டின் அழகைப் பார்த்து குஷி அடைகின்றார். பாரதவாசி ஆகட்டும் வெளிநாட்டவர் ஆகட்டும் -இருவருமே வீட்டின் அலங்காரங்கள். பாப்தாதா வருவதற்கும் வாழ்த்துக்கள் அளிக்கின்றார், செல்வதற்கும் வாழ்த்துக்கள் அளிக்கின்றார். இங்கு வருவதும் நன்றாக உள்ளது, செல்வதும் நன்றாக உள்ளது. பிரியாவிடை இல்லை, பாராட்டுக்கள் தான் வாழ்த்துக்கள்! செல்வதானால் சேவைக்கான வாழ்த்துக்கள் மற்றும் இங்கு வருவதானால் சந்திப்பதற்கான வாழ்த்துக்கள். இரண்டுமே வாழ்த்துக்கள்தானே! நல்லது.

எல்லா உள்நாடு-வெளிநாட்டினுடைய அதிகாரி குழந்தைகளுக்கு, சதா ஞானம் மற்றும் நினைவின் சாரத்தில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா வருவது-போவது இந்த நினைவின் மூலம் சம்பன்னம் ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மாதந்தையைப் பின்பற்றக்கூடிய, கர்மாதீத் ஸ்திதியின் அருகாமையை அடையக்கூடிய யோகி ஆத்மாக்களுக்கு, சதா என்னுடையது என்ற அனுபவம் மற்றும் அதிகாரத்தின் குஷியில் இருக்கக்கூடிய கலகலப்பான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.12.1989 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புதிய வருடத்திற்கான மகா வாக்கியங்கள்!

இன்று புது உலகைப் படைப்பவர், உலகத்தினுடைய தந்தை தனது சக புது உலக படைப்பாளிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அனைத்து குழந்தைகளும் தந்தையுடைய புது உலகை படைக்கும் காரியத்தில் நெருங்கிய தொடர்புடையவர்கள். அவ்வாறு புது உலக ஸ்தாபனையின் பணியில் இயற்கையும் உதவியாளராகிறது, தற்போதைய பிரபல விஞ்ஞானிக்குழந்தைகளும் உதவியாளராகிறார்கள், ஆனால் நீங்கள் அனைவரும் நெருங்கிய துணைவர்கள். இந்த பிராமண வாழ்க்கையின் அனைத்து குழந்தைகளின் விசேஷ கடமை அல்லது சேவை என்ன? நீங்கள் இரவுபகல் சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் பறக்கிறீர்கள். எந்த காரியத்திற்காக? உலகை புதியதாக மாற்றுவதற்காக! உலக மக்கள் புத்தாண்டை கொண்டாடுகிறார்கள், ஆனால் உங்கள் உள்ளத்திலோ இந்த உலகத்தை புதியதாக மாற்ற வேண்டும், இதனால் எல்லாமே புதியதாக மாறும் என்ற உயர்ந்த எண்ணம் உள்ளது. மனித ஆத்மாக்கள், இயற்கையும் சதோபிரதானமாக புதியதாக மாறும். நீங்கள் பழைய உலகத்தைப் பார்த்துக் கொண்டுமிருக்கிறீர்கள். சுற்றிலும் பரபரப்பாக இருக்கிறது. எனவே, இந்த 'கூக்குரல்' உலகத்திலிருந்து, நீங்கள் 'ஆஹாஆஹா' என்ற மகிழ்ச்சியின் உலகத்தை உருவாக்குகிறீர்கள். அதில் ஒவ்வொரு கணம், ஒவ்வொரு செயல், ஒவ்வொரு பொருள் எல்லாமே புதியதாக மாறி விடும். எப்படியிருந்தாலும், அனைவருக்கும் அனைத்தும் புதியதுதான் பிடிக்கிறதல்லவா? பழைய பொருட்கள் நன்றாக இருந்தாலும், அவை நினைவுக்குறிப்புகளாக மட்டுமே இருக்கும், ஆனால் பயன்படுத்த பிடிக்காது. அருங்காட்சியகத்தில்

நினைவுச்சின்னமாக வைத்திருப்பீர்கள், ஆனால் அனைவருக்கும் புதிய பொருட்கள் பிடிக்கின்றது. இந்த நேரத்தில், பிராமண ஆத்மாக்கள் நீங்கள் பழைய உலகில் இருந்தாலும், புதிய உலகில் இருக்கிறீர்கள். மற்ற ஆத்மாக்கள் பழைய உலகில் உள்ளனர் ஆனால் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நீங்கள் புதிய சங்கமத்தில் வாழ்கிறீர்கள். பழைய வாழ்க்கை முடிந்து விட்டது மற்றும் இப்போது புதிய பிராமண வாழ்க்கையில் இருக்கிறீர்கள். உலகினர் ஒரு நாளை புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள், ஆனால் உங்களுக்கோ புதிய யுகம், புதிய வாழ்க்கை! ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு நொடியும் புதியது. நீங்களோ சங்கமத்தில் இருக்கிறீர்கள். ஒருபுறம் பழைய உலகத்தையும், மறுபுறம் புதிய உலகத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே புத்தி எந்தப் பக்கம் போகிறது? புதியதின் பக்கமா அல்லது அவ்வப்போது பழைய உலகின் பக்கமா? உங்களுக்குப் பழைய உலகம் பிடிக்குமா? எந்தப் பொருள் நன்றாக இல்லையோ, பின் புத்தி ஏன் அங்கு செல்கிறது? பழைய உலகில் நீங்கள் துக்கம், அமைதியின்மை, தொந்தரவுகளை அனுபவித்திருக்கிறீர்களா அல்லது இப்போது கொஞ்சம் அனுபவிக்க வேண்டுமா? இன்றோ சந்திப்பதற்கும், கொண்டாடுவதற்கும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் புத்தாண்டைக் கொண்டாட தொலைதூர நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள். எனவே, புத்தாண்டுக்காக, தனக்காக, உலக சேவைக்காக மற்றும் உங்கள் நெருங்கிய நண்பர்களுக்காகவும், இயற்கைக்காகவும், மற்றும் தொலைதூரத்திலிருக்கும் உங்கள் குடும்பத்துக்காகவும் நீங்கள் என்ன செய்யலாம் என நினைத்தீர்கள்? புதிய ஆண்டில் புதியது என்ன செய்வீர்கள்? தனக்காக மட்டும் சிந்திக்காதீர்கள்! எல்லையற்ற தந்தையின் குழந்தைகளே, நீங்களும் எல்லையற்றவர்கள். எனவே அனைவருக்காகவும் நினைப்பீர்கள்தானே, ஏனென்றால் இந்த நேரம் பாப்தாதாவுடன், உங்கள் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. செய்விப்பவரோ தந்தை ஆனால் செய்வதற்கு நிமித்தமானவர்கள் நீங்கள்தானே!

இரண்டு வருடங்களுக்கு முன்பே பாப்தாதா புத்தாண்டில் என்ன புதுமையைக் கொண்டு வர வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். இடையில் கூடுதலாக ஒரு ஆண்டு கிடைத்துள்ளது. எனவே இன்று அமிர்தவேளையில், ஒவ்வொரு குழந்தையும் தன்னுள் எது வரை

புதுமையைக் கொண்டு வந்துள்ளது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்! எண்ணம், சொல், செயலில் என்ன புதுமையைக் கொண்டு வந்துள்ளது மற்றும் சேவை-தொடர்பில் என்ன புதுமையைக் கொண்டு வந்துள்ளது? அடுத்த ஆண்டு மனதிற்கான அட்டவணை (chart) என்ன வைத்துள்ளீர்களோ, அது இப்போது மனதிற்கான அட்டவணையா என்ன? இது போன்று அனைத்து விஷயங்களின் அட்டவணையையும் சோதனை செய்யுங்கள். புதுமை என்றால் விசேஷம்! எல்லா விஷயங்களிலும் விசேஷத்தைக் கொண்டு வந்துள்ளீர்களா? மனதின் விசேஷதா பறக்கும் கலையினுடைய கணக்கின்படி எப்படி உள்ளது? பறக்கும்கலையினரின் விசேஷம் -எல்லா நேரங்களிலும், எல்லா ஆத்மாக்களுக்கும் தானகவே நல்லுணர்வு மற்றும் நல்விருப்பங்களின் தூய அதிர்வுகள் தானும், மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும், அதாவது, மனதிலிருந்து எல்லா நேரமும் எல்லா ஆத்மாக்களுக்கும் ஆசீர்வாதங்கள் தானாகவே எழுந்து கொண்டே இருக்கும். இந்த சேவையில் மனம் எப்போதும் பிஸியாக இருக்கட்டும். எப்படி வார்த்தையின் சேவையில் நீங்கள் சதா பிஸியாக இருப்பதில் அனுபவி ஆகி விட்டீர்கள். ஒருவேளை சேவை கிடைக்கவில்லை என்றால், உங்களை காலியாக உணர்கிறீர்கள். இதுபோல எல்லா நேரங்களிலும், பேச்சோடு கூடவே மனஸா சேவையும் தானாகவே இடம் பெற வேண்டும். வார்த்தையின் சேவைக்கு மிக நல்ல திட்டங்களை வகுக்கிறீர்கள் -இந்த மாநாடு கூட்டுவோம், தேசிய அளவில் செய்வோம், இப்போது சர்வ தேச அளவில் செய்வோம், என வர்ணிக்கீறீர்கள். எனவே, வார்த்தையின் சேவையில் உங்களை பிஸியாக வைத்திருக்க, நீங்கள் ஏற்கனவே ஒன்றன் பின் ஒன்றாக முன்கூட்டியே திட்டமிடுகிறீர்கள், இதில் பிஸியாக இருப்பது வந்து விட்டது.

இந்த சேவையில் பெரும்பான்மையினர் மிகுந்த ஆர்வத்துடன் முன்னேறி வருகின்றனர். பிஸியாக இருக்க வழி வந்து விட்டது ஆனால் மனசேவையிலும் பிஸியாக இருக்க வேண்டும் -இதில் சிறுபான்மையாக உள்ளது, பெரும்பான்மை இல்லை. அப்படி ஒரு விஷயம் முன்னால் வரும்போது, அந்த நேரத்தில் சிறப்பாக மனஸா சேவையின் நினைவு வருகிறது ஆனால் தொடர்ந்து, வார்த்தையின் சேவை எப்படி இயல்பாக ஆகியதோ, அப்படி மனஸா சேவையும்

சேர்ந்தே மற்றும் இயல்பாக மாற வேண்டும். இந்த விசேஷம் இன்னும் அதிகம் தேவை. பேச்சோடு சேர்த்து, மனஸா சேவையைச் செய்தீர்கள் என்றால் பேசுவது குறைவாக இருக்கும். பேசுவதற்கு உபயோகிக்கும் ஆற்றலானது மனஸா சேவையின் உதவியினால் சேமிப்பாகிறது மற்றும் மனதின் சக்தி வாய்ந்த சேவை வெற்றியை அதிகம் அனுபவிக்க வைக்கும். எந்தளவு உங்கள் உடல், மனம், செல்வம் மற்றும் நேரத்தை ஈடுபடுத்துகிறீர்களோ, அதை விட மிகக் குறுகிய காலத்தில் அதிக வெற்றி பெறுவீர்கள்; மற்றும் சில சமயங்களில் தங்களுக்காக கடினமாக உழைக்க வேண்டியவர்கள் -தங்கள் இயல்பை மாற்ற அல்லது குழுவுடன் இணைந்து செயல்பட அல்லது சேவையில் சில சமயங்களில் வெற்றி குறைவாக இருப்பதால் மனமுடைந்து போவது, ஆகிய அனைத்தும் முடிவுக்கு வரும். பெரிய விஷயங்களாக மாறும் சிறிய விஷயங்கள் அனைத்தும், இதுவோ மந்திரஜாலமாகி விட்டது என்று நீங்களே நினைக்கும் வகையில் முடிவடையும்! இப்போது மந்திரஜாலம் பிடித்திருக்கிறது இல்லையா? எனவே இந்த பயிற்சி ஒரு மந்திரஜாலமாகி விடும். எங்கு மந்திரம் போடுகின்றனரோ, அங்கு விரைவாக ஒரு வித்தியாசம் வருகிறது, எனவே அது மந்திரஜாலம் என்று அழைக்கப்படுகிறது.

எனவே புத்தாண்டில் மந்திரஜாலத்தைப் பயன்படுத்துங்கள். இந்த புதுமை அல்லது சிறப்பைச் செய்யுங்கள் மற்றும் ஜாலத்தின் மந்திரம் எது? மனம் மற்றும் வார்த்தை இரண்டையும் ஒன்றுபடுத்துங்கள். இரண்டின் சமநிலை, இரண்டின் சந்திப்பு- இது மாயாஜால மந்திரம். மனதில் எப்பொழுதும் சுப உணர்வுகள் மற்றும் சுப ஆசிர்வாதங்களைக் கொடுக்கும் இயற்கையான பயிற்சி ஆகும்போது, உங்கள் மனம் பிஸியாகி விடும். மனதில் என்ன குழப்பங்கள் நடந்தாலும், அதிலிருந்து தானாகவே ஒதுங்கி விடுவீர்கள். தங்கள் முயற்சியில் எப்போதாவது மனமுடைந்து போவது என்பது நடக்காது. மாயாஜால மந்திரமாகி விடும். குழுவில் சில நேரங்களில் நீங்கள் பயப்படுகிறீர்கள். நாமோ "தந்தையும் நானும்" என்று உறுதியளித்தோம், இந்த மாதிரி குழுவில் இருப்போம் என்று உறுதியளித்தோமா என்ன என்று நினைக்கிறீர்கள். தந்தை மிகவும் நல்லவர், தந்தையுடன் இருப்பது மிகவும் நன்றாக உள்ளது ஆனால் குழுவில் அனைவரது சம்ஸ்காரங்களுடன் இருப்பது மிகவும் கடினமாக உள்ளது; ஆனால் இதுவும் மிக சகஜமாகி விடும்

ஏனென்றால் மனதால், உள்ளத்தால் எல்லா ஆத்மாக்களுக்கும் ஆசீர்வாதங்களும், நல்லுணர்வுகளும், நல்விருப்பங்களும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால், பிறரது சம்ஸ்காரங்கள் அப்படியே அடங்கி விடும். அவர்கள் உங்களை எதிர்கொள்ள மாட்டார்கள் மற்றும் அடங்கிஅடங்கியே முடிந்து விடும். பிறகு சொல்வார்கள் -ஆம், என்னாலும் 40-பேருடன்கூட இருக்க முடியும் என. இந்த ஆண்டு, உள்நாடு வெளிநாட்டுக் குழந்தைகள் இந்த புதுமையை அல்லது சிறப்பை எல்லா நேரமும் தங்களுக்குள் கொண்டு வர வேண்டும். சில நேரங்களில் நினைக்கிறீர்கள், இது வரை 9-லட்சமே ஆகவில்லை, இறுதி வரை 33-கோடி தேவதைகள் பற்றிய விஷயத்தை விட்டு விடுங்கள். 9-லட்சமோ சிறந்த ஆத்மாக்கள் தேவை. முதல் ராஜ்யத்தில் சிறந்த ஆத்மாக்களே தேவை. பிரஜைகளும் நல்லவர்களாக நம்பர்-1 வேண்டும் ஏனென்றால் 1-1-1 ஆரம்பமாகும்! எனவே இயற்கை, மனிதர்கள், வைபவங்கள் எதுவாக இருந்தாலும் -அவர்கள் அனைவருமே நம்பர்-1 ஆக இருப்பார்கள். எனவே இப்போது நம்பர்-1 பிரஜைகள் 9-லட்சம் தயார் செய்து விட்டீர்களா? எத்தனை லட்சம் தயாராக உள்ளது? நீங்கள் தயாரிக்கும் அறிக்கைகளில் அவ்வப்போது வருபவர்களையும் சேர்க்கிறீர்கள், இல்லையா? ஆனால் இப்போது இன்னும் பாதி கூட ஆகவில்லை. நம்பர்-1 பிரஜைகளும் குறைந்தபட்சம் தந்தையின் அன்பை அவசியம் அனுபவம் செய்வார்கள். ஒத்துழைப்புடன் வாழ்வது, இது முதல் அடி ஆனால் இரண்டாவது அடி சகயோகி, சிநேகி ஆவது. சமர்ப்பணம் ஆக வேண்டாம், அது வேறு விஷயம், ஆனால் எப்போதும் தந்தையின் அன்பு வேண்டும். பரிவாரம் அல்லது சகோதர சகோதரிகளின் அன்பு மட்டுமல்ல. நீங்கள் இப்போது இது வரை வந்துள்ளீர்கள் -சேவை செய்பவர்களிடம் அன்பாக இருக்கிறீர்கள் ஆனால் தந்தையின் அன்பை உணருங்கள். அவர்களின் இதயத்திலிருந்து எப்போது பாபா என வருகிறதோ அப்போதுதான் பிரஜை ஆவார்கள். பிரம்மாவின் பிரஜைகள், முதல் விஷ்வ மகாராஜாவினுடையவர் ஆவார்கள். யாருடைய பிரஜையாக ஆகிறார்களோ, அவருடைய அன்போ இப்போதிருந்தே தேவையல்லவா! இப்போது நிறைய சேவை உள்ளது என நினைக்கிறீர்கள்தானே, அது இந்த மனம்-வார்த்தை ஒருங்கிணைந்த சேவையின் மூலம் பல்வேறு சேவையின் பிரபாவத்தைக் காண்பீர்கள். முதலில் செய்த சேவையை விட இப்போது செய்யும் சேவை பல

தரப்பட்டது என்று அழைக்கப்படுகிறது. மேலும் போகப்போக இன்னும் பல்வேறு சேவையின் அனுபவம் செய்வீர்கள். பாப்தாதா குழந்தைகளின் சேவை மூலம் மகிழ்ச்சியாக இருக்கிறார். ஒவ்வொருவரின் சேவையைப் பார்க்கும்போது, ஒவ்வொருவரின் மீதும் மிக்க அன்பு வருகிறது. உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ சேவையின் ஆர்வமோ மிக நன்றாக உள்ளது. எத்தனை கிராமங்களில் நாலா புறமும் சேவை விரிவடைந்து கொண்டிருக்கிறது. கடினமாக உழைக்கிறார்கள் ஆனால் அன்பின் காரணமாக கடினமாக இல்லை. ஓடியாடி தன்னை பிஸியாக வைத்திருக்கும் யுக்தியை நன்றாகச் செய்கிறீர்கள். தந்தையின் அன்பும், தந்தையின் உதவியும் இப்படி நடத்திக் கொண்டிருக்கிறது!

பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார் -எத்தனை சேவை செய்து கொண்டே இருக்கின்றனர். எங்கு வரை, இது போலவே மிக நன்றாக செய்துள்ளனர். இப்போது நீங்கள் பல விதமான சேவைக்காக, எந்த விதியைக் கேட்டீர்களோ, அதன் மூலம் தரமான ஆத்மாக்கள் அருகில் வருவார்கள் மற்றும் அந்த தரமான ஆத்மாக்கள் பலருக்கு நிமித்தமாக ஆவார்கள். ஒன்றிலிருந்து பலராகும்போது பல தரப்பட்ட சேவையாகி விடும் ஆனால் தரமான சேவையில் அவர்களை நிமித்தமாக்குவது அல்லது அவர்களின் புத்தியைத் தொடுவதற்காக, தனது மனது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும், ஏனென்றால் தரமான ஆத்மாக்கள் ஏற்கனவே பேச்சில் புத்திசாலிகளாக இருக்கிறார்கள் ஆனால் அனுபவம் பலவீனமாக இருக்கிறது, முற்றிலும் காலியாகவும் இருக்கிறது.

அதனால் யார் எந்த விஷயத்தில் பலவீனமாக இருக்கிறார்களோ, அவர்களை அந்த பலவீனமே தாக்கலாம் மற்றும் எப்போது அனுபவம் ஆகிறது என்றால் அப்போது இவர்கள் நம்மை விட உயர்ந்தவர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். இல்லையெனில், சில நேரங்களில் கலக்கவும் செய்கிறார்கள் -நீங்களோ மிகவும் நல்லவர்கள், இன்னும் நல்லவர்களாக இருக்கிறீர்கள், கடவுள் உங்களையும் ஆசீர்வதிப்பார் என இப்படிச் சொல்லி முடித்து விடுவார்கள்; ஆனால் இது ஆசீர்வாதத்துடன் நடக்கிறது, பரமாத்ம-ஆசீர்வாதத்தால் இவர்களது வாழ்க்கை நடக்கிறது -இப்போது நீங்கள் இந்த அனுபவத்தை செய்விக்க வேண்டும். இப்போதே கொஞ்சம் கொஞ்சம் பெருமை

இருக்கிறது. அவர்கள் தங்களைப் பெரியவர்களாகக் கருதுவதற்கான காரணம், இவர்களுக்குத் தைரியம் தருவதாக நினைக்கின்றனர் ஆனால் பின்னர் புரிந்து கொள்வார்கள் இவர்களோ நமக்குத் தைரியம் அளிக்கக் கூடியவர்கள் என்பதை. இப்போது அத்தகைய மந்திரஜாலம் செய்யுங்கள். இப்போது பேச்சின் சேவையின் மூலம் பூமியை உருவாக்கியுள்ளீர்கள், நன்றாக உழுது, பூமியை நேர்ப்படுத்தி உள்ளீர்கள். இவ்வளவு முடிவுகள் வெளி வந்துள்ளன. விதையும் விதைக்கப்பட்டுள்ளது ஆனால் இப்போது அந்த விதைக்குப் பிராப்தியின் தண்ணீர் தேவை. எனில் பழங்கள் கிடைப்பதன் அனுபவம் செய்வீர்கள்.

மனதின் தரத்தை அதிகரித்தீர்கள் என்றால் தரமும் அருகில் வரும். இதில் இரட்டை சேவை உள்ளது. சுயம் மற்றும் மற்றவர்களுக்கானது. உங்களுக்காக தனியாக முயற்சிகள் எதுவும் செய்ய வேண்டியதில்லை. பலன் கிடைத்து விட்டது, அத்தகைய ஸ்திதி அனுபவம் ஆகும். எதிர்கால பலனோ உள்ளது -உலகின் ராஜ்யம் ஆனால் இந்த நேரத்தின் பலன் -எப்போதும் எல்லா பிராப்திகளாலும் நிறைந்திருப்பது மற்றும் சம்பன்னமாகுவது! இந்த நேரத்தின் பலன் எல்லாவற்றையும் விட மிக சிரேஷ்டமானது. எதிர்காலத்திற்கோ உத்தரவாதம் உள்ளது. இறைவனின் உத்தரவாதம் ஒருபோதும் மாறாது. எனவே, இப்படி புத்தாண்டைக் கொண்டாடுவீர்களா? யார் முதலில் சேவையைத் தொடங்குவார்கள்? மதுபன்! ஏனெனில் மதுபன்வாசிகளுக்கு சொல்லப்படுகிறது -அவர்கள் அமைதியாகவும் இருப்பவர்கள், இதயத்திலும் இருப்பவர்கள், எல்லையற்ற களஞ்சியத்திலிருந்து சதா பிரம்மாபோஜனம் அளிக்கக்கூடியவர்கள் என! இந்த நேரத்தில், நீங்கள் அனைவரும் மதுபனில் அமர்ந்திருக்கிறீர்கள், மதுபன் வாசிகளாவீர்கள் மற்றும் யாராவது உங்களிடம் உங்கள் நிரந்தர முகவரி என்ன என்று கேட்டால்? மதுபன் என்று தானே சொல்வீர்கள்! அல்லது நீங்கள் வசிக்குமிடம் நிரந்தர முகவரியா? பிரம்மகுமார்/குமாரி என்றால் நிரந்தர முகவரி ஒன்றுதான், மற்றபடி சேவைக்காக அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். அப்படி இல்லை நாங்கள் வெளிநாட்டவர்கள் என்பது, கிடையாது! நாங்கள் பிராமணர்கள், தந்தை அங்கு சேவைக்காக அனுப்பியுள்ளார். இந்த புத்தியின் தொடுதலின் மூலம் உங்களை அங்கு அனுப்பியுள்ளார். தந்தையின் சங்கல்பத்தின் மூலம் நீங்கள் அங்கு சென்றுள்ளீர்கள். பாரதத்தில் ராஜ்யம் செய்வீர்களா அல்லது

லண்டனிலா? நாமோ வெளிநாட்டில் பிறந்தோம் எனில் அந்நாட்டைச் சேர்ந்தவர்கள்தானே என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். பிரம்மா மூலம் பிறந்துள்ளீர்கள், வெளிநாட்டில் அல்ல. இல்லையெனில், வெளிநாட்டு-குமார், வெளிநாட்டு-குமாரி என்றழைக்கலாமா! பிரம்மாகுமார்/ பிரம்மாகுமாரிதானே! எப்படி இந்தியாவில் சிலர் உ.பி.'யைச் சேர்ந்தவர்கள், சிலர் டெல்லியைச் சேர்ந்தவர்கள். அது போல நீங்களும் சேவைக்காக வெளிநாட்டில் இருக்கிறீர்கள் ஆனால் வெளிநாட்டவர் அல்ல. இந்த போதை உள்ளதா? சேவை ஸ்தானம் அது, பிறந்த இடம் மதுபன். அந்த கணக்குவழக்கு முடிந்ததால்தான், பிராமணர் ஆகி இருக்கிறீர்கள். கணக்கு முடிந்ததும், கணக்கு புத்தகமும் எரிந்து விட்டது. அரசாங்கத்திலிருந்து விடுவிப்பதற்காகவும்கூட, அவர்கள் புத்தகத்தை தானே எரித்து விடுகிறார்கள், இல்லையா? எனவே நீங்கள் பழைய கணக்கை முடித்து விட்டீர்கள், இல்லையா? புத்திசாலிகள் சிலர் தங்கள் கணக்கை முழுவதுமாக முடித்து விடுகிறார்கள் மற்றும் புத்தியற்ற சிலர் எங்காவது கடனில் மாட்டிக் கொள்கிறார்கள். புத்திசாலிகள் ஒருபோதும் சிக்கிக் கொள்வதில்லை. எனவே, கணக்கு புத்தகம் முடிந்து விட்டது என்றால் எவ்வித கடனும் இல்லை, எல்லாக் கணக்குகளும் சுத்தமாக உள்ளன. அனைத்தையும் விட நல்ல விதமான மரபுகளும் பழக்கவழக்கங்களும் பிராமணர்களுடையதுதான்! நல்லது.

நாலா புறமும் உள்ள எல்லா சேவையில் உடன் இருப்பவர்களுக்கு, எல்லா தைரியசாலி மற்றும் தந்தையின் உதவிக்குத் தகுதியான ஆத்மாக்களுக்கு, சதா மனம் சொல் மூலம் இரட்டை சேவை சேர்ந்தே செய்யக்கூடிய, பறக்கும் கலையின் சேவாதாரிகளுக்கு, சதா தந்தைக்குச் சமமான எல்லா ஆத்மாக்களுக்கும் ஆசீர்வாதங்கள் அளிக்கக்கூடிய மாஸ்டர் சத்குரு குழந்தைகளுக்கு, சதா தன்னை எல்லா நேரமும் புதுமை அல்லது விசேஷத்தைக் கொண்டு வரக் கூடிய சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**01.01.1990** அன்று அமிர்தவேளையில், **(AM) 1¾-**மணிக்கு பாப்தாதா புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை அளித்தார்**!** நாலா புறமும் உள்ள எல்லா புதிய படைப்பு செய்யக்கூடிய சேவாதாரி குழந்தைகளுக்கு,

புதிய வாழ்க்கையில் எல்லா நேரமும் புதியதைக் கொண்டு வரக்கூடிய, எல்லா நேரமும் தனது அதிர்வலைகள் மூலம் எல்லோருக்கும் புதிய வாழ்வு தரக்கூடிய, அத்தகைய புதிய வாழ்க்கை, புதிய யுகம், புதிய ராஜாங்கத்தை நடத்தக்கூடிய, சதா புதியதை அனுபவம் செய்யக்கூடிய, அத்தகைய குழந்தைகளுக்குப் புத்தாண்டிற்கான அழியாத வாழ்த்துக்கள்! சதா சேவை மற்றும் தந்தை -ஒரு கண்ணில் சேவை, மறு கண்ணில் தந்தை -இந்த விதி மூலம் சேவையில் புதுமையைக் கொண்டு வாருங்கள். புதிய நாள், புதிய இரவு மற்றும் புதியதிலும் புதிய சேவை வெற்றியளித்துக் கொண்டேயிருக்கும். வெற்றிக்கான வாழ்த்துக்கள்! நல்லது! எல்லாக் குழந்தைகளுக்கும் 'கோல்டன் மார்னிங்'! (Golden Morning).

**இரட்டை வெளிநாட்டு சகோதர-சகோதரிகளுடன் (சாரம்):**

விசேஷ ஆத்மாக்களின் விசேஷம் அல்லது சேவையில் ஒவ்வொரு செயலிலும் விசேஷத்தன்மை அனுபவம் ஆகும். அவரது உள்ளுணர்வு விசேஷமாக இருக்கும், சாதாரணமாக இருக்காது. பார்வையிலும் விசேஷத்தன்மை இருப்பதால் அலௌகீகத்தன்மை அனுபவம் ஆகும்.

பிரம்மாதந்தையின் ஒவ்வொரு செயலிலும் ஒரு தனித்தன்மை இருந்தது அது அனைவரையும் கவர்ந்தது.

ஸ்தூல கண்கள் மூலம் பார்ப்பதைவிட அனுபவத்தின் கண் மூலம் பார்ப்பது மிக சிரேஷ்டமானது.

பாப்தாதா சதா எல்லாக் குழந்தைகளையும் விசேஷ ஆத்மா என்ற பார்வையில்தான் பார்க்கின்றார்.

தனது விசேஷங்கள் எல்லாம் தந்தையால் கொடுக்கப்பட்டவை ஆதலால் அதை சேவையில் ஈடுபடுத்துங்கள், அபிமானத்தில் வராதீர்கள்! நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்